www.padippakam.com

# காற்றைக் கிழித்த கலைவிழாப் பறை முழக்கம்



**நா**டி நரம்புகளின் இசை அதிர்வை திடீர் பேரெழுச்சியாக மாற்றி மேள முழக்கம் தொடர்ச்சியாக ஒலித்தது.

மதுரை மாநகர் திகைப்புற 13.3.99 அன்று நடந்த தலித் கலைவிழா பேரோசை, நாலாதிசைகளிலும் காற்றில் கலந்தது. அந்த இசைக் காற்று தந்த செய்தி இதோ:

திருவண்ணாமலை ரகுபதி குழுவினரின் பெரிமேள முழக்கத்தோடு நிகழ்ச்சி துவங்கியது. அடக்கப்பட்ட மக்கள் கலைகள் எழுச்சிப் பெற்றால், இப்படித்தான் இருக்குமோ! என வியக்கும் வண்ணம் விண்ணை பிளந்தது அவர்களின் நிகழ்ச்சி.

கல்லூரி முதல்வர் அருட்திரு. அறிவர் தியான்சந்த்கார் அவர்கள் வந்திருந்தவர்களை வரவேற்று தலைமையுரை நிகழ்த்தினார்.

நிலக்கோட்டை அருகேயுள்ள மைக்கேல் பாளையம் ''சவேரியார் குழு'', அலங்கா நல்லூர் ''ஆறுமுகம் குழு'', வாடிப்பட்டி கலைக்குழுவினர் நிகழ்த்திய தப்பாட்டம் இருளை கிழிக்கும் இடி மின்னலாக, மேடையை கதிகலங்கச் செய்தது.

அருப்புக்கோட்டை அருகேயுள்ள கொப்புசித்தம்பட்டி தாவீது குழுவினர் ''ஒயிலாட்டத்தை'' எழிலாக நடத்தினர்.

புலியாட்டத்தைக் கீழமுடி மண்ணார் கோட்டை இளைஞர் குழுவினர் விறுவிறுப்பாக நடத்தி அனைவரின் பாராட்டுதலையும் பெற்றனர்.

கல்வராயன் மலைப்பகுதியிலிருந்து வந்த ஆதிவாசிகள் நிகழ்த்திய ''பேயாட்டம்'' ஒரு தெருக் கூத்தை நினைவூட்டுவதாக அமைந்திருந்தது. நகர்ப்புறத்தை முதன்முதலாக இப்பொழுதுதான் அவர்கள் பார்ப்பதாக அறிவிப்பு செய்தபோது பெரும் வியப்பு ஏற்பட்டது. ஆலங்குளம் கரிசல் குழுவினர் நடத்திய ''பிடியில்'' என்ற நாடகம், கடன் தொல்லையால் சிக்கி தவிக்கும் ஒரு ஏழை தலித் குடும்பத்தை சித்தரித்தது. பாத்திமாபுரம் ஞானசௌந்திரியம்மாள் குழுவினர் கும்மியாட்டத்தைச் சிறப்பாக நிகழ்த்தினர்.

இக்கலைவிழாவில் ஒட்டுமொத்த பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்ற நிகழ்ச்சியாக தஞ்சாவூர் தேன்மொழி குழுவினரின் கரகாட்டம் அமைந்தது.

நீலகிரி மாவட்டம் ''கோத்தர்'' இன பழங்குடி மக்களின் பாரம்பரிய நடன நிகழ்ச்சியை நடத்தினர். அவர்களது பாரம்பரிய உடையும், பாரம்பரிய இசைக் கருவிகளும் மதுரை வாழ் மக்களுக்கு மட்டுமின்றி, பார்வையாளராக கலந்துகொண்ட அனைவருக்குமே புதியதாகவும், வித்தியாசமாகவும், வியக்க வைத்த நிகழ்ச்சியாக அமைந்தது.

பாய் என்ற மராத்திய மொழி (BAI) குறும்படம் திரையிடப்பட்டது. ஒரு குடிகார கணவனால் துன்பப்படும் தாயையும், மகளையும் பற்றிய கதை.

இக்கலைவிழாவில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு இடையேயும் தஞ்சாவூர் சின்னப்பொண்ணு, தலித் சுப்பையா, திருமயம் ஆறுமுகம், முத்து, பூதப்பாண்டி நல்லதம்பி, அருள்ஜோசப், காத்தவராயன் ஆகியோர் தலித் எழுச்சி பாடல்களை உணர்ச்சி பூர்வமாகவும், இனிமையாகவும் பாடினர்.

திரைப்படத்துறையைச் சார்ந்த ஒளி ஓவியர் தங்கர்பச்சான் பேசும் போது, ''தான் கிராமத்தில் இருந்து வந்தவன் என்றும் தனது தந்தையர் ஒரு கிராமிய கலைஞன் என்றும், கிராமமே நமது ஆதாரமென்றும் கூறினார். சினிமாவில் நம்மைப்போன்ற கருப்பான மக்கள் திரையில் தோன்றுவதில்லை. ''வெள்ளைத் தோலுக்கே மவுசு'' அதிக மென்று கூறினார்.

கோவை எழுத்தாளர் பாமரன் சரித்திர சான்றுகள் மூலம் பார்க்கும்போது ஒடுக்கப்பட்ட மக்களின் கலைகள் மதிக்கப்பட வேண்டியவையே என்று ஆதாரபூர்வமாக பேசினார். பழங்காலத்தில் ''குடமுழா'' என்ற பெயரில் தலித் மக்களின் இசை கருவியாக இருந்ததே, இன்று ''பஞ்சமுக'' வாத்தியமாக பார்ப்பனர்களின் வசம் இருக்கிறது என்றார். ''பறையாட்டத்தை'' ''தப்பாட்டம்'' என ஏன் அழைக்க வேண்டும்? அதை சரியாட்டம் என அழைக்க வேண்டுமென சுட்டிக்காட்டினார்.


அவனியாபுரம் கரகாட்ட குழுவினரின் நிகழ்ச்சியோடு விழா நிறைவுற்றது.

கலைவிழாவில் சாதிய வன்முறைகளை ஓவியப் பதிவு செய்த ஓவியக் கண்காட்சியும் தலித் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் ஒலிநாடாவும், இசைக்குறும் தகடும் (CD) வெளியிடப்பட்டன.

**- நமது நிருபர்**



படிப்பகம்



# ஈழத்தமிழர்கள் இந்து மதவாதிகளல்ல

ஈழத்துக் கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்களுடன் ஒரு நேர்காணல்

■ புலம் பெயர்ந்த தமிழர்களின் இலக்கிய வகை அறிமுகத்திற்குப் பிறகு ஈழத்து இலக்கியப் போக்கு எப்படி உள்ளது?

இன்றைக்கு தேசிய எழுச்சி தொடர்பாக பல்வேறு பார்வைகள் இலக்கியத்தில் தலை காட்டுகிறது. மற்றது நவீனத்துவத்தைக் கடந்து - இதை நான் பின் நவீனத்துவம் என்று குறிப்பிடவில்லை - நவீனத்துவம் ஏற்க மறுத்த எங்களது வேர்களில் இருந்து மறுபடியும் வீரியத்தை பெறுகிற போக்கு வளர்ந்து வருகிறது. மலையக மக்களி டத்தும் நிறைய மாறுதல்கள் நடைபெற்று வருகிறது.

கடந்த ஐம்பது வருடத்தை எடுத்தோ மெனில் ஈழத்து இலக்கியப் போக்கு என்பது யாழ்ப்பாணத்து வெள்ளாள ஆண் ஆதிக்க இலக்கியப் போக்காகவே இருந்தி ருக்கிறது. விமர்சனம் என்பது அது கைலாச பதியாக இருந்தாலென்ன சிவத்தம்பியாக இருந்தாலென்ன அது யாழ்ப்பாணத்து விமர்சனப் போக்காகத்தான் இருந் தது.

ஆனால் போராட்டங் களுக்குப் பிறகு இன் றைக்கு தமிழ் பேசுகிற முஸ்லீம்களுக்கு மத்தியில், தேயிலைத் தோட்டத்தை மையமாகக் கொண்ட மலையகத் தமிழ் மக்கள் மத்தியில், யாழ்ப்பாணத்துக்கு வெளியில் உள்ள மட்டக்களப்பு, வன்னி, அம்பாறை போன்ற கிழக்கு மாகாண தமிழர் முஸ்லிம்கள் மத்தியில் ஆண் பெண்களிடத்து நிறைய விழிப்புணர்ச்சியும் கலாச்சார எழுச்சியையும் ஏற்படுத்தி யிருக்கிறது. உண்மையான ஈழத்து இலக்கியம் இப்போது தான் பரிணமிக்க ஆரம்பித்து இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இதன் அன்னிய கலாச்சார புலம்சார்ந்த நீட்சியாகவும் புதிய வளர்ச்சியாகவுமே புலம்பெயர்ந்த தமிழர்களின் இலக்கிய வளர்ச்சியையும் நான் பார்க்கிறேன்.

■ தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்குமான ஒற்றுமை முயற்சிகள் எப்படி இருக்கிறது?

இதில் முன்னணிப் பாத்திரம் வகிப்பது கலைஞர்கள் தான். நீண்ட பட்டியலாகக் கூடிய ஈழத்து தமிழ்முஸ்லிம் எழுத்தாளர்களின் குரல்கள் தமிழர்களுக்கும் முஸ்லீம் களுக்குமிடையான ஐக்கியத்திற்கு ஆரம்பக் குரல்களாக ஒலித்தது. இன்றைக்கு அரசியல் தலைவர்களது குரல் களையும் நாங்கள் கேட்கிறோம்.

நதிகள் பள்ளங்களில் விழுகிறதுண்டு. ஆனால் நதிகள் பள்ளங்களுக்குள் மூடப்பட்டு போகிறதில்லை. எங்க ளுடைய வரலாற்று நதியும் தடைகளைத் தாண்டும் தமிழர்கள் முஸ்லீம்களுக்கிடையேயான உறவும் ஒரு ஆயிரம் வருடங்களாக இணைந்து ஓடிய பெருநதி ஆரோக்கியமான திசையை நோக்கி அது மீண்டும் நகரத் தொடங்கி இருக்கிறது. இதை எந்தவித சந்தேகமும் இல்லாமல் கூறமுடியும்.

www.padippakam.com

ஈழம், தமிழர்களுடைய முஸ்லீம்களுடைய தாய்மண். ஈழத்துடைய வெற்றியும் வாழ்வும் வளமும் தமிழர்களுடைய முஸ்லீம்களுடைய வெற்றியாகவும் வாழ்வாகவும் வளமாகவும் என்றைக்கும் இருக்கும். இதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

■ இங்கிருக்கின்ற இந்து அமைப்புகள் புலிகளை இந்துக்களாகவே பார்க்கிறார்கள் அதைப்பற்றி...

விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லீம்களுக்கும் ஏற்பட்ட பிரச்சனையை முஸ்லீம்கள்கூட சமயப் பிரச்சனையாகப் பார்க்கவில்லை. இரு தமிழ் பேசுகிற இனங்களுக்கிடையேயான பிரச்சனையாகத்தான் அவர்களும் அதைப் பார்க்கிறார்கள். இந்திய அரசியலைப் பொறுத்த அளவில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பரந்துபட்ட ஆதரவைத் தேடுபவர்களாகத்தான் இருக்கிறோம்.

இலங்கை அரசின் இன ஒடுக்குதலில் ஒரு மதவாதத் தன்மை இருக்கிறது. இந்த ஒடுக்குமுறையில் சிங்கள பௌத்த பிக்குகள் முன்னணியில் இருக்கிறார்கள் என்று தெரியும். மூவாயிரம் நாலாயிரம் இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டும், இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டும் இருப்பது உங்களுக்குத் தெரியும். இது தொடர்பாக இந்தியாவில் உள்ள இந்து அமைப்புகள் கோபப்பட்டால் அது நியாயமில்லை என்று நான் கூறமாட்டேன்.

ஏனென்றால் இது தமிழர்களுக்கெதிரான போராட்டமாக மட்டுமில்லாமல் தமிழர்களை இந்துக்களாக பார்த்து போராடுகிற ஒரு தன்மையும் இருப்பதை நான் நன்குணர்வேன்.

ஆனாலும் ஒருகாலத்திலும் தமிழர்கள் ஒரு மதவாதத்தின் அடிப்படையில் முடிவெடுக்கமாட்டார்கள் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

இந்தியாவில் உள்ள மதப் போராட்டம் ஈழத் தமிழர்களிடத்தில் இல்லை. ஈழத்தில் பிராமணர்கள் கோயில் பூசாரிகள் மட்டும்தான். பெரிய அரசியல் சக்தியாக எல்லாம் இல்லை. சாதாரணமாக ஈழப்போராட்ட அரசியலின் சகல பக்கங்களிலும் அவர்களும் பங்குகொண்டிருக்கிறார்கள். இங்கேயுள்ள பிராமனர்களது பிற்போக்கு அணியும் திராவிட அணியும் இங்கே உள்ளதுபோல் ஈழத்திலும் நிலைமை இருப்பதாக நினைத்து சில தவறுகளைச் செய்கிறார்கள்.

இங்குள்ள சோ, ஞானகூத்தன் போன்றவர்கள் ஈழத்திலும் பிராமண எதிர்ப்பு இருப்பதாக நினைத்துக்கொண்டு எங்களுக்கு எதிரான நிலைப்பாடு எடுத்திருக்கிறார்கள்.

ஞானக்கூத்தன் தலித்துகளை சேரி நாய்களாகவும் ஈழத்தவர்களைத் திருடர்களாக ஒரு கவிதையில் காட்டுகிறார். தமிழ்நாட்டில் இருக்கிற பிராமண எதிர்ப்பு அரசியல் போக்கு எங்களிடத்திலும் இருப்பதாக அவர்கள் கருதுகின்றவை தவறான எண்ணத்தில் இருந்து வந்ததுதான்.

இதே போல சில தீவிர திராவிட அணியினரும் இங்கேயுள்ள அரசியலை எங்கள் மேல் ஏற்றிப் பார்க்கிறார்கள். இங்கேயுள்ள முற்போக்குக் கருத்துள்ள பிராமணர்கள் எங்களுக்கு ஆதரவாக எழுதுகிறபோது அதை ஈழப் போராட்டத்திற்கு ஆதரவாக பயன்படுத்திக் கொள்ளும் நிலையில் ஈழத் தமிழர்கள் இருக்கிறார்கள். இதை தயவுசெய்து எல்லா அணியினரும் புரிந்து கொள்வது மிக முக்கியம்.

இங்கே உள்ள இந்து முஸ்லிம் போராட்டங்களோ அல்லது இங்குள்ள பல போராட்டங்களோ எங்கள் மத்தியில் இல்லை. இதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

■ இந்து மகா சமுத்திரத்தில் சேது சமுத்திர திட்டம் வருவதால் நிகழும் மாற்றம் குறித்து உங்களின் கருத்து...

இது வரலாற்றை மாற்றப்போகிற திட்டமாகும். நான் முக்கியமாகக் கருதுவது, இங்குள்ள தென்மாவட்டங்களில் இருக்கின்ற தலித்துகள் நிலத்திலிருந்து விடுபடாமல் இருப்பதற்கான காரணம், தமிழகத்தின் அபிவிருத்திகள் எந்தவிதத்திலும் தென்மாவட்டத்தில் பரவவில்லை என்பதேயாகும். தலித்துகள் மனிதர்களாக மதிக்கப்படுகிற நிமிர்ந்திருக்கிற கிளர்ச்சிப் போக்குகள் அதிகமாக இருக்கிற கிராமங்களைப் பார்த்தோமென்றால் அங்குள்ள தலித்துகள் அன்னிய தேசத்தில் மற்றும் அயல் மாவட்டங்களில் பெற்ற வேலைவாய்ப்புகள் மூலம் நிலத்தில் இருந்து விடுதலை பெற்றிருப்பது ஒரு காரணமாக இருப்பதை நாம் பார்க்கலாம். கொடியன்குளம் இதற்கு நல்லுதாரணம்.

நான் கோட்பாட்டு ரீதியாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நிலத்திலிருந்து விடுபட்டு தொழிலாளி வர்க்கமாக வாழக்கூடிய முன்னேறிய சாதிகள் மத்தியில் மட்டும்தான் தங்களுடைய சாதிகளின் ஆதிக்கப் போக்குக்கு எதிரான ஒரு அமைப்பு ரீதியான நிலைப்பாடு எடுக்கக்கூடிய போக்குகள் வளர்ந்திருப்பதாக நான் கருதுகிறேன்.

இந்த நிலையில் சேது சமுத்திர திட்டம் தலித்துக்களையும் முன்னேறிய சாதிகளைச் சேர்ந்த நிலமற்ற ஏழைகளையும் நிலத்தில் இருந்து விடுவிப்பதில் ஒரு கணிசமான பங்களிப்பை செய்யும். இது தென் மாவட்டங்களை அசைக்கப் போகிறதென்பது உண்மை.

■ ஈழப் போராட்டத்தில் இது எந்த வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும்?

இந்தியாவின் நலன்களை இந்தியா எடுத்துக் கொள்ளும்போது, சிங்கள ஆதிக்க அரசு மேலதிகமான, பொருளாதார பலத்தை இழக்கிறபோது தமிழர்களுடனும் முஸ்லீம்களுடனும் மலையகத் தமிழர்களுடனும் இறங்கி வரவேண்டிய நிலை வரும் என்று நினைக்கிறேன்.

■ ஈழப் போராட்டத்தின் வளர்ச்சி எப்படி உள்ளது?

இலங்கை வரலாற்றில் சிங்கள அரசு சக்திகள், தமிழர்களின் அரசு சக்திகள், இந்திய அரசு (தமிழகம் உட்பட) சக்திகள் ஆகியவை தீர்மானிக்கின்ற சக்திகளாக, இரண்டாயிரம் வருடங்களாக இருந்திருக்கிறது. எதிர்வரும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த நிலை பெரிதாக மாறப்போவதில்லை.

சிங்கள ஆட்சியாளர்களை பொறுத்த அளவில், தமிழர்களுக்கு தற்காலிகமாக இந்தியாவுடன் முரண்பாடுகள் இருந்தாலும் என்றைக்கும் இந்தியாவோடுதான் போவார்கள் என்ற கருத்தை வைத்திருக்கிறார்கள். அதனால்தான் சிங்கள ஆளும் வர்க்கத்தினர் சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் மிகவும் நேசமாக இருக்கிறார்கள். இந்தப் போராட்



படிப்பகம்

www.padippakam.com

டத்தில் ஆரம்பத்தில் இருந்தே பெரிய அளவில் சிங்கள அரசுக்கு ஆயுத உதவி செய்தது பாகிஸ்தானும் சீனாவும் தான்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்குமிடையிலான முரண்பாடுகளை சிங்கள அரசு தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறதே தவிர சிங்கள அரசு இந்தியாவை நண்பனாக ஒருபோதும் பார்க்கவில்லை. அப்படி இருந்திருந்தால் தமிழக மீனவர்களை சிங்கள அரசு ஒருபோதும் நாய்களைப்போலச் சுட்டுத் தள்ளாது. தமிழக மீனவர்களை அச்சுறுத்தி எதிர்காலத்தில் அவர்களை தங்களது கையாட்களாக மாற்றுகிற நோக்கம் சிங்கள அரசுக்கு இருப்பதாக நம்மில் சிலருக்கு சந்தேகம் உள்ளது.

இன்னொரு பாரதூரமான விடயம். இராமேஸ்வரம் மீனவர்கள் இந்தியர்களா? அவர்கள் இந்தியர்களெனில் அவர்களைப் பாதுகாப்பதற்கு இந்தியப் படைகள் எங்கே? அவர்கள் இந்தியர்கள் இல்லை எனில் வேறெந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று என்னைச் சந்தித்த சில ஈழத்து மீனவர்கள் கேட்டார்கள்.

இதற்கு இந்திய அரசு என்றைக்கிருந்தாலும் பதில் கூறியே ஆகவேண்டும். இந்த விடயம் புறக்கணிக்கக் கூடிய விடயமில்லை. ஏனென்றால் கடல்சார்ந்துதான் இந்தியாவை சீர்குலைக்க முடியும் என்று எதிரிகள் கருதிக்கொண்டிருக்கும் வேளையில் கடல்சார்ந்த மக்கள் பாதுகாப்பு தொடர்பாக மிகவும் கேந்திர முக்கியமானவர்களாக ஆகிறார்கள்.

சிங்கள அரசு வல்வெட்டித்துறையில் மீனவர்களைக் தொடர்ந்து கொடுமைப் படுத்திய நிகழ்வு ஈழ தமிழர்களது போராட்ட வரலாற்றில் முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தியது. தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகைகள் இராமேஸ்வரம் மீனவர்களைக் கொல்வதை இருட்டடிப்புச் செய்கின்றன என்று ஈழத்தில் கூறுகிறார்கள். இது ஏனென்று எங்களுக்கு விளங்கவில்லை.

■ இல்லையே. பத்திரிகைகள் இச்செய்திகளை போடுகின்றனவே அதோடு எதிர்க்கவும் செய்கின்றனவே. இந்திய அரசுதான் இதைக் கண்டு கொள்ளவில்லையே தவிர இதழ்கள் அப்படிச் செய்யவில்லையே...

இல்லை. பெயர் சொல்ல விரும்பவில்லை, இரண்டு மூன்று பத்திரிகைகளைச் சேர்ந்தவர்கள் கொழும்புக்கு வந்திருந்தபோது மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதை நியாயப்படுத்திப் பேசினதாகச் சொன்னார்கள்.

கடல்சார்ந்த இந்த மீனவ ஜாதியினர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். இவர்கள் பிற்காலத்தில் மிக முக்கியமான சக்திகளாக வரக்கூடும். இந்தியா இவர்களைக் காப்பாற்றத் தவறுமேயானால் இவர்கள் எதிரிகளின் கைகளில் சிக்கிக்கொள்வார்கள். இந்த விடயத்தை, இந்திய அரசியல் மற்றும் சமூக விஞ்ஞானிகள் ஏன் கண்டு கொள்ளவில்லை என்று எனக்கு புரியவில்லை.

■ உங்களின் பார்வையில் இங்குள்ள சாதிய மற்றும் பிற போராட்டங்கள் குறித்து கருத்து என்ன?

எனது 16 வயதில் யாழ்ப்பாணத்தை உலுக்கிய சாதிய கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்களால் ஈர்க்கப்பட்டு எனது வெள்ளாள நிலஉடைமை வீட்டிலிருந்து ஓடிப் போனவன்தான் நான். டானியல் அண்ணா இக்பால் டோமினிக் ஜீவா, சண்முகதாசன், காத்திகேசு மாஸ்டர் எஸ்ரி என் நாகரட்ணம். எம்சி சுப்பிரமணியம் என்கிற சாதிய போராட்டத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த தோழர்களால் ஊட்டி வளர்க்கப்பட்டவன் நான். சாதிய ஒடுக்குதல்களுக்கு எதிரான போராட்டங்கள் காலத்தின் தேவை. ஒருவன் பள்ளனாகவோ தேவனாகவோ பறையனாகவோ வன்னியனாகவோ பிறந்தது அவனது தவறல்ல. அவன் மரபுசார்ந்த சாதி ஆதிக்க மனோபாவத்தை நிராகரிக்க மறுத்தால் மட்டுமே சாதி ஒடுக்குதலின் காலாகவும் கருவியாகமம் மாறினால் மட்டுமே தவறு செய்கிறான். எனவே இதை சாதிகளுக்கிடையிலான மோதலாக ஆக்குவது பாதகமானது. சாதி ஆதிக்க சக்திகளுக்கு எதிரான தலித்துகளையும் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த முற்போக்காளர்களையும் இணைக்கிற ஒரு போராட்டமாக இதனை முன் எடுத்து செல்லவேண்டும்.

பிராமணிய ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டம் இடஒதுக்கீடு போன்ற கடந்த காலத்தின் பெரியார் சேனையின் போராட்டம் பிராமணர் அல்லாதார் மத்தியில் எழுச்சிக்கும் மேம்பாட்டுக்கும் வழிவகுத்துள்ளது. இதனால் பிராமணர் மத்தியிலுள்ள உள்வாரியான ஆதிக்கங்களுக்கெதிராகவும் சாதகமாகவும் போர்க் கொடிகள் உயர்கின்றன. இன்றைய நிலைமையில் பிராமணரல்லாத சகலரையும் முஸ்லிம்களையும் பிராமணர் அல்லாதார் மத்தியிலுள்ள ஆதிக்க சமூக பொருளாதார கலாச்சார சக்திகளை தகர்க்கும் வகையில் அணிதிரட்டும் வரலாற்று பணி முன்நிலைப்பட்டுள்ளது. இதற்கு தக்கதாக பெரியாரியத்தை வளர்த்தெடுத்து இயக்கப் படுத்தும் முயற்சி இன்னமும் வெற்றி பெறவில்லை. பலர் பிராமணரல்லாதவர்களின் மத்தியிலான சாதிய முரண்பாடுகளால் தமிழகம் எரிகிறபோது பழைய பிடில்களையே வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலைமையை பெரியாரியவாதிகள் மாற்றிடவேண்டும்.

■ இங்கு பகை முரண்களே தலைதூக்கி இருக்கின்றனவே...


இது ஒரு புதிய வரலாற்றின் ஆரம்பம் மட்டுமே... ஒரு சுவாரஸ்சியமான விஷயம் மோதல்களின் மத்தியிலும் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களாகட்டும் திரு. திருமாவளவன் அவர்கள் ஆகட்டும் டாக்டர் ராமதாஸ் அவர்களாகட்டும் டாக்டர் சேதுராமன் என்பவர்களிடம் தங்கள் தங்கள் சாதிகளின் மத்தியிலுள்ள சமூக பொருளாதார கலா ஆதிக்க போக்குகளுக்கெதிராகவும் போராடும்படி கோரிக்கை விட ஆசைப்படுகிறேன். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் திரு. திருமாவளவன் அவர்களும் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த முற்போக்கறிவையும் ஏழைகளையும் தங்களது போராட்டத்தில் இணைத்துக் கொள்வதன்மூலம் புதிய தமிழக வரலாற்றின் நாயகர்களாக மேம்பட வேண்டும் என கோருகிறேன். இத்தகைய ஒரு புதிய திசைக்கு இவர்களை இட்டுவருகிற புதுயுகத்தின் படையாக பெரியாரிஸ்டுகளும் மார்க்சியவாதிகளும் இணைந்து தங்களை மேம்படுத்திக் கொள்வார்கள் என்பது மட்டுமே புதிய நூற்றாண்டின் வாசலில் நிற்கிற தமிழகத்திற்கிருக்கிற ஒரே நம்பிக்கையாகும்.

சந்திப்பு : யாழ், அ.பெரியார்
படங்கள் : வெங்கடேசன்



படிப்பகம்

www.padippakam.com



இட்லரின் மண்டை ஓடு

# இட்லரின் இறுதி நாள்

இட்லரின் மண்டையோடு நாஜிகளின் வீழ்ச்சியை அறிவுறுத்தும் வரலாற்றுச் சின்னமாக இருக்கும் அதே நேரத்தில், புதிய நாஜிகள் என்ற அபாயத்தை அறிவிக்கும் அபாய அறிவிப்பாகவும் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

'நான் கடைசித்தடவையாக அவனைப் பார்த்தபோது அவன் ஒரு சவத்தைப் போல வெளிறிப் போய் இருந்தான். உடைந்து போய், கூன் முதுகுடன் அவன் தள்ளாடித் தள்ளாடி நடந்தான். வெறுமையான பார்வையால் என்னை வெறித்தான். அப்போதிருந்த நிலைமையில் அந்த மனிதன் தற்கொலை செய்து கொண்டுவிடுவான் என்றே நான் யூகித்தேன். அத்தனை பேரும் அந்தத் தோட்டாவின் சத்தத்துக்காகக் காத்திருந்தோம். கடைசியில் அந்தச் சத்தம் கேட்டது. ஒற்றைத் தோட்டா வெடித்த சத்தம் அந்தப் பிராந்தியத்தின் மௌனத்தைக் கலைத்தது. உடனே பரபரப்புடன் ஓடினேன். அந்தச் சின்னஞ்சிறு நிலவறையில் அந்த மனிதன் தன் மேஜையின் மேல் குப்புறத் தலை கவிழ்ந்து கிடந்தான். பக்கத்து சோபாவில் அவனது காதலி கிடந்தாள். அந்த நொடியோடு ஒரு மாபெரும் துயரம் முற்றுப்பெற்றது'.

அந்த நபர்தான் உலகை நடுங்க வைத்த அடால்ஃப் ஹிட்லர். உடனிருந்த பெண்மணி அவனது காதலியான ஈவாப்ரான்.

ஹிட்லரின் அலுவலகத்தில் தகவல் துறை ஊழியராகப் பணியாற்றிய ரோச்சஸ் மிஷ் என்ற எஜர்மன்காரரர் இவ்வாறு தனது ஜெமானரின் இறுதி நாளை நினைவு கூர்ந்தார். ஹிட்லர் தங்கியிருந்த நிலவறையின் தொலைப்பேசி இணைப்பாளராக (டெலிபோன் ஆபரேட்டராக) அந்த நேரத்தில் பணியில் இருந்தார் மிஷ். ஹிட்லரின் தொலைபேசி எண்: 120050.

'துப்பாக்கித் தோட்டா வெடித்த சத்தம் கேட்ட மறுவினாடியே யார் யாரோ கூட்டமாக இந்த நிலவறைக்கு வந்தார்கள். சிலர் ஹிட்லரின் சவத்தை அங்கிருந்த போர்வைகளில் சுற்றித்தூக்கிப் போனார்கள். வெளியே ஒரு குண்டுவீச்சில் பள்ளமாகியிருந்த ஒரு இடத்தில் போட்டார்கள். அதன் மேல் பெட்ரோலை ஊற்றி எரித்தார்கள்.

சில வினாடிகளுக்குள் நடந்து முடிந்துவிட்ட இந்த நிகழ்ச்சியால் திகைத்துப் போய் நின்றிருந்தார் மிஷ்.

ஹிட்லர் தனது இறுதி நாட்களில் தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் மனம் உடைந்து கேட்டிருக்கிறான்:

'நான் தவறு செய்து விட்டேனா?'

'சே, சே அப்படியெல்லாம் இல்லை. நீங்கள் செய்தது எல்லாமே சரிதான்'.

'அப்படியானால் மக்கள் ஏன் என்னை விட்டு ஓடுகிறார்கள்? என் அருகில் ஏன் யாரும் வர மாட்டேன் என்கிறார்கள்?'

'யுத்தம் நடக்கிறதல்லவா? யுத்தக் களத்துக்குப் போகாமல் மக்கள் உங்களைச் சுற்றி எப்படி நின்று கொண்டிருக்க முடியும்?'

'அப்படியா சொல்கிறீர்கள்?' நம்ப முடியாமல் கேட்டான் ஹிட்



படிப்பகம்

www.padippakam.com

லர் அப்போது அவன் கண்களில் ஈரம்.

இட்லர் மற்றும் ஈவாபிரானின் உடல்கள் அகற்றப்பட்ட உடனேயே, இட்லரின் வலது கையும், பிரச்சார மந்திரியுமான கோயபல்ஸின் மனைவி தன் ஆறு குழந்தைகளுடன் ஓடிவந்தாள்.

'நானும் என் குழந்தைகளும் தற்கொலை செய்து கொள்ளப் போகிறோம்' என்று அறிவித்தாள்.

அவர்கள் தற்கொலை செய்து கொள்வதற்குத் தயார் நிலையில் வந்திருந்தார்கள்.

திருமதி கோயபல்ஸ், தன் குழந்தைகளைக் குளிப்பாட்டி, அழகாகத் தலைசீவி, துவைத்த வெள்ளை இரவு உடைகளை அணிவித்து அழைத்து வந்திருந்தாள்.

பணியாளர்கள் கோயபல்ஸின் மனைவி மாக்தாவின் காலில் விழுந்து கதறினார்கள். 'நீங்கள் இறந்து போனால் கூடப் பரவாயில்லை. இந்தக் குழந்தைகள் என்ன பாவம் செய்தன. அவர்களை விட்டு விடுங்கள்'.


இட்லரின் காதலி ஈவாபிரான்

ஆனால் அவள் கேட்கவில்லை. ஆறு குழந்தைகளையும் விஷம் கொடுத்துக் கொன்றாள். பின்பு மிஷ்ஷின் டேபிள் எதிரில் வந்து உட்கார்ந்தாள். இதயம் வெடிக்கக் கதறி அழுதாள்.

அப்போது மிஷ்ஷீக்குப் பயம் வந்தது. இங்கே இருக்கும் ஒவ்வொரு வினாடியும் தன் உயிருக்கு ஆபத்து என்று அவருக்குத் தோன்றியது. உடனே அந்த இடத்தை விட்டு நழுவ முயன்றார். அப்போது அங்கு வந்த கோயபல்ஸிடம்.

'ஐயா நான் போகலாமா?' என்று உத்தரவு கேட்டார்.

'ஏன்?'

'தோழர்களோடு சேர்ந்து கொண்டுபோரிடத் தான்.'

'ஆனால் இன்னும் சில தொலைப்பேசி செய்திகள் அனுப்ப வேண்டி இருக்கிறதே?' என்றான் கோயபல்ஸ்.

பின்பு விரக்தியுடன்.

'எப்படி வாழ வேண்டும் என்பதை அறிந்த மாதிரியே, எப்படிச் சாக வேண்டும் என்பதையும் நாங்கள் அறிவோம்' என்று சொல்லிவிட்டு, கோயபல்ஸும் அவன் மனைவியும் தற்கொலை செய்து கொண்டனர்.



– மிஷ் அந்த நிலவறையிலிருந்து தப்பி ஓடினார். ஆனால் வெளியே சுற்றி வளைத்திருந்த ரஷ்யப்படைகளிடம் சிக்கிக் கொண்டார். அவர்களிடம் நடந்ததைக் கூறியபோது அவர்கள் நம்பவில்லை. 'இட்லராவது தற்கொலை செய்து கொள்வதாவது? என்று சந்தேகித்தனர். 'நீ பொய் சொல்கிறாய்' என்று சொல்லி மிஷ்ஷைக் கடிந்து கொண்டனர்.

பின்னர் இது உறுதி செய்யப்பட்டது.

கிழக்கு ஜெர்மானிய அரசு புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக ஒரு இடத்தைத் தோண்டினார்கள். அப்போது பூமிக்கடியில் ஒரு நிலவறை இருப்பதைக் கண்டார்கள். அதுதான் இட்லரின் 1945ஆம் ஆண்டின் கடைசிக் கால இருப்பிடம் என்பதைக் கண்டறிந்தார்கள். இதை அழித்துவிடலாமா அல்லது புதுப்பித்து ஒரு கண்காட்சியாக வைக்கலாமா என்று விவாதித்தார்கள்.

என்னதான் அயோக்கியனாக இருந்தாலும், மனிதகுல விரோதியாக இருந்த போதிலும் இட்லரும் ஒரு மோசமான முன்னுதாரணம் என்ற முறையில் நினைவு கூரப்பட வேண்டியவன்தானே! எப்படி ஒருவன் இருக்கக் கூடாது என்பதற்காகவாவது அவனை நாம் நினைவு கூர வேண்டும். எனவே, அவன் தொடர்பாகக் கிடைத்திருக்கும் பொருட்களை வைத்து ஒரு கண்காட்சி நடத்துவது சரியானதே என்று முடிவு செய்தார்கள்.

அதன் விளைவாக மாஸ்கோவில் ஹிட்லர் இறந்த ஐம்பத்தைந்தாவது ஆண்டில் ஒரு கண்



படிப்பகம்

www.padippakam.com

காட்சி நடத்தப்பட்டது. அப்போது முதன்முறையாக இட்லரின் குண்டு துளைக்கப்பட்ட மண்டையோடு காட்சிக்கு வைக்கப்பட்டது.

இட்லரின் மண்டையோட்டை காட்சிக்கு வைத்ததினாலேயே நாஜிஸம் அழிந்து போய்விட்டது என்று அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாது.

ஜெர்மனியில் ராக்கன்ஹாஸன் மற்றும் டைல்கிர்ஷன் ஊர்களிலிருந்த இரண்டு யூதக் கல்லறைகள் தோண்டப்பட்டு அதிலிருந்த சவப் பெட்டிகள் எடுக்கப்பட்டு வெளியே போடப்பட்டன. இதைச் செய்தவர்கள் தங்கள் முத்திரையாக நாஜி அடையாளமான ஸ்வஸ்திக் சின்னத்தை விட்டுச் சென்றிருந்தார்கள்.

பாம்பர்க்கில் ஒரு யூதக் குடும்பத்துக்குச் சொந்தமான வீட்டில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்ததைப் போலீசார் குண்டு வெடிக்கும் முன்பே கண்டு பிடித்து அகற்றினார்கள்.

டஸல்டார்ஃப் ரயில்வே நிலையத்தில் ஒரு குண்டு வீசப்பட்டு ஏழு யூதர்கள் பலியானார்கள்.

'நியோ - நாஜிஸம் என்ற பெயரில் புதிய நாஜிகள் உருவாகி வருவதை இது காட்டுகிறது. சிறுபான்மையினரான யூதர்கள் மேல் சமீபகாலங்களில் வன்முறை கட்டவிழ்த்து விடப் படுகிறது. இது வருந்தத்தக்கது' என்கிறார் ஜெர்மானிய யூதர் அமைப்பின் தலைவரான பால் ஸ்பீகல்.

மொட்டையடித்துக் கொண்டு ஏராளமான ஜெர்மன் இளைஞர்கள் தேசிய ஜனநாயகக் கட்சியில் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள் புதிய நாஜிகள்.

டஸல்டார்பில் குண்டுவீச்சில் கொல்லப் பட்ட யூதர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் போன அப்பாவி மக்களை இந்த நாஜிக் குண்டர்கள் தாக்கியிருக்கிறார்கள்.

ஜெர்மனியின் பதினாறு மாநில கவர்னர்களையும், சமீபத்தில் கூட்டி, இந்த நாஜிக் கட்சிக்குத் தடை விதிப்பது பற்றி அவசரக் கூட்டம் போட்டு ஆலோசனை நடத்தியிருக்கிறார் ஜெர்மனியின் ஜனாதிபதி. இதிலிருந்தே இந்தப் புதிய நாஜிகளின் வளர்ச்சியின் தீவிரம் புரியும்.

எனவே, இட்லரின் மண்டையோடு நாஜிகளின் வீழ்ச்சியை அறிவுறுத்தும் வரலாற்றுச் சின்னமாக இருக்கும் அதே நேரத்தில், புதிய நாஜிகள் என்ற அபாயத்தை அறிவிக்கும் அபாய அறிவிப்பாகவும் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

**எம்.ஜி.எஸ்.**



'நந்தன்' பகுத்தறிவு மலரைப் படித்தோரெல்லாம் பாராட்டினார்கள்.

அந்தப் பாராட்டுதலின் ஊக்கத்தில் பொங்கல் நாளில் புரட்சிமலர் வருகிறது.

தமிழ் நாட்டின் ஏடுகள் எல்லாமே தீபாவளி மலர் வெளியிடுவதில் ஆர்வம் காட்டுகின்றன. தமிழர்களின் தேசியவிழாவான பொங்கலுக்கு மலர் வெளியிடுவதை மறந்தே போய்விட்டன. மறுபடியும் ஓர் தேசிய எழுச்சி ஏற்படுத்த நந்தன் கொண்டுள்ள பேரார்வம் இது.

இந்த 'புரட்சிமலர்', -பெண் விடுதலை முதல் சோஷலிசப் புரட்சி வரை உலகெங்கும் நடந்த புரட்சிகளின் படப்பிடிப்பு. விலங்கை முறித்தவர்களின் அடிச்சுவட்டில் புதிய உலகுக்கான அணிவகுப்பு.

இதுஒரு -கருத்துப் பெட்டகம்
.கலைக் களஞ்சியம்

தமிழில் இப்படி ஓர் ஏடு இல்லை என்று சொல்லும் விதத்தில் தன்னை உயர்த்திக் கொள்ள விரும்பும் நந்தன் வணிகநோக்கில் நடத்தப்படும் பத்திரிகை அல்ல என்பதை வாசகர்கள் அறிவார்கள்.

காகித விலையும் பதிப்புச் செலவும் இழுத்துப் பிடிக்கமுடியாத வேகத்தில் ஏறிக் கொண்டே போவதால், நந்தன் வாசகர்களிடமே பரிகாரம் கேட்டோம்.

நந்தனுக்காக என்ன விலையும் தருவோம்; தயங்க வேண்டாம்; என்றீர்கள்.

உங்கள் மீதுள்ள நம்பிக்கை காரணமாய், பொங்கல் மலரிலிருந்து நந்தன் விலை பத்து ரூபாயாக உயர்த்தப் படுகிறது.

சரிதானே?

# நந்தன் புரட்சி மலர்

**நா. அருணாசலம்**
*ஆசிரியர், உரிமையாளர்*



படிப்பகம்

www.padippakam.com



## பாவலர் பல்லவன்

அது மலைசார்ந்த நிலப்பகுதி குறிஞ்சி மலர்கள் குறுநகை புரியும் குன்றுகள் நிறைந்த பூமி. அங்கே, குயில் கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த மயிலாடிக் குதூகலிக்கும். கொஞ்சும் கிளிகள் தமிழ் பேசிச் சிறகடிக்கும் நிலத்தில் பதித்த நிலைக்கண்ணாடிபோல் நீர்நிலைகள். அதில் நீர் அருந்தும் சாக்கில் தமது நிகரிலா அழகைப் பார்த்துக் கொள்ளும் புள்ளி மான்கள். பூக்களை முத்தமிட்டுப், புதுத்தேனைப் பருகிவிட்டு, ஈக்கள் இசைபாடும் எழிலார்ந்த சோலை அது. கொடியிடையைத் தழுவிக் கொள்ளை இன்பம் காணும் குளிர்தென்றல் விளையாடும் அம்மலர்ச் சோலையில், குயில் நுழைய முடியும், கதிரவனின் வெயில் நுழைய முடியாது. அந்த மரகதச் சோலைக்கு, தலைவி தோழியுடன் வந்தாள் இருவரும் ஒரு மரநிழலில் அமர்ந்தனர். தோழியிடம் தனது இதயத்தைத் திறந்து காட்டும் இனிய இடமாக அந்தப் பழமுதிர்ச் சோலையைத் தலைவி தெரிவு செய்து வைத்திருந்தாள்.



தேர்போல் நின்றிருக்கும் அப்பூமரத்தின் கிளைகளின் மீது, அணில் இணைகள் காதல் விளையாட்டில் ஈடுபட்டன. மலர் குலுங்கும் மரக்கிளைகள், அணில் களின் ஆட்டத்தால் பூக்களை மடியமர்ந்த மங்கையர் மீது தூவி மகிழ்ந்தன.

கொட்டிய கோட்டுப் பூக்கள், கோதையர்க்குக் குதூகலமூட்டின.

நேற்று நடந்த நிகழ்ச்சியை நெஞ்சம் நிறைய சுமந்து வந்த தலைவி, தோழியிடம் நேர் முக வண்ணனைபோல் சொல் லத் தொடங்கினாள்:



உச்சிப் பொழுது; கொளுத் தும் கோடை. ஊரில் மக்கள் நடமாட்டமே இல்லை. எங்கள் வீட்டுத் தெருவாசலில் ஓர் ஆண் மகன் ஒதுங்கிக் குரலெடுத்து,

"தாகமாக இருக்கிறது; தண்ணீர் கொடுங்கள்" என்கிறான்.

அடுக்களைவரை அந்தக் குரல் எதிரொலித்தது.

அம்மா என்னிடம்,

"தெருவாசலில் யாரோ தண்ணீர் கேட்கிறார்கள்."

"சுடரிழாய்! பொற்கலத்தில் நீர் எடுத்துப் போய்க் கொடுத்துவா." என்றாள்.

உண்ணும் நீர் எடுத்து வந்த எனக்கோ ஒரே வியப்பு!

மின்னும் வளையணிந்த என் தோழியே! மேலும் கேளடி.

நாம் சிறுமியராக இருந்தபோது மணல்வீடு கட்டி விளையாடினோம் அல்லவா? அம்மணல் வீட்டைத் தனது காலால் எற்றி உதைத்துச் சிதைத்து ஓடினானே ஒருவன்,

# நடந்தது நாடகம்



படிப்பகம்

www.padippakam.com

நமது நள்ளிருங் கூந்தலில் சூடி இருந்த பூச்சரங் களைத் தட்டிப் பறித்துப் பிய்த்து எறிந்து நம்மைத் தவித்து அழவைத்துப் போனானே ஒருவன்,

நாம் பந்தாடி மகிழ்ந்த போது வந்தோடி அப்பந் தினை எடுத்தோடி நமக்கு எரிச்சல் ஊட்டிச் சென் றானே ஒருவன்,

அவன்தான்! அவனே தான்! நேற்று எங்கள் தெரு வாசலில் வந்து நின்றிருந் தான். நீர் வேட்கை என்று அதிரக் குரல் கொடுத்த வனும் அவனேதான்.

நான் வாயிலை அடைந்த தும், அந்தக் கள்வன் என்ன செய்தான் தெரியுமா?

என் வளைக்கை பற்றி வம்பு செய்யத் தொடங்கி னான்.

நெருப்பினைத் தொட் டற்போல் நெஞ்சம் நடுங் கினேன்.

உடனே, என்ன செய்வது என்பதை அறியாமல், நான்

"அன்னாய்! இவன் செய் யும் அடாத செயலை வந்து பாரம்மா!"

என்று பதறிக் கதறி னேன்.



அலறி அடித்துக் கொண்டு அன்னையும் ஓடோடி வந் தாள்.

அவனோ, அஞ்சி நடுங்கிடக் கண்டேன். எனக்கோ, அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

"என்னடி பெண்ணே! இப்படியா என்னைக் காட்டிக் கொடுப்பது?

என்பது போல், பாவப் பட்டவனைப் போல என்னை ஏறிட்டுப் பார்த்தான்.

அன்னையும் அருகே வந்து விட்டாள்.

நடந்ததை மறைத்து, இவனை எப்படியும் காப் பாற்றியே தீர்வது என்று மின்னல் வேகத்தில் நான் முடிவெடுத்தேன்.

"அம்மா! நீர் பருகும்போது இவனுக்குப் புரை ஏறிவிட்டது; மூச்சுத் திணறினான்; எனக்குப் பயமாகி விட்டது. அதனால்தான் கத்தி விட்டேன். என்றேன் நான்.

உண்மை தெரியாத அன்னையோ, அவனது முது கிலும் தலையிலும் நீவி, அன்புமிகத் தடவிக் கொடுத்த படி இருந்தாள்.

என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை; சிரிக் காமல் இருக்கவும் முடியவில்லை.

அந்தக் குறும்புக்கார னின் நாடகத்தை விரும்பிப் பார்த்தபடியே நின்றிருந் தேன்.

அந்தக் கள்வன் மகன், ஒன்றுமே நடக்காததுபோல் நன்றாகவே நடித்துக் கொண்டிருந்தான்.

தனது கள்ளப் பார்வை யால் என்னிடம் ஏராள மாகப் பேசி முடித்தான்.

என்னைக் கொல்வது போல் கண்காட்டி, கை காட்டி ஒரு குறுநகை சிந்தி அன்னையிடம் விடை பெற் றானடி. அந்த ஓரங்க நாட கத்தை உள்வாங்கிய தோழி, குலுங்கிக் குலுங்கிச் சிரித் தாள். அவர்கள் குந்தியிருந்த குடைமரமும் பூச்சிரிப்பைச் சிந்தியது.

ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்பே, ஒரு சிறு கதை போக்கில் வடி வமைத்து, 'குறிஞ்சிக் கலி' யில் கபிலர் பெருமான் பாடி யிருக்கிறார். இதோ இக் கலித்தொகைக் காட்சியைக் கவிதையில் காணுங்கள்.

*சுடர்த்தொடீஇ! கேளாய், தெருவில் நாம் ஆடும்*
*மணல் சிற்றில் காலில் சிதையா, அடைச்சிய*
*கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி நோதக்கச்*
*செய்யும் சிறுபட்டி, மேலோர் நாள்*
*அன்னையும் யானும் இருந்தோமா, இல்லீரே! உண்ணும்*
*நீர் வேட்டேன் என வந்தாற்கு, அன்னை அடர்பொன்*
*சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்!*
*உண்ணு நீர் ஊட்டிவா! என்றாள், என யானும்*
*தன்னை அறியாது சென்றேன், மற்றென்னை*
*வளைமுன்கை பற்றி நலிய தெருமந்திட்டு,*
*அன்னாய்! இவனொருவன் செய்ததுகாண் என்றேனா*
*அன்னை அலறிப் படர்தரத் தன்னை யான் உண்ணுநீர்*
*விக்கினான் என்றேனா, அன்னையும் தன்னைப் புறம்*
*பழித்து நீவ, மற்றென்னைக் கடைக்கணால் கொல்வான்*
*போல் நோக்கி நகைக்கூட்டம்*
*செய்தான், அக்கள்வன் மகன்.*

**கலித்தொகை – 51**



படிப்பகம்

www.padippakam.com



எம்.ஜி. சுரேஷ்



••

மாட்டை - குதிரையாக்கி, நாட்டைத் தமதாக்க ஆரியர் செய்யும் அறிவியல் அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்தும் கட்டுரை...

••



# ஒரு நாகரிகமும் இரண்டு அநாகரிகங்களும்

• ராஜாராம் என்பவரும், நட்வர் ஜா என்பவரும் தனித்தனியே யோசித்தார்கள். பின்பு சேர்ந்து யோசித்தார்கள். ஒரு நாகரிகத்தைப் பற்றி இந்த இரண்டு அநாகரிகங்களும் சேர்ந்து யோசித்ததன் விளைவாக ஒரு விபரீதமான 'கண்டுபிடிப்பு' வெளிச்சத்துக்கு வந்தது.

சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என்றுதான் காலங்காலமாக அறியப்பட்டு வந்திருக்கிறது. நிறுவப்பட்டும் வந்திருக்கிறது. அதை நிராகரித்துவிட்டு அது ஆரியர் நாகரிகம் என்று நிறுவ வேண்டும். சிந்து சமவெளி மனிதர்களான மொஹஞ்சதாரோ, ஹரப்பா குடிமக்கள் தேசிய மொழி சமஸ்கிருதம் தான் என்று நிறுவ வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

*அது எப்படி சாத்தியம்?*

*சாத்தியம்தான்.*

இரண்டு பயங்கர மூளைகள் சேர்ந்து ஒரு கிரிமினல் திட்டத்தைத் தயாரித்தால் எதுதான் சாத்தியம் இல்லை?

சிந்து சமவெளி நாகரிகத்தை திராவிடர் நாகரிகம் என்று நிறுவுவதில் பெரும் பங்கு வகிப்பவை மொஹஞ்சதாரோ - ஹரப்பா பகுதிகளில் அகழ்ந்து எடுக்கப்பட்ட முத்திரைகள். நூற்றுக்கணக்கான இந்த முத்திரைகளில் எருதுகள், மனிதர்கள், சித்திர எழுத்துக்கள் போன்றவை பொறிக்கப்பட்டுள்ளன.



இந்த இரண்டு நபர்களும் முதலில் அந்த முத்திரைகளில் உள்ள எருதின் மேல் கைவைத்தார்கள்.

'சில முத்திரைகளில் குதிரைகளும் பொறிக்கப்பட்டிருந்தன...' என்பது அவர்கள் முன் வைக்கும் வாதம்.

அதாவது சிந்து சமவெளிகளில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் - சிலவற்றில் குதிரைகளின் படமும் பொறிக்கப்பட்டுள்ளதாம். இதனால் நிறுவப்படும் உண்மை என்னவென்றால், 'சிந்து சமவெளி மனிதர்கள் குதிரையைப் பார்த்திருக்கிறார்கள்; பயன்படுத்தி இருக்கிறார்கள்; குதிரை ஆரியர்களால் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட மிருகம். எனவே சிந்து சமவெளி நாகரிகம் ஆரிய நாகரிகம்' என்பது இவர்கள் வாதம்.

இதிலிருக்கும் பெரிய முரண்பாடு என்னவென்றால், குதிரை 2000 வருடங்களுக்கு முன்புதான் இந்தியாவுக்கு வந்தது. குதிரை என்பது ஸ்தெப்பி புல்வெளி மிருகம். மத்தியக் கிழக்காசியாவிலிருந்து ஆரியர்கள் கைபர் போலன் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தபோது வந்த மிருகம். ஆனால் சிந்து சமவெளி நாகரிகம். 4000 வருடங்களுக்கும் முற்பட்டது. அப்படி இருக்கும் போது 2000 வருடத்திற்கு முன்பு அறியப்பட்ட ஒரு மிருகம் 4000 வருடங்களுக்கு முற்பட்ட பதிவாக இருப்பது எப்படி சாத்தியம்? இது ஒரு சரித்திரப் புரட்டல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்?

உண்மையில் நடந்தது என்னவென்றால் நூற்றுக்கணக்கான எருது முத்திரைகளில், உடைந்து போன ஒன்றிரண்டு முத்திரைகளை சேகரித்து ஒட்டவைத்து, அவற்றை கணினி வரைவுகளின் மூலம் (Computer Graphics) குதிரையாக மாற்றி, அச்சாக்கம் (Printout) செய்திருக்கிறார்கள்.

அடுத்த இலக்கு, முத்திரைகளில் காணப்படும் வரிவடிங்கள் சமஸ்கிருதமே என்ற குண்டைத் தூக்கிப் போட்டார்கள்.



●●

குதிரை என்பது ஸ்தெப்பி புல்வெளி மிருகம். மத்தியக் கிழக்காசியாவிலிருந்து ஆரியர்கள் கைபர் போலன் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தபோது வந்த மிருகம். ஆனால் சிந்து சமவெளி நாகரிகம். 4000 வருடங்களுக்கும் முற்பட்டது. அப்படி இருக்கும் போது 2000 வருடத்திற்கு முன்பு அறியப்பட்ட ஒரு மிருகம் 4000 வருடங்களுக்கு முற்பட்ட பதிவாக இருப்பது எப்படி சாத்தியம்? இது ஒரு சரித்திரப் புரட்டல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்?

●●

உண்மையில் சிந்து சமவெளி நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் சித்திர எழுத்துக்கள் ஆகும். தொன்மையான காலங்களில் - அது இந்தியாவாக இருந்தாலும் சரி, சீனாவாக இருந்தாலும் சரி, எகிப்தாக இருந்தாலும் சரி - சரித்திரகாலத்துக்கு முற்பட்ட மனிதர்கள் சித்திர எழுத்துக்களில்தான் எழுதி வந்தனர்.

அப்போதெல்லாம் உயிர் எழுத்து, மெய் எழுத்து, இலக்கணம் போன்ற வரையறைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. 'சமஸ்கிருதம்' என்றாலே 'ஆக்கப் பட்ட மொழி' என்று பொருள். அதன் வயது 2000 வருடங்கள்தான். 2000 வருடங்களாக மட்டுமே இருக்கும் ஒரு மொழி அதிலும் முன்பிருந்த ஜெர்மானிய, கிரேக்க, ஈரானிய, முண்டா



படிப்பகம்

www.padippakam.com


மொழிகளால் உருவாக்கப் பட்ட ஒரு மொழி எப்படி 4000 வருஷங்களுக்கு முன்பிருந்த மக்களால் பயன்படுத்தப்பட்டிருக்கும்?

சரி, சிந்து சமவெளி முத்திரைகளில் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களை 'சமஸ்கிருத எழுத்துக்கள்' என்று எப்படிச் சொல்கிறார்களாம்?

அந்த முத்திரைகளில் இருப்பவை எல்லாம் மெய்யெழுத்துக்கள் (Consonants) மட்டுமாம். உயிர் எழுத்துக்கள் (Vowels) அப்போது கண்டு பிடிக்கப்படவில்லையாம். இருந்தாலும் இல்லாத உயிர் எழுத்துக்களை (Vowels) நாம் மானசீகமாகக் கற்பனை செய்து கொண்டு படிக்க வேண்டுமாம்.



– அரப்பா




விபரீத நூல்

உதாரணமாக; ம், ன் என்று இரண்டு மெய்யெழுத்துக்கள் ஒரு முத்திரையில் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவற்றை ம்+அ=ம, ன்+அ = ன அதாவது 'மன' என்று படிக்க வேண்டும். 'மன' என்றால் 'மனம்' என்று பொருள் கொள்ள வேண்டும் என்கிறார்கள்.

அதன்படி குதிரையாக மாறிய எருதின் மேலே எழுதப்பட்ட சித்திர எழுத்தை 'அஸ்வ' என்று படிக்கலாமாம். அஸ்வம் என்றால் சமஸ்கிருதத்தில் குதிரை.

நல்லது.

அதே சமயம் இந்த ம், ன் என்ற எழுத்துக்களை வைத்து 'மனம்' என்று தான் வார்த்தையை உருவாக்க வேண்டும் என்பதற்கு சட்டம் எதுவும் வகுக்கப் படவில்லை. இந்த இரண்டு எழுத்துக்களை வைத்து மேலும் மேலும் மனம், மானம், மனு, மீன், முனி, மௌனம் என்று நம் விருப்பப்படி வார்த்தைகளை உருவாக்கிக் கொண்டே போகலாம். அப்படி உருவாக்கிக் கொண்டே போகும் பட்சத்தில் ஒன்றுக்கொன்று முரண் பாடான சம்பந்தமில்லாத வார்த்தைகள் தான் கிடைக்கும். மனுவுக்கும் மீனுக்கும் என்ன சம்பந்தம். மீனாவும் முனியும் ஒன்றா? என்பது போன்ற கேள்விகள் எழுகின்றன.

எனவே அந்த எழுத்துக்கள் சமஸ்கிருதம் என்று வைக்கும் வாதம் அடிபட்டுப் போகிறது. சித்திர எழுத்துக்கள்தான் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

ஹார்வர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சரித்திரப் பேராசிரியரான மைக்கேல் விட்ஸ், ஐரோப்பிய சரித்திர ஆய்வாளரான ஸ்டீவ் ஃபார்மர் ஆகிய இரட்டையர் சேர்ந்து ராஜாராம் - ஜா இரட்டையரின் இந்தச் சரித்திரப் புரட்டை உரிய நேரத்தில் கண்டு பிடித்து அடித்து நொறுக்கினார்கள்.

●●

அந்த எழுத்துக்கள் சமஸ்கிருதம் என்று வைக்கும் வாதம் அடிபட்டுப் போகிறது. சித்திர எழுத்துக்கள்தான் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

●●

மீண்டும் ஒருமுறை எழுப்பப்பட்ட சரித்திரப் புரட்டு மீண்டும் ஒரு முறை நசுக்கப்பட்டது. இல்லா விட்டால் கோயபல்ஸ் சொன்ன மாதிரி 'ஒரு பொய் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டால் உண்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு' விடுமே?

அப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால்?

'ஆரியர்கள் வந்தேறிகள் அல்ல. அவர்களை விட நாகரிகத்தில் உன்னதமான நிலையில் இருந்த திராவிடர்களைச் சூழ்ச்சியாலும், நய வஞ்சகத்தாலும் ஓரங்கட்டியவர்கள் அல்ல; என்று புதிய வரலாறு எழுதலாம். திராவிடர்கள் தான் காட்டு மிராண்டிகள். ஆரியர் நாகரிகத்தின் உச்சாணிக்கொம்பில் ஊஞ்சலாடியவர்கள். என்று உண்மைகளைத் துப்புரவாகத் துடைத்துவிடலாம். இந்தியா ஒரு இந்துத்வ நாடு' சிந்து சமவெளி நாகரிகம் இந்துத்வ நாகரிகம் என்று பிரகடனப் படுத்தலாம். அதன் மூலம் இந்தியாவில் இருக்கும் முஸ்லீம்களையும், கிறிஸ்தவர்களையும் இந்தியர் அல்லாதவர் என்று ஒதுக்கித் தள்ளலாம். இந்துத்வாவை எதிர்க்கும் யாரையும் தீயிட்டுக் கொளுத்தலாம்.

நல்லவேளையாக இந்த அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டு விட்டன. இந்தியத் துணைக்கண்டம் மீண்டும் ஒருமுறை காப்பாற்றப்பட்டு விட்டது.

– எம்.ஜி.சுரேஷ்



படிப்பகம்

www.padippakam.com

பலவற்றை அண்ணன் செல்லமுத்து ஏ.பி. கோமளா அவர்களுடன் இணைந்தும், தனித்தும் எச்.எம்.வி- கிராமபோன் இசைத்தட்டுகளில் பாடியுள்ளார். அவற்றை பாது காத்து வைக்க முடியாமல் போய் விட்டது.

ராசய்யா கடையில் இருந்து கொண்டு, கவிராயர் சென்னைக்கு வந்து பரிமளா பிக்சர்சில் தங்கி இருக்கும் போதெல்லாம் நான் அவரைக் காணச் செல்வேன். அந்தக் கால கட்டத்திலேதான் வரலாற்றுச் சிறப்புமிக்க திரைப்படத்தில் ஒரு சிறிய வேடத்தில் நடிப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

திராவிடர் கழகத்தைச் சேர்ந்த மானமிகு பாவலர் - பாலசுந்தரம் அவர்கள் தேவி நாடக சபாவிற்காக எழுதப்பட்ட நாடகம் திரைப்படமாக எடுக்க முனைந்த போது அதில் நடிப்பிசைப் புலவர் தான் கதா நாயகனாக நடிக்க இருந்தார். பல காரணங்களால் அம் முயற்சி கை விடப்பட்டது.

அவருக்குப் பதிலாக அறிஞர் அண்ணா வேறொரு இளம்புது நடிகரைப் பரிந்துரை செய்தார். அவரும் பல சோதனைகளைக் கடந்து அந்தப் படத்தின் கதாநாயகனாக நடித்து புகழ் உச்சியில் நின்று விட்டார்.

திரைப்பட உலகிலே பல திருப்பு முனைகளுக்குக் காரணமாயிருந்து, நடிப்புலகிலே ஒரு நடிகர் திலகத்தையும் தந்த அந்த நாடகமும் திரைப்படமும் எது என்கிறீர்களா?

அதுதான் பராசக்தி நாடகம். அந்த நாடகக் கதைக்குத் தான் கலைஞர் கருத்தாழம் மிக்க தமிழ் வசனம் எழுதத் திரைப்படமாக வெளிவந்தது.

கலைஞர் இன்று முதலமைச்சர் ஆனதற்கு எத்தனையோ காரணங்கள் இருந்தாலும், முழு முதற்காரணமாக இருந்தது அவர் கற்றறிந்த தமிழும், திரைப்படங்களுக்கு எழுதியுள்ள உரையாடல்களும் தான்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பராசக்தி திரைப்படத்தில் அகதிகள் முகாமிற்கு வந்து சேரும் அகதிகள் கூட்டத்தில் நானும் ஒரு அகதியாக நடித்திருப்பேன். சிறிய வேடந்தான் என்றாலும் அது எனக்குப் பெருமையாக இருந்தது.

அந்தக் காலக் கட்டத்தில் கலைஞர் கதை வசனம் எழுதிய அம்மையப்பன் திரைப்படத்திற்கு ஒரு பாட்டு எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

இது போன்ற வாய்ப்புகளெல்லாம் தட்டாமல் திறக்கப்பட்ட கதவுபோலவும், கேட்காமல் கிடைத்த கொடை போலவும் அய்யா-நா. அருணாசலம் அவர்கள் எனக்குக் கிடைத்ததுபோல் கிடைத்த வாய்ப்புகளாகும்.



கலைஞர் கதை வசனம் எழுதிய அம்மையப்பன் திரைப்படத்திற்கு ஒரு பாட்டு எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

அம்மையப்பன் திரைப்படக் கதை ஒரு ஆங்கிலக் கதையைத் தழுவி எழுதியதாகும். அதே கதையை சேலம் மார்டன் தியேட்டர்சாரும் 'சுகம் எங்கே?' என்ற தலைப்பில் படமாக எடுத்தார்கள். அம்மையப்பனில் எஸ்.எஸ்.ஆர் கதாநாயகன். சுகம் எங்கேயில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர் கதாநாயகன் திரு. ஏ.கே.வேலன் சுகம் எங்கேயின் கதை வசன கர்த்தா. இரண்டு படங்களுமே பெரும் தோல்வியைத் தழுவின.

டி.ஆர். பாப்பா அவர்களின் இசையமைப்பில் நகைச் சுவையும் நையாண்டியும் கலந்து ஒரு பாட்டு எழுதியிருந்தேன்...

அதுதான் இது.

விருத்தம்

உருக்குலையா மங்கை எந்தன்
ஒளி குறையாக் கழுத்தினிலே
மருக்கொழுந்து மாலை போட
மாப்பிள்ளையா வந்தவரே.

பாட்டு

பிள்ளையாரே துள்ளி வந்து
உக்காருங்க- புதுப்
பெண்ணுக்கிட்டே கள்ளத்தனம்
கூடாதுங்க.
மாப்பிள்ளையாரே
துள்ளிவந்து உக்காருங்க

இப்படி ஒரு பாடலை அம்மையப்பன் திரைப்படத்திற்காக முதன் முதலில் எழுதியதின் மூலம், நாடக நடிகர்களாக இருந்து, மாபெரும் பாடலாசிரியர்களானப் பெருமைக்குரிய முன்னோடிகளின் பட்டியலில் நானும் ஒருவனானேன்.

திருவாளர்கள் ஆசான் உடுமலை நாராயணக் கவிராயர், லட்சுமண வாத்தியார், சுந்தர வாத்தியார், மாரியப்ப சுவாமிகள், கே.பி.காமாட்சி சுந்தரன் (பராசக்தி திரைப்படத்தில் பூசாரியாக நடித்துள்ள குணச்சித்திர நடிகர்) கே.டி. சந்தானம், கு.சா.கிருஷ்ணமூர்த்தி, அப்பா - பி.எஸ்.வெங்கடாசலம், எம்.கே. ஆத்மநாதன் இன்னும் இவர்களைப் போன்ற பலர் நாடக நடிகராக இருந்து பாடலாசிரியர் ஆனவர்கள்.

என் நினைவிற்கு எட்டிய வரையுள்ள பட்டியல் இவை. இவர்கள் அனைவரும் காலத்தை வென்று நிற்கக் கூடிய பல பாடல்கள் எழுதியுள்ளார்கள்.

அந்த மேதைகளின் அறிவாற்றலுக்கும், திறமைக்கும் நான் ஒவ்வேனோ, ஒப்பேனோ எனக்குத் தெரியாது. ஆனால் நாடக நடிகன் பாடல் ஆசிரியன் ஆனான் என்னும் பட்டியலில் எனக்கும் ஓர் இடம் உண்டு.

(பயணம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

## புதிய நாஜிகள்



# ஓட ஓடத் துரத்துகிறார்கள்

அவர்கள் இருவருக்கும் தூக்கம் பிடிக்கவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள்.

அவன் கண்கள் கலங்கி இருந்தன. அவள் கண்களும்தான். கண்ணீர்த்திரை ஒருவரை ஒருவர் பார்க்க முடியாதபடி மங்கலாக்கிக் காட்டியது. அவள் துக்கத்தை உதட்டைக் கடித்து விழுங்க முயற்சித்தாள்.

பக்கத்தில் கட்டிலில் ஆறுவயது சிறுவன் நோவா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அருகில் ஒரு வயதுக் குழந்தை இலியாஸ். அது ஒரு மோசமான இரவு என்பதை அந்தக் குழந்தைகள் எப்படி அறிவார்கள்?

ஏழு வருடகாலத்தில் இவர்கள் இதுவரை ஒருநாள் கூடப் பிரிந்ததே இல்லை. அதனாலேயோ என்னமோ இனி இவர்கள் என்றென்றைக்குமாகப் பிரியப் போகிறார்கள்.

என்ன ஆயிற்று இவர்களுக்கு?

அவளுக்குத் தாளமுடியவில்லை. இதயம் உடைந்து விம்முகிறாள். அவன் அவள் தோள் மீது கைவைத்து ஆறுதலாகப் புன்னகைக்க முயற்சி செய்து தோற்றுப் போகிறான்.

இது கடைசித் தொடுகை. இது கடைசி இரவு. நாளை முதல் இவன் யாரோ அவள் யாரோ.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு...

வாழ்க்கை உன்னதமாக இருந்தது. டென்னிஸ் மைதானத்தில் பந்தைத் துரத்துவது போக, பாடல்களை ரசித்துக் கேட்பதும் இவன் பழக்கம். அப்படித்தான் அவளது குரல் இவனுக்கு அறிமுகம்.

ஒரு சாயங்கால மழையின் முணுமுணுப்பில் ஒரு விருந்தின் போது குரலுக்குரியவளை அவன் சந்தித்தான். எத்தனை அற்புதமான நாள் அது தெரியுமா? என்று பிறிதோர் நாள் அவளிடம் சொன்னான். உங்களுக்கு மட்டுமல்ல; எனக்கும் கூட அது அற்புதமான நாள்தான் என்றாள் அவள். அதைத் தொடர்ந்து வந்த தினங்களில் இவன் அவள் வசமானான். அவளும் இவன் வசமானாள்.

இவனோ ஒரு டென்னிஸ் நட்சத்திரம். அவளோ ஒரு பிரபல பாடகி. இவர்கள் இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டபோது உலகம் வியந்தது. ஏனெனில், இவன் வெள்ளை இனத்தவன். அவளோ ஒரு கறுப்பினப் பெண். இனவெறிக்குச் சாவுமணி அடிக்கப்பட்டு விட்டதாக பத்திரிகைகள் எழுதின.

ஏழு வருடங்கள் அற்புதமாகக் கழிந்தன. இவர்கள் இருவரும் உலகின் கண்முன் உதாரணத் தம்பதிகளாக அடையாளப் படுத்தப்பட்டார்கள்.

ஒரு இனிமையான நேரத்தில் அந்தத் தொலைப் பேசிச் செய்தி வந்தது.

'நான் இட்லரின் வாரிசு பேசுகிறேன். நீ இட்லரைப் பற்றியும் அவரது தலைமையில் இயங்கிய நாஜிப்படைகள் பற்றியும் கேள்விப் பட்டிருப்பாயே. நாங்கள் முடிவு எடுத்துவிட்டால் முடிக்காமல் விடமாட்டோம்'.

'சரி, என்னிடம் ஏன் இதையெல்லாம் சொல்கிறீர்கள்?'

'உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது? நீ ஆரியன். உன் உடம்பில் ஓடுவது ஆரியரத்தம்.



படிப்பகம்

www.padippakam.com

நீ ஆங்கிலேயனைப் போன்ற தாழ்ந்த பிறவியோ அல்லது அமெரிக்கனைப் போன்ற அனாசாரப் பிறவியோ அல்ல. நீ எப்போது அந்தக் கறுப்பியை மணந்து கொண்டாயோ அப்போதே ஆரியப் புனிதம் கெட்டுப் போய் விட்டது. நீ உயிர் வாழும் தகுதியை இழந்து விட்டாய். உயிர் பிழைக்க வேண்டுமானால் ஜெர்மனியை விட்டே ஓடு'.



ஜெர்மானியப் பார்ப்பனர்கள்

முதலில் இதை இவன் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து தொந்தரவுகள் வந்தன. நியோ நாஜிகள் பலரைக் கொல்வது இவன் கவனத்துக்கு வந்தது. இவன் ஆடிப் போனான்.

அதன் பிறகு இவனுக்கும் நாள் குறிக்கப் பட்டது. வேறுவழியில்லாமல் அவனும் அவளும் அமெரிக்காவுக்குப் போனார்கள். இந்தக் குரல் அவர்களை விடவில்லை. பிரான்சுக்குப் போனார்கள். அங்கும் துரத்தியது. உலக அகதிகளின் கடைசிப் புகலிடமான லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கும் அவர்கள் அச்சுறுத்தப் பட்டார்கள். அவர்கள் உலகின் எந்த மூலைக்குப் போனாலும், அங்கெல்லாம் நாஜிகளின் துப்பாக்கி முனை அவர்களைக் குறிபார்த்தது.

உடலாலும் உள்ளத்தாலும் களைத்துப் போன அவன் யோசித்துப் பார்த்தான்.

தன் உயிர் போனால் கூடப் பரவாயில்லை. தனது பிரியத்துக்குரிய காதலியின் உயிருக்கு எந்த ஆபத்தும் வந்து விடக்கூடாதே என்று பதறினான். தன் மனைவி மற்றும் குழந்தைகளின் உயிருக்குப் பாதுகாப்பு வேண்டுமென்றால் அவர்களை விட்டுப் பிரிவதுதான் ஒரே வழி என்று முடிவு செய்தான்.

இந்தக் காதல் தம்பதியினரை முதலில் ஜெர்மனியை விட்டுத்தான் வெளியேறும்படி அவர்கள் சொன்னார்கள். பின்புதான் அவர்களுக்கு ஒரு விஷயம் புரிந்தது. பிரபலமான தம்பதிகளான இவர்களைப் பின்பற்றி இன்னும் பல 'ஆரிய இளைஞர்கள்' இது மாதிரி 'இழிவான பிரஜை'களை மணந்து கொண்டால் என்ன செய்வது? இவர்களைத் தண்டித்தால்தான் மற்றவர்களுக்கும் பாடம் புகட்டிய மாதிரி இருக்கும். அதனால் தான் இவர்களைப் பாடாய்ப்படுத்தினார்கள்.

இரவு மோசமாகக் கழிந்தது விடியல் சோகமாக




● ●

*"பார்ப்பனர்களை அனுமதிக்காதே" நாகரிக மக்கள் போர்க்கொடி*

● ●



படிப்பகம்

www.padippakam.com

விடிந்தது.

ஜெர்மனியிலிருந்து, லண்டனுக்குப் போய்த் தஞ்சம் புகுந்தும் நிம்மதியில்லாமல், சதா துப்பாக்கி தாங்கிய காவலர்கள் பத்துப் பேருடன் ஒவ்வொரு நொடியும் பயந்து பயந்து வாழ்ந்தது போதும் என்று முடிவெடுத்த அந்தப் புகழ்பெற்ற தம்பதியினரான போரிஸ் பெக்கரும், பார்பராவும் டெய்லி டெலிகிராப் பத்திரிகையாளர்களை அழைத்து தங்களின் அறிக்கையை வாசித்தார்கள்.

'இனம், மதம், நிறம் போன்ற பேதங்களைக் கடந்து மனிதன் மனிதனாக வாழும் இடம்தான் சொர்க்கம். அந்தச் சொர்க்கம் இந்தப் பூமியில் இல்லை. நியோ நாஜிகளால் எங்கள் வாழ்க்கை நாசமாகிவிட்டது; இதனால் நாங்கள் பிரிகிறோம்.

அறிக்கையைப் படித்து முடித்த பெக்கர் கண்களில் ஈரம். பார்பராவோ கதறியே விட்டாள்.

*1945லேயே இட்லர் இறந்துவிட்டானே. அப்படியானால் இவர்கள் யார்?*

# பொட்டு வைத்தவளை விடாதே!

ஜெர்மனியில் இப்போது நியோ நாஜிகள் என்ற பெயரில் இளைஞர்கள் அணிவகுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்களது அசுர வளர்ச்சியைக் கண்டு ஜெர்மன் அரசே ஆடிப் போயிருக்கிறது. இவர்களை எப்படிக் கட்டுப் படுத்துவது என்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறது.

ஜெர்மானியர் அல்லாத மற்ற எந்த இனத்தவரையும் இவர்கள் எதிரிகளாகத்தான் பார்க்கிறார்கள். இவர்களது முதல் குறி: யூதர்கள் அடுத்தகுறி; தமிழர்கள். பொட்டு வைத்திருப்பதால் தமிழர்களை இவர்கள் 'டாட்' (Dots) என்று அழைக்கிறார்கள். Dot என்பதற்கு பொட்டு என்று மாத்திரம் பொருள் கொள்ளக்கூடாது. அதற்கு களங்கம், கறை, அசுத்தம் என்றெல்லாம் அவர்கள் பொருள் கொள்கிறார்கள். யூதர்களையும் தமிழர்களையும் கொல்வதன் மூலம் தங்கள் இலட்சிய ஈடேறுதலை இவர்கள் அடைகிறார்களாம்.

இறந்து போனது இட்லர் மட்டும் தானே. அவனது கருத்தியல் இன்னமும் சாகாமல் பேயாய் உலவிக் கொண்டிருக்கிறது. இட்லர் காலத்து நாஜிகளில் தப்பித்தவர்கள் தங்கள் விதைகளை விதைத்து விட்டல்லவா மண்டையைப் போட்டார்கள். அது இப்போது நியோ நாஜிசம் என்ற பெயரில் ஜெர்மனியில் அலைந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் அதன் பெயர். 'இந்துத்வா'.

**– சுரேந்திரன்**




கேரளாவில் மம்முட்டி, மோகன்லால் போன்றவர்கள் நம் கமல், ரஜினி போல 'சூப்பர் ஸ்டார்'கள். இவர்கள் நம் ஊர் நாயகர்களைப் போல் ஒரு படத்துக்கு இத்தனை கோடி எண்ணி வைத்தால்தான் 'கால்ஷீட்' கொடுப்பேன் என்று அடம் பிடிப்பதில்லை. படத்துக்கு இவ்வளவு சம்பளம் என்று இல்லை; படத்தின் தயாரிப்புச் செலவுக் கேற்பதான் சம்பளம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். உதாரணமாக, ஐம்பது லட்சரூபாயில் ஒரு படம் எடுக்கப் போகிறோம் என்றால் அதற்குக் கதாநாயகன் தன் சம்பளமாக இரண்டு மூன்று லட்சம் கொடுத்தால் வாங்கிக் கொள்வார். அதே போல் ஒரு கோடி ஒன்றரைக் கோடி செலவில் தயாரிக்கப்படும் படம் என்றால் அதற்கேற்ப ஐந்து அல்லது ஆறு லட்சம் என்று வாங்கிக கொள்ளுவார். இதனால் அவர்களால் பெரிய பட்ஜெட் படத்திலும் நடிக்க முடிகிறது. சின்ன பட்ஜெட் படத்திலும் நடிக்க முடிகிறது. வித்தியாசமான கலைப்படங்களில் நடித்து ஜனாதிபதி பரிசும், சர்வதேச அரங்கில் அமெரிக்க ஐரோப்பிய நடிகர்களுக்குச் சமமான புகழையும் பெற முடிகிறது. கேரள சினிமாவும் ஆரோக்கியமாக இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# தத்துவம் பயில்வோம்

## பண்டையக் கிரேக்கர்களின் எளிய பொருள்முதல்வாதமும் இயக்கவியல்வாதமும் - 2



அணுக்களின் இயக்கத்தின் போது அவை தமக்குள் ஒன்றிணைந்து நெருப்பு, நீர், காற்று, மண் ஆகிய எல்லாக் கலப்புக்களையும் உண்டாக்குகின்றன. டெமாக்ரிட்டஸின் கருத்துப்படி அணுக்கள் - இருத்தல், வெற்று வெளியோ - சூனியம்.

மேற்கூறியவற்றால் தெரிவது போல, சடப் பொருள் நிலவும் பொது வடிவங்களான இயக்கம், இடைவெளி, நேரம் போன்றவற்றை வேறு படுத்திக் காண டெமாக்ரிட்டஸ் முயன்றார். இவ்வாறு செய்கையில் அவர் அணுக்கள் இல்லாமல், அதாவது எவ்வகைச் சடப் பொருளும் இல்லாமல் இடைவெளி நிலவ முடியும் என்ற தவறான கருத்துக்கு இடம் கொடுத்துவிட்டார். எனினும், இதுவும் வேறு அனேகத் தவறான அனுமானங்களும் கொண்டது ஆயினும், டெமாக்ரிட்டஸின் அணுக் கொள்கை விஞ்ஞானத்தின் வழிகாட்டும் வடமீனாகப் பல நூற்றாண்டுகளாகத் தொண்டாற்றியது. அணுக்கள் பற்றிய தற்காலப் போதனை டெமாக்ரிட்டஸின் கருத்திலிருந்து சாராம்சத்தில் வேறானது என்பது கூறாமலே விளங்கும். ஆனாலும் பொருளியல் அணுக்கள் புறநிலையாக நிலவுவது பற்றிய அவரது பொதுத் தத்துவ முடிவு விஞ்ஞானம், தத்துவம் இவற்றின் வரலாற்றில் மிகப் பெரிய பங்கு ஆற்றியது.

அறிதல் பற்றிய பொருள்முதல்வாதச் சித்தாந்தத்தை டெமாக்ரிட்டஸ் விரிவுபடுத்தினார். புறநிலையாக நிலவும் அணுக்கள் உணர் உறுப்புக்கள் மீது செயல்படுவதன் விளைவே மனிதனது உணர்வு ஆகும் என அவர் கருதினார். ஆனால் இந்தச் செயல்பாட்டை அவர் எளிமைப்படுத்திப் புரிந்துகொண்டார். அவரது எண்ணப்படி ஒவ்வொரு பொருளிலிருந்தும் அணுக்களின் பிரவாகங்கள் எல்லாத் திசைகளிலும் பெருகுகின்றன. இந்த அணுக்கள் உணர் உறுப்புக்களின் ஊடாக உட்புகுந்து புலனுணர்ச்சிகளை ஏற்படுத்துகின்றன. பண்படாத நிலையிலுள்ள இந்த எண்ணத்தில் ஓர் ஆழ்ந்த கருத்தும் அடங்கியிருக்கிறது. பொருளியலான இயற்கை புறநிலையாக நிலவுகிறது. நமது சிந்தனைகள் புறநிலைப் பிரபஞ்சத்தையே பிரதிபலிக்கின்றன என்பது அந்தக் கருத்து.

நமது பார்வை, கேள்வி, முகர்வு, சுவை, தொடுதல் ஆகிய உணர்வுகளுக்கு உரிய உறுப்புக்கள் சில பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் மட்டுமே புரிந்துகொள்ள வல்லவை, எல்லாவற்றையும் அல்ல என்ற அறிவை டெமாக்ரிட்டஸ் அணுகினார். மனிதனால் காணவோ, தொட்டுணரவோ, சுவையால் அறியவோ முடியாத பொருள் பிரபஞ்சத்தில் உள்ளது, அது மிக மிகச் சொற்பமானது என்று அவர் சொன்னார். இம்மாதிரி விஷயங்களை மனிதன் அறிந்துகொள்வது எவ்வாறு? இந்தக் கேள்விக்கு விடையளிக்கையில் டெமாக்ரிட்டஸ் பகுத்தறிவின் திறனை மேற்கோள் காட்டினார். புலன்களின் அறிவுக்கு அகப்படாமல் நழுவிச் செல்பவை யாவும் பகுத்தறிவால் வெளிப்படுத்தப்படக் கூடும், வெளிப்படுத்தப்படவேண்டும். உதாரணமாக அணுக்கள் பற்றிய அறிவு பெறுவது சிந்தனைத் திறனின் உதவியாலேயே, அறிவுக்கண்களாலேயே சாத்தியம் ஆகும். டெமாக்ரிட்டஸின் கருத்திற்கிணங்க, இயற்கையின் மர்மங்களைச் சிந்தனைத் திறன் கொண்டே அறியமுடியும். பகுத்தறிவு என்பது அறிதலுக்கான மிகச் செவ்விய கருவி, மிக நுண்ணிய அறிதல் உறுப்பு ஆகும்.

சிறிது காலத்துக்கு முன்புதான் உதித்திருந்த பொருள் முதல்வாத, இயக்க இயல்வாதப் பிரபஞ்ச அறிவு, விஞ்ஞானம், நடைமுறை இவற்றின் விவரங்களை ஆதாரமாகக் கொண்டு பிரபஞ்சத்தின் அந்தரங்க மர்மங்களுக்குள் இவ்வாறு படிப்படியாக மேலும் ஆழ்ந்து புகுந்து மக்களுக்கு மெய் ஞானம் புகட்டியது.

கருத்துமுதல்வாதப் பிரபஞ்சக் கண்ணோட்டத்தின் ஆதரவாளர்கள் பொருள்முதல்வாதத்தின் வளர்ச்சியை மிகத் தீவிரமாக எதிர்த்தார்கள். கி.மு.5-4ம் நூற்றாண்டுகளில் வர்க்க முரண்பாடுகள் தொன்மைச் சமூகத்தில் மிகக் கடுமையாக வெளிப்பட்டன. அடிமைச் சொந்தக்கார ஜனநாயகத்துக்கும் அடிமைச் சொந்தக்கார உயர்குடிமக்களாட்சிக்கும் இடையே அரசியல் அதிகாரத்திற்கான போராட்டம் கூர்மையாயிற்று. கருத்துமுதல் வாதத்துக்கும் பொருள்முதல் வாதத்துக்கும் இடையே போராட்டம் அந்த நூற்றாண்டுகளில் சிறப்பாகக் கொடிய உக்கிரத்துடன் நடந்தது.

தொன்மைக் கிரீஸில் கருத்துமுதல்வாதத் தத்துவத்துக்கு மிகப் பெரும்



படிப்பகம்

www.padippakam.com

பிரதிநிதியாகத் திகழ்ந்தவர் பிளேட்டோ (Plato) (கி.மு.427-347). இவர் அடிமைச் சொந்தக்கார உயர் குடியில் பிறந்தவர். அடிமைச் சொந்தக்கார அரசின் பிற்போக்கு ஆட்சி முறைக்குச் சித்தாந்த ஆதாரத்தை இவர் கருத்துமுதல்வாதத்தில் தேடினார். பொருள்முதல்வாதத்துக்கு எதிரான போருக்கு இவர் பகிரங்கமாகத் தலைமை தாங்கினார். பொருள்முதல் வாதத் தத்துவத்தின் பாதிப்பினால் இளைஞர்கள் நாஸ்திகர்கள் ஆகிவிடுவதாக முறையிட்டார்.

பிளேட்டோ புறநிலைக் கருத்துமுதல்வாத முறையை வகுத்தார். புலனுணர்வுக்கு உட்படும் பொருள்கள் கொண்ட பிரபஞ்சமும் கருத்துக்களின் பிரபஞ்சமும் அதாவது பொருள்களின் பருமையற்ற நுண் வடிவங்கள் கொண்ட பிரபஞ்சமும் எதிர் எதிராக நிலவுவதாக அவர் கருதினார். கருத்துக்கள் புறநிலையாக, இயற்கைமீதும் பொருள்கள் மீதும் சார்பு இன்றி நிலவுகின்றன என அவர் வலிந்துரைத்தார். எதார்த்தப் பொருள்கள் கொண்ட பிரபஞ்சத்தை நிழல்கள் கொண்ட பிரபஞ்சம் எனப் பிளேட்டோ அழைத்தார். பொருள்கள் கருத்துக்களின் மங்கிய பிரதிகளே, நிழல்களே என அவர் கூறினார். பிளேட்டோவின் கொள்கைப் படி, மனிதனால், புரிந்து கொள்ளப்படும் இயற்கை எந்த அளவுக்குக் கருத்துப் பிரபஞ்சத்தின் உறுப்பு அம்சமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு மட்டுமே உண்மையானது. கருத்துக்கள் பொருள்களின் நித்தியமான முன் மாதிரிகள். அவை சிந்திக்க மட்டுமே படுகின்றன, காணப்பட முடியாது. அவற்றின் நிழல்கள் - புலப்படும் பொருள்கள். காணப்படுகின்றன, ஆனால் உண்மையான இருத்தல் அவற்றுக்குக் கிடையாது.

மனித உள்ளம் அல்லது ஆன்மா உடலின் சார்பு இன்றியே, புலனறிவுக்கு அப்பாற்பட்ட கருத்து பிரபஞ்சத்தில் நிலவுகிறது. அது பொருளியலற்று, நித்தியமானது-இவ்வாறு போதித்தார் பிளேட்டோ. ஆன்மாவின் அமரத்தன்மை பற்றிய கற்பனை இவ்விதமாகப் பிரமாணப் படுத்தப்பட்டது. ஆன்மா தற்காலிகமாக மட்டுமே மனிதனில் குடிபுகுவதாகவும் பிறகு அனந்தம் என்னும் அகாதத்துக்குத் திரும்பிவிடுவதாகவும் கூறப்பட்டது.



தத்துவம் என்பது அறிவு ஜீவிகளின் அலமாரிகளுக்கல்ல; வாழ்க்கையை மேலும் அழகுபடுத்த...

பிளேட்டோவின் தத்துவம் ஒருங்கிசைந்த கருத்துமுதல் வாதம் ஆகும். கருத்தியலானதைப் பொருளியலானதிலிருந்தும், எண்ணத்தைச் சடப்பொருளிலிருந்தும், பொதுக் கருதுகோள்களை (தானேயான "பழம்" தானேயான "வீடு") எதார்த்தப் பொருள்களிலிருந்தும் அது துணித்துவிடுகிறது. பிரபஞ்சம் நிலவுகிறது, அதன்மீது சார்பு இன்றியே பிரபஞ்சம் பற்றிய கருத்தும் கடவுளும் நிலவுகின்றன என்றும், மனிதன் நிலவுகிறான், அவன்மீது சார்பு இல்லாமலே ஆன்மா நிலவுகிறது என்றும் அது முடிவுக்கு வருகிறது. கருத்துமுதல்வாதம் மதத்துடன் எவ்வாறு சேர்ந்துகொள்கிறது என்பது இந்த உதாரணத்தில் துலக்கமாகப் புலப்படுகிறது. பிளேட்டோவும் அவருடைய சீடர்களும் கடவுளை "டெமியுர்க்" அதாவது படைப்பு முதல்வன், பிரபஞ்சத்தை, இயற்கையைச் சிருஷ்டித்தவன் எனக் கருதினார்கள்.

••

புலன்கள் எதார்த்தத்தைப் பற்றிய தகவல்களை மனிதனுக்குத் தருவதில்லை எனப் பிளேட்டோ எண்ணினார். அவருடைய அபிப்பிராயப்படி நித்தியமான கருத்துக்களின், புலன்களுக்கு அப்பாற்பட்ட சாம்ராஜ்யம் பற்றிய ஞானமே மெய்ஞ்ஞானம்.

••

சுற்றியுள்ள பிரபஞ்சத்தை மக்கள் எதார்த்தமானது எனக் கருதிவிடலாகாது என்றும், பொருளியல் பிரபஞ்சத்தின் வஸ்துக்களில் தன்மையை அவர்கள் தேடக்கூடாது என்றும் உண்மையான, கருத்தியல் இருத்தல் எனப்படுவதை அறிய அவர்கள் முயல வேண்டும் என்றும் அதன் பொருட்டு "தெய்வீக ஒழுங்கை" அவர்கள் தியானிக்க வேண்டும் என்றும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதே பிளேட்டோவின் கருத்துமுதல்வாதத் தத்துவத்தின் நோக்கம். புலன்கள் எதார்த்தத்தைப் பற்றிய தகவல்களை மனிதனுக்குத் தருவதில்லை எனப் பிளேட்டோ எண்ணினார். அவருடைய அபிப்பிராயப்படி நித்தியமான கருத்துக்களின் புலன்களுக்கு அப்பாற்பட்ட சாம்ராஜ்யம் பற்றிய ஞானமே மெய்ஞ்ஞானம். புலன்களின் அறிவு ஆற்றும் பங்கை, கோட்பாடு, அனுபவம் ஆகியவற்றின் பங்கை இழிவுபடுத்த அவர் முயன்றார். நமக்கு உண்மையைக் காட்ட அவற்றால் இயலாது என்றும் ஆன்மா ஒன்றுதான் புலன்களுக்கு அப்பாற்பட்ட பிரபஞ்சத்தை உட்புகுந்து அறிய வல்லது என்றும் அவர் கூறினார். எதார்த்தமான அறிதல் செயல்முறை பிளேட்டோவின் கற்பனையில் இவ்வாறு திரிபான வடிவம் பெற்றது.

பிளேட்டோவின் பிற்போக்குக் கருத்துக்கள் கருத்துமுதல் வாதத் தத்துவ அறிஞர்களால் சென்ற காலத்தில் விரிவாகப் பயன்படுத்தப்பட்டன. இம்மாதிரிக் கருத்துக்களின் பல்வகை வேறுபாடுகள் தற்காலப் பூர்ஷ்வாத் தத்துவத்திலும் மிக அடிக்கடி எதிர்ப்படுகின்றன.

பிளேட்டோவினது புறநிலைக் கருத்துமுதல்வாதத்தின் பற்பல அடிப்படைக் கருத்துக்களின் ஆதாரமற்ற தன்மையைச் சுட்டிக் காட்டினார் மாபெரும் தொன்மைக் கிரேக்கச் சிந்தனையாளர் அரிஸ்டாட்டில் (Aristotle) (கி.மு.384-322).



படிப்பகம்

www.padippakam.com

# தெரியாததை எழுத மாட்டேன்

அன்புமிக்க சகோதரர் திருஅருணாசலம் அவர்களுக்கு,

வணக்கம்,

தங்களின் ஜனவரி 1-ஆம் தேதியிட்ட 'நந்தன்' இதழில் "இசையெனும் போரில் ஆயுதம் ஏந்துவோம்" என்ற தங்களின் கட்டுரையைப் படித்தேன். அந்தக் கட்டுரையில் நான் 'தினமணி' இதழில் எழுதிய கட்டுரையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நன்றி!

ஆனால், தங்களுடைய கட்டுரையின் கடைசிப்பகுதியில் நான் ஒரு தவறான தகவலைத் தெரிவித்ததாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதற்கு விளக்கம் அளிப்பதற்காகத்தான் இந்தக்கடிதம்.

ஏனெனில் தாங்கள் அந்தக் கட்டுரையில் தமிழ் இசை குறித்துத் தெரிவித்துள்ள கருத்துக்களையோ - விவாதங்களையோ - ஆராய்ச்சிக் குறிப்புக்களையோ பற்றி விவாதிப்பதற்காக இந்தக்கடிதத்தை நான் எழுதவில்லை. நான் தவறான தகவலைத் தந்திருக்கிறேன் என்ற குற்றச்சாட்டை மறுப்பதற்குத்தான் இந்தக் கடிதம் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களுடைய கட்டுரையின் கடைசிப்பகுதியில், "இந்தப் பின்னணியில்தான் தமிழிசை என்கிற பெயரில் ஆரியத்தின் மீது போர் தொடுத்தார் அண்ணாமலையார். அந்த உணர்வைக் கூடக் கொச்சைப் படுத்திய அய்யா ஆர்.எம்.வீ. அவர்கள் தமிழிசை மன்றத்தில் 'தமிழில் அதிகம் பாடுங்கள்' என்று கேட்டுக் கொண்டதாகத் தவறான தகவலை முன்வைக்கிறார்." என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இந்தக் கருத்து முற்றிலும் தவறானது. நான் எப்பொழுதுமே தவறான தகவலைத் தருகிற பழக்கத்தைக் கொண்டவன் அல்ல. எதையும் தெரிந்துகொள்ளாமல் அரைகுறையாகப் பேசுவதோ, எழுதுவதோ என்னுடைய பழக்கம் இல்லை. நான் என்ன எண்ணுகிறேனோ எதை முழுமையாகத் தெரிந்திருக்கிறேனோ அதை உறுதியாக ஒளிவு மறைவின்றி எழுதுவது, பேசுவதுதான் என்னுடைய வழக்கம். இதுதான் என்னுடைய பலம் ஒருபுறத்தில் பலவீனமும் கூட.

எனவே செட்டிநாட்டரசர் அண்ணாமலையார் தெரிவித்ததாகக் கூறிய கருத்துக்களுக்கு நீங்களும், 'நந்தன்' வாசகர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் 1-10-1943இல் சங்கீத கலாநிதி ராமானுஜ ஐயங்கார் அவர்களுக்கு செட்டிநாட்டரசர் அண்ணாமலையார் எழுதிய கடிதத்தின் நகலை



## ஆர்.எம்.வீ. எழுதுகிறார்

இதில் இணைத்துத் தந்திருக்கிறேன்.

கடிதம்

பிரியமுள்ள ஐயா,

சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவில் வருகிற டிசம்பர் மாதம் 25 முதல் ஜனவரி 2 முடிய நடைபெறவிருக்கும் தமிழ் இசை மகாநாட்டில் அனேக சங்கீதக் கச்சேரிகளை நடத்த ஏற்பாடாகி இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள தங்களைப் போன்ற பிரபல சங்கீத வித்வான்கள் ஒரு கச்சேரி நடத்தித் தமிழ்மக்களை மகிழ்விக்க வேண்டுமென்பது அவர்களுடைய விருப்பம். இது சம்பந்தமாகத் தங்களிடம் சில தினங்களுக்குமுன் செட்டி நாட்டில் நான் நேரில் பேசியது ஞாபகமிருக்கலாம். ஆரம்பத்தில் என்ன பாடுவது என்பது பற்றித் தமிழ் இசை ஆதரவாளர்களில் முக்கியமான சிலரிடம் கலந்து தங்களுக்குத் தெரிவிப்பதாகச் சொன்னேன். அதுபோல் கலந்ததில் தமிழ்நாட்டில் ஆரம்பத்திலும், கடைசியிலும் மத்தியில் பெரும்பாகமும் தாய்மொழியாகிய தமிழில் பாடுவதுதான் பொருத்தமாகவிருக்குமென்று அபிப்ராயப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டில் முதல் பாட்டும் மங்களமும் இடையில் பெரும் பாகமும் தமிழ்ப்பாட்டுகளாகப் பாடுவதுதான் நியாயம். தமிழர்கள் விரும்புவது அதுவே. இடையிடையில் இதர பாஷைகளில் சிறந்த சாகித்திய கர்த்தாக்களின் பாடல்களையும் தாங்கள் அவசியம் பாட வேண்டும். தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து தமிழையே தாய்மொழியாகக் கொண்ட தங்களைப் போன்ற பிரபல வித்வான்களும் இதை ஆமோதித்து முதல் பாட்டையும், மங்களத்தையும், இடையில் பெரும்பாகம் பாடல்களையும் தமிழிலேயே பாடித் தமிழர்களுக்கு இன்பமூட்டுவீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

மகாநாட்டில் நடைபெறவிருக்கும் சங்கீதக் கச்சேரிகளில் தாங்கள் ஒரு கச்சேரி செய்ய வேண்டுமென்று தமிழர்களின் சார்பாகவும், தமிழ் இசைச் சங்கத்தின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன். நிகழ்ச்சிகள் முதலியவைகள் அச்சிட வேண்டியிருப்பதால் தங்கள் சம்மதத்தையும், தங்களுக்குச் சௌகரியமான ஒரு தேதியையும், மேற்படி கச்சேரிக்குத் தாங்கள் விரும்புகிற தொகை இன்னதென்பதையும் தயவுசெய்து ஒரு வாரத்தில் தெரிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்

மு. அண்ணாமலை செட்டியார்.

□

இப்போது நான் கொச்சைப் படுத்தினேனா அல்லது தவறான தகவலைத் தந்தேனா என்பதை நீங்களே உணர்ந்து கொண்டிப்பீர்கள். இக்கடிதத்தைத் தங்கள் 'நந்தன்' இதழில் வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன்.

(குறிப்பு: அப்படியானால், அண்ணாமலையார் தமிழிசை மன்றம் தனியே தொடங்கியதுதான் ஏன்?) ●



படிப்பகம்

www.padippakam.com



# தத்துவம் பயில்வோம்

அக்வைனஸ் கருத்துப்படி கடவுள் தூய செயல் வன்மையாக விளங்குகிறார். சடப்பொருளையும் பிரபஞ்சம் அனைத்தையும் கடவுள் வெறுமையிலிருந்து படைத்து ஒவ்வொரு பொருளுக்கும் நிலவுதலை அளித்தார்.


நிலப்பிரபுத்துவக் காலப்பகுதியில் கருத்துமுதல்வாதத் தத்துவமும் பயனற்ற இறை இயல் பாண்டித்தியமுமே மேலோங்கி இருந்தன எனினும் முற்போக்குள்ள பொருள்முதல் வாதச் சிந்தனை அந்தக் காலத்தில்கூட அழிக்கப்பட்டுவிடவில்லை. இருண்ட இடைக்கால ஆண்டுகளில்கூடத் தத்துவ விவாதங்கள் ஓய்ந்துவிடவில்லை. ஆன்மாவுக்கும் இயற்கைக்கும், சிந்தனைக்கும் இருத்தலுக்கும் உள்ள உறவு பற்றி நடந்த இந்த விவாதங்களின் உள்ளடக்கம், பிரபஞ்சம் கடவுளால் படைக்கப்பட்டதா அல்லது என்றென்றும் நிலவிவருகிறதா என்னும் கேள்விக்கு இட்டு வந்தது. அதிகத் துணிவுள்ள தத்துவ அறிஞர்களும் விஞ்ஞானிகளும், "சடப்பொருள் சிந்திக்க வல்லதா அல்லவா?" என்ற கேள்வியைக்கூடக் கிளப்பினார்கள்.

●●

இயற்கைக்கு மேலான அதீத சக்திகள் நிலவுகின்ற என்று கருத்துமுதல்வாதிகள் பரப்பிவந்த எண்ணங்களைப் பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகள் மறுத்தார்கள். இயற்கையும் சமூக வாழ்வும் இயல்பான விதிமுறைகளுக்கு உட்பட்டவையே என்று அவர்கள் நிரூபித்தார்கள்.

●●

உற்பத்தி, விஞ்ஞானம், இவற்றின் வளர்ச்சியில் ஈடுபாடு கொண்ட சக்திகள் நிலப்பிரபுத்துவச் சமூகத்தின் உள்ளே தோன்றலாயின. உதயமாகிக்கொண்டிருந்த பூர்ஷ்வா வர்க்கச் சக்திகளே அவை. இந்த பூர்ஷ்வா வர்க்கம் நிலப்பிரபுத்துவ அமைப்பையும் இறை இயலையும் இறை இயல் பாண்டித்தியத்தையும் எதிர்த்தது. மதஸ்தாபனங்களின் ஆதிக்கத்துக்கு எதிராகச் சிறப்பாகத் தீவிரமான போராட்டம் 15-17ஆம் நூற்றாண்டுகளில் அதாவது "மறுமலர்ச்சி யுகம்" என வழக்கமாக அழைக்கப்படும் காலக்கட்டத்தில் நடந்தது. இயற்கையை அறியும் ஆர்வமும் தொன்மைக் கிரீஸின் அனுபவ ஞானத்தையும் முற்போக்குள்ள தத்துவத்தையும் பற்றிய அக்கறையும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தீவிரம் அடைந்தது இந்தக் காலக்கட்டத்தின் சிறப்புத் தன்மை ஆகும்.



பூர்ஷ்வாப் புரட்சியை முதன் முதலில் நிறைவேற்றிய நாடுகளில் ஒன்றான இங்கிலாந்து 17-ஆம் நூற்றாண்டில் பொருள்முதல் வாதத்தின் புதிய தாய்நாடு ஆயிற்று. புது யுகப் பொருள் முதல் வாதத்தின் தந்தையாகத் திகழ்ந்தவர் பிரான்ஸிஸ் பேக்கன் (Francis Bacon) (1561-1626). இவர் இறை இயல் பாண்டித்தியத்தை உக்கிரமாக எதிர்த்தார். பேக்கனின் கருத்துப்படி, தத்துவத்தின் பொருள் மதத்தின் வறட்டுச் சூத்திரங்களின் உண்மையை நிரூபிப்பதில் அல்ல, இயற்கையை அறிவதற்கான முறைகளை வகுப்பதிலேயே அடங்கியிருக்கிறது. ஏனெனில், மனிதனுடைய வலிமை ஞானத்திலேயே உள்ளது என்றார் அவர். தொன்மைக் கிரேக்கப் பொருள்முதல்வாதத்துக்குப் புத்துயிர் அளிக்க பேக்கன் பெரு முயற்சி செய்தார். இயக்கமும் முயற்சியும் உயிருள்ள ஆன்மாவும் சடப்பொருளுக்கு இயல்பானவை என்று அவர் தீர்மானமாக வலியுறுத்தினார்.

ஆயினும் பேக்கனின் கருத்துக்களில் பொருத்தமற்ற விஷயங்கள் நிறைய இருந்தன. உதாரணமாக, விஞ்ஞானத்துக்கும் கடவுள் நம்பிக்கைக்கும் தனித்தனித் துறைகள் உள்ளன என்றும் அவை ஒன்றில் ஒன்று தலையிட வேண்டியதில்லை என்றும் அவர் பல முறை கூறினார். ஆனால் இங்கே ஒரு விஷயத்தைக் கவனத்தில் வைத்துக்கொள்வது அவசியம்: மதத்தின் அதிகாரம் இன்னும் சக்தி மிக்கதாக இருந்த அந்தக்

**பண்டையக் கிரேக்கர்களின் எளிய பொருள்முதல்வாதமும் இயக்கவியல்வாதமும் - 4**



படிப்பகம்

www.padippakam.com

காலக்கட்டத்தில் இம்மாதிரியான கூற்றுக்கள் விஞ்ஞானத்தின் கட்டற்ற வளர்ச்சியை உறுதிப்படுத்தும் முயற்சியாகவே உண்மையில் விளங்கின. பொருள்முதல்வாதத் தத்துவம் மதத்தையும் கருத்துமுதல் வாதத்தையும் மெதுவாக, ஒவ்வோர் அடியாக அந்தக் காலத்திலேயே நெருக்கிப் பின்னே தள்ளியது.

இருந்தாலும் மத-கருத்துமுதல் வாதத் தத்துவம் தனது நிலையை இன்னமும் உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தது. முற்போக்குள்ள தத்துவ அறிஞர்களின் பொருள் முதல்வாத, நாத்திகக் கருத்துக்களுக்கு எதிராக வாதாடினார் அகநிலைக் கருத்து முதல்வாதத்தின் தலைசிறந்த பிரதிநிதிகளில் ஒருவரான ஆங்கிலப் பாதிரி ஜார்ஜ் பார்க்ளி (George Berkeley) *(1685-1753)*. 'சடப் பொருள்" என்ற சொல்லில் எவ்வித எண்ணமும் அடங்கியிருக்கவில்லை. சடப்பொருள் என்பது ஒன்றுமற்றது, நிலவாத தன்மை என்று அவர் எழுதினார். அவருடைய கருத்துப்படி இயற்கையில் புறநிலைக் காரணத்துவம் கிடையாது, விதிமுறைக்கு உட்படும் இயல்பு கிடையாது. இந்த அகநிலைக் கருத்துமுதல்வாத நோக்கு நிலை தற்காலத்தில் புலக்கொள்கையால் மறையுருவில் ஆதரிக்கப்படுகிறது.

அகநிலைப்பொருளால் புரிந்து கொள்ளப்படுவதை மட்டுமே எதார்த்தமானது என பார்க்ளி ஒப்புக்கொண்டார். நம்மால் புரிந்து கொள்ளப்படும் பொருள்கள் (ஆப்பிள், திராட்சை) நமது புலனுணர்ச்சிகளின் (இனிப்புள்ளது, சிவப்பானது, சாறுள்ளது) தொகுப்பே என அவர் அதே சமயம் வலியுறுத்தினார். இவ்வாறாக, பார்க்ளியின் கருத்திற்கு இணங்க, பொருள்களின் இருத்தல், அவை நிலவுவது, அவற்றை நாம் புரிந்துகொள்கிறோமா இல்லையா என்பதையே பொறுத்திருக்கிறது. இந்த நோக்கின்படி, புலனறிவுக்கு உட்படும் பொருள்களின் எதார்த்தம் அவற்றை ஒருவன் புரிந்துகொள்கிறான் என்பதிலேயே அடங்கியிருக்கிறது. பார்க்ளியின் கொள்கைப்படி, நிலவுதல் என்றால் புரிந்துகொள்ளப் படக் கூடியதாக இருத்தல் என்று அர்த்தம். இதை அடிப்படையாகக் கொண்டு, அறிவால் படைக்கப்படாதது எதுவும் நிலவுவதை அவர் மறுத்தார். சடப்பொருள் புறநிலையாக நிலவுகிறது என ஒப்புக் கொள்ளலாகாது என்றும், என்றும்



அவர் வெளிப்படையாக எழுதினார்.

17-ஆம் நூற்றாண்டின் முடிவிலும் சிறப்பாக 18-ஆம் நூற்றாண்டிலும் அநேக ஐரோப்பிய நாடுகளில் பூர்ஷ்வாப் போதகர்களும் ஜூலியேன் ஒப்ரே லா மெத்ரீ (Julien Offroy de la Mettrie) *(1709-1751)*, டெனீ டிட்ரோ (Denis Dederot) *(1713-1784)*, போல் அன்ரீ ஹோல்பாஹ் (Paul Henri Holbach) *(1723-1789)*, க்ளாட் அத்ரியான் ஹெல்வேஷியஸ் (Clande Adrien Helvetitus) *(1715-1771)* போன்ற பெயர்பெற்ற பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகளும் கருத்து முதல்வாதத்தை எதிர்த்துப் போராடினார்கள்.

மத-கருத்துமுதல்வாதக் கண்ணோட்டத்துக்கு எதிராகப் பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகளின் போராட்டம் பூர்ஷ்வா வர்க்கத்தின் அரசியல்போராட்டத்துடன் நேரான தொடர்பு கொண்டிருந்தது. நிலப் பிரபுத்துவச் சமூக அமைப்பையும் நிலப்பிரபுத்துவ மரபுகளையும் கொள்கைவாதத்தையும் அரசியலையும் நிர்த்தாட்சிண்ணியமாக விமர்சித்ததன் வாயிலாக அவர்கள் இடைக்கால அமைப்புமுறைகளை ஒழிக்கவும் பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களுக்கு ஏற்பச் சமூக அமைப்பை மாற்றவும் முயன்றார்கள்.

உற்பத்தியும் எனவே விஞ்ஞானமும் மிக விரைந்த வளர்ச்சி அடைவதில் பூர்ஷ்வா வர்க்கம் அக்கறை கொண்டிருந்தது. விஞ்ஞானமோ, ஒவ்வோர் அடியிலும் இடைக்கால இறை இயல் பாண்டியத்தியத்தையும் மதத்தையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. ஆகவே பூர்ஷ்வாக் கொள்கைவாதிகள் கல்வி, பொருள்முதல்வாதம் என்ற கொடியை உயர்த்தியவாறு இடைக்காலப் பழக்கவழக் கங்கள் மீது தாக்குதல் நடத்தியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

இயற்கைக்கு மேலான அதீத சக்திகள் நிலவுகின்ற என்று கருத்துமுதல் வாதிகள் பரப்பி வந்த எண்ணங்களைப் பிரெஞ்சுப் பொருள் முதல்வாதிகள் மறுத்தார்கள். இயற்கையும் சமூக வாழ்வும் இயல்பான விதிமுறைகளுக்கு உட்பட்டவையே என்று அவர்கள் நிரூபித்தார்கள். பிரபஞ்சத்தில் நிகழும் மாற்றங்கள் யாவும் இயல்பான இயற்கைக் காரணங்களாலேயே ஏற்படுகின்றன என்று அவர்கள் சரியாகக் கருதினார்கள். சடப்பொருள் அல்லாதது அதன் இயக்கு சக்தியாக இருக்க முடியாது என்று பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகள் வலியுறுத்தினார்கள். சடப்பொருள் இயற்கை புறநிலையாக நிலவுகிறது என்றும், ஆகையால் சடப் பொருளே எல்லா வகை இருத்தலினதும் தன்மையாகவும் முதல் தொடக்கமாகவும் ஆதி அடிப்படையாகவும் இருக்கிறது என்றும் அவர்கள் கூறினார்கள். இயற்கை யாராலும் படைக்கப்படவில்லை. அது நித்தியமானது என்றார்கள் அவர்கள்.

சடப்பொருள் எங்கிருந்து தோன்றியது என யாரேனும் நம்மிடம் வினவினால் அது என்றென்றும் நிலவிவந்திருக்கிறது என்று நாம் பதில் அளிப்போம். சடப் பொருளில் இயக்கம் எங்கிருந்து தோன்றியது என்று கேட்டால் அதே ஆதாரத்தின்படி சடப் பொருள் நிரந்தரமாக இயங்க வேண்டிவந்திருக்கிறது, ஏனெனில் இயக்கம் சடப்பொருளுடைய நிலவுகையின், அதன் தன்மையின் இன்றியமையாத விளைவு ஆகும் என்று நாம் பதிலளிப்போம். இவ்வாறு எழுதினார் ஹோல்பாஹ். ●



படிப்பகம்

www.padippakam.com





# சுதந்திரத் தமிழீழத்தின் படிக்கற்கள்

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் உரை
ஜனவரி 1 - இதழின் தொடர்ச்சி.

மேற்குல நாடுகள் சமாதானத்தை விரும்புகின்றன. சமாதான வழியில் அரசியற் தீர்வு காணப்படுவதை விரும்புகின்றன. போர் மூலமாக தமிழரின் இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாது என்பதை வலியுறுத்துகின்றன. என்வேதான். மேற்குல நாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையில் நுட்பமான பிரச்சார அறிக்கைகளைச் சந்திரிகா வெளியிட்டு வருகிறார். சமாதானம் என்றும், பேச்சுவார்த்தை என்றும், அதிகாரப் பரவலாக்கம் என்றும், அரசியலமைப்பு என்றும் வார்த்தைப் பிரயோகங்களைக் கையாண்டு மேற்குலகின் கண்களுக்கு மண் தூவி வருகின்றார்.

தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தவரை சந்திரிகா ஒரு சமாதானப் பிரியை அல்ல. இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்ட கடும் போக்காளராகவே அவரை நாமும் எமது மக்களும் கருதுகிறோம். அவரது ஆறாண்டுகால அரசியல் வரலாறும், தமிழ் மக்களைத் தொடர்ந்து இராணுவ, பொருளாதார கொடுமைகளுக்கு ஆளாக்கிவரும் அவரது அணுகுமுறையும் அண்மைக்கால அவரது போர்த் தயாரிப்பு நடவடிக்கைகளுமே எம்மையும் எமது மக்களையும் இத்தகைய நிலைப்பாட்டிற்குத் தள்ளியது. இராணுவச் செலவீனத்திற்கு ஒதுக்கப்படும் பெரும்தொகை நிதி, பாரிய அளவிலான ஆயுதக் கொள்வனவு, இடைவிடாது படைக்கு ஆட்சேர்ப்பு, விலகிய இராணுவத்தினரை விரட்டிப் பிடித்தல் இப்படியாக இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்தி போருக்குத் தயார் படுத்தும் நடவடிக்கைகளைப் பார்க்கும் பொழுது சந்திரிகா ஒரு இராணுவவாதக் கடும் போக்காளர் என்பது புலனாகும்.

இம் மாதம் ஒன்பதாம் தேதி புதிய பாராளுமன்றத்தைத் திறந்துவைத்துப் பேசிய சந்திரிகா, தமிழரின் இனப்பிரச்னைக் குறித்து வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் சந்திரிகாவின் குழப்பகரமான பார்வையும் அணுகுமுறையும் தெளிவாகும். இந்த அறிக்கையில் தமிழரின் இனப்பிரச்னையின் தோற்றம் பற்றி விளக்கமுனையும் சந்திரிகா, கடந்த 50 ஆண்டுகாலமாகத் தமிழருக்கு அநீதி இழைக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறார். ஆயினும் தமிழர் என்று குறிப்பிடாமல் "சிறுபான்மை சமூகங்களுக்கு" அநீதி இழைக்கப்பட்டதாக பொதுப்படையாகக் கூறுகிறார். "இந்நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார அதிகாரக் கட்டமைப்பில் பங்குகொள்வதற்குச் சிறுபான்மை சமூகத்தினருக்கு நியாயமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. அதுதான் இனப்பிரச்னையின்



படிப்பகம்

இன்னும் 10 வெட்டுக்கள் கூடுதலாக அறிவித்தார்கள். இப்படி கண்டம் துண்டமாக வெட்டப்படும் ஒரு படத்தில் என்ன கதைக் கோர்வை இருக்க முடியும்? முதலில் ஒரு கேள்வி கேட்டீர்களே. புரட்சிக்காரனாக பார்ப்பனனை ஏன் போட்டிருக்கிறீர்கள் என்று அப்படிப் போட்டதால்தான் படமே ரிலீஸ் ஆனது. இல்லாவிட்டால் படத்தைத் தடை செய்திருப்பார்கள்.



அதுமட்டுமல்ல. இந்தப் படத்துக்குத் தணிக்கைக்குழுவில் பெரிய இடைஞ்சலாக இருந்ததே ஒரு பார்ப்பனரல்லாத ஐ.ஏ.எஸ். அதிகாரிதான்.

படத்தின் இறுதியில் 'புரட்சிக்குத் தயாராகுங்கள்' என்று ஒரு டைட்டில் வரும். அதையே எடுக்கச் சொன்னார்கள் பின்பு ஒரு வழியாக வாதாடி, போராடிக் காப்பாற்றினோம்.

நந்தன்: ஆரியத் தலைமை, ஆள் கடத்தல் இந்த இரண்டும் பெரியாரின் கருத்துக்களுக்கு எதிரானவை. திராவிடர் கழகப் பாசறையிலிருந்து வெளிவந்திருக்கும் உங்கள் படம் இந்தக் கொள்கைகளுக்கு எதிரானது என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?

பிரபாகரன்: எனக்கு இதெல்லாம் தெரியாது. நான் கொள்கை தத்துவம் இதிலெல்லாம் ஒரு எல்.கே.ஜி. உங்களைப் போன்றவர்கள் இப்படியெல்லாம் கேள்வி கேட்கும்போதுதான் எனக்கே இது போன்ற விஷயங்கள் தெரிகின்றன. அடுத்து வரும் படங்களை இது மாதிரி தவறுகள் வராமல் எச்சரிக்கையோடு இயக்குவேன்.

நந்தன்: 'நாளைய மனிதன்' 'அசுரன்' போன்ற விஞ்ஞானக் கதைகளைப் படமாக எடுத்து வந்த நீங்கள் எப்படி நாத்திகப் படங்கள் எடுக்க முன்வந்தீர்கள்?

பிரபாகரன்: கடந்த இரண்டாண்டுகளாகவே பெரியாரின் கருத்துக்கள் என்னைப் பெரிதும் கவர்ந்து வந்தன. இத்தனை வருடங்களாக இதெல்லாம் தெரியாமலேயே இருந்துவிட்டோமே என்று வருந்தினேன். இனியும் காலம் தாழ்த்தக் கூடாது. பெரியாரின் கருத்துக்களை நாடெங்கும் பரப்ப வேண்டும் என்ற உத்வேகத்துடன் இயங்க ஆரம்பித்திருக்கிறேன்.

நந்தன்: கடவுள் என்ற படத்தில் கடவுளே நேரில் வந்து பேசுவது தவறான கருத்தியல் அல்லவா? அதுமாதிரி ஏன் கதை உருவாக்கினீர்கள்?

பிரபாகரன்: அது தவறுதான். பின்னால்தான் அது எனக்கே புரிந்தது. கடவுள் மறுப்புப் படம் என்றால் அதில் கடவுள் இருக்கக் கூடாது. இருக்க முடியாது. ஆனாலும், நாத்திகப் பிரச்சாரப் படம் என்ற அளவில் அது தன் பணியைச் செய்திருக்கிறது என்ற அளவில் எனக்கு மகிழ்ச்சிதான்.

நந்தன்: படம் முழுக்க ஏதோ ஒரு சொற்பொழிவைக் கேட்பது போன்ற உணர்வையே 'புரட்சிக்காரன்' தோற்றுவித்தது. இதைத் தவிர்த்திருக்கலாமே?



பிரபாகரன்: இல்லை இதைத் திட்டமிட்டுதான் செய்தேன். இப்போதெல்லாம் மக்கள் பொதுக் கூட்டங்களுக்குப் போகமாட்டேன் என்கிறார்கள். சினிமா டி.வி. என்று பொழுது போக்குவதில் தான் ஆர்வமாக இருக்கிறார்கள் இதனால் அவர்கள் சதனமான சினிமாவில் நமது சதனமான சொற்பொழிவைக் கலந்து கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். அதைச் செய்தேன்.

நந்தன்: படத்தில் எம்.ஜி.ஆர். பாணியில் பேசி நடித்திருக்கிறீர்களே. இது ஏன்?

பிரபாகரன்: எனக்கு எம்.ஜி. ஆரின் வசனம் பேசும் பாணி பிடிக்கும். அந்த 'டைமிங்' தான் எனக்கு சரியென்றுபட்டது. அதனால் அதே மாதிரி வசனம் பேசி இருக்கிறேன். நான் பேசி இருக்கும் வசனங்களை எம்.ஜி.ஆர். பாணியில் பேசியதால் தான் போரடிக்காமல் எடுபட்டது. இல்லாவிட்டால் இந்த அளவுக்கு வெற்றிபெற்றிருந்திருக்காது.

கடவுள் என்ற படத்தில் கடவுளே நேரில் வந்து பேசுவது தவறான கருத்தியல் அல்லவா? அதுமாதிரி ஏன் கதை உருவாக்கினீர்கள்?

●●

சந்திப்பு: சுரேந்திரன் – நாலந்தா
படம்: சௌரா

www.padippakam.com

# கங்கைக் கரையில் காட்டுமிராண்டிகள்





என்னதான் கணினி மயமாக்கப்பட்டாலும் 'பொக்ரானில் அணுகுண்டு பரிசோதனை செய்து உலக அரங்கில் தன்னை ஒரு வல்லரசாகக் காட்டிக் கொண்டாலும் இந்தியாவின் மூடநம்பிக்கை, மதவெறி, கடவுள் பெயரால் நடத்தப்படும் காட்டுமிராண்டித்தனம்.

*144* வருடங்களுக்கொருமுறை நடக்கும் கும்பமேளா என்ற அருவருக்கத்தக்க நிகழ்ச்சி அண்மையில் அலகாபாத்தில் நடந்தது. பௌர்ணமி நிலவில் ஒளிரும் நீரில் முங்கி எழுந்தால் கங்கை அன்னை பாவத்தை வாங்கிக் கொண்டு பக்தர்களை ரட்சிக்கிறாளாம். இதற்காக உடை கூட தடையாக இருக்கக் கூடாதென்று தீர்மானித்து அதையும் அவிழ்த்துப் போட்டுவிட்டு பக்தர்கள் நீரில் முங்கும் அவலம் ஏகப்பட்ட காமிராக்களில் பதிவானது.

சாமியர்கள், பக்திமான்கள், வேடிக்கை பார்க்கும் கும்பல், வெளிநாட்டு பக்தர்கள் என்று ஏகப்பட்ட கூட்டத்துக்கிடையே இந்த கும்பமேளா என்கிற அநாகரிகம் கொண்டாடப்பட்டது.

கையில் செல்போன்களுட்னும், சூலாயுதம், துப்பாக்கி, கஞ்சா, சிலும்பிப் போன்றக் கருவிகளுடனும் சாமியார்கள் திரிந்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



உதடுகளுக்கு 'ஹரி ஹரி கங்கே' உச்சாடனம்; உறிஞ்சுவதோ கஞ்சா புகையின் உல்லாசம்.

இன்னொருபுறம் நாக கன்னியாசிகள். வழிநெடுக காமத்தைப் பரப்பிக் கொண்டு நிர்வாணமாக நடந்து வந்த இவர்களை 'ஒழுங்கும் ஆண்மையும் கொண்டவர்களாக இருந்தார்கள் என்று பத்திரிகைகள் புகழாரம் சூட்டி மகிழ்கின்றன என்பது மிகப் பெரிய வெட்கக் கேடு.

மாருதி 800 கார்களிலும், பல்லக்குகளிலும் சுமந்து வரப்பட்ட; வந்த சாமியார்கள் தனிரகம்.

ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் இந்தியாவைக் காட்டுமிராண்டி நாடு என்று சொல்லுவார்கள். அந்தக் கூற்றை நிரூபிப்பதற்காகவும் அவர்கள் மறந்து விடக்கூடாது என்பதற்காகவும் இந்த கும்பமேளா 12 ஆண்டுகளுக்கு ஒரு தடவையும், மகா கும்பமேளா 144 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் மறக்காமல் நடத்தப்பட்டுவருகிறது.

ஆதிமனிதன் காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில் நிர்வாணமாகத் திரிந்தான். பின்னர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் சிந்திக்கப் பழகி, உடை அணிந்து நாகரிகம் எய்திய இந்த நூற்றாண்டிலும் மனிதன் இப்படி நிர்வாணமாகத் திரிவது எந்தவிதத்தில் நியாயமாகும்? தெருவில் நிர்வாணமாகத் திரியும். சராசரிமனிதனை இந்திய குற்றவியல் சட்டம் 'தொந்தரவு' (ரூரளைநஉந) என்ற பெயரில் கைது செய்து தண்டிக்கிறது. நிர்வாணப் படங்கள் வெளியிடும் பத்திரிகைகளை 'ஆபாசம்' (டீளெநஉந) என்று குற்றஞ்சாட்டி தண்டிக்கிறது. ஆனால், பக்தி என்ற போர்வையில் திரிந்து கொண்டிருக்கும் இந்த நிர்வாணிகளைச் சட்டம் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்தியர்களின் நிர்வாணக் கோலங்கள் போதாதென்று மெக்ஸிகோ நாட்டு இளம் பெண்ணொருத்தி வேறு நிர்வாணமாக வந்து

## பொறுக்கிகளின் 'புனிதப் போராட்டம்'



பிரபல திரைப்பட இயக்குரான தீபா மேத்தா 'வாட்டர்' என்ற பெயரால் அலகாபாத் கும்பமேளா, காசியில் பெண்கள் படும் வேதனைகள் போன்ற பிரச்னைகளை வைத்து ஒரு திரைப்படம் எடுக்க விரும்பினார். இதற்கான படப்பிடிப்பு காசியில் நடந்தபோது சங்க பரிவாரக் கூட்டங்களால் செய்யப்பட்டவன் முறைகளால் அப் படப்பிடிப்பு நடத்தவிடாமல் நிறுத்தப்பட்டது. மேலும் அரசே, 'இந்தப்படம் இந்து மதக் கலாச்சாரத்துக்கும் பண்பாடுகளுக்கும்' எதிரானது என்று அறிவிக்கப்பட்டு தடை விதிக்கப் பட்டது. ஆனால், இந்த அநாகரிகம் மட்டும் எந்த விதத்தில் கலாச் சாரப் பெருமைகளைத் தூக்கி நிறுத்தும் என்பதை சம்பந்தப் பட்டவர்கள் உணர்வார்களா?

தவிரவும் ஒரு குக்கிராமத்தில் கூட பொதுக் குளத்தில் குளிக்கும் ஆண்களும் பெண்களும் தனித்தனியே குளிப்பார்கள். அதுவும் தங்களை முழுமையாக நிர்வாணப்படுத்திக் கொள்ளாமல் நாகரிகத்தைக் கையாள்வார்கள். ஆனால் இங்கோ ஆண்களும் பெண்களும் அவிழ்த்துப் போட்டு விட்டு ஒன்றாகக் குளிப்பது பண்பட்ட எந்த மனிதனையும் அதிர்ச்சியடையச் செய்கிறது. இது கடவுள் உணர்வா அல்லது கடவுளின் பெயரால் நெறி தவறச் செய்யும் காம உணர்வா என்பதை அரசும், சம்பந்தப்பட்டவர்களும் உணராதிருப்பது வெட்கக் கேடானது. இந்த அபத்தமான நிகழ்வை உடனே அரசு தடை செய்ய வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



அனைவரையும் அதிரடித்தாள். தன்னைப் படம் பிடித்த இளைஞர்களிடம் தலா ரூ.50/- வேறு வசூலித்தாள்.

நாகரிகமடைந்த எந்த மனிதனாலும் சகித்துக் கொள்ள முடியாத இந்த அநாகரிகமான காட்சிகள் கும்பமேளாவில் அரங்கேறியதை இந்திய அரசும், உ.பி. அரசும் கண்டு ரசித்ததுதான் மிகப் பெரிய கொடுமை. மனிதனை மிருகத்தின் நிலைக்குத் தள்ளிக் கொண்டு போகும் இந்த நசிவுக் கலாச்சாரத்தை அரசு வேண்டுமானால் 'இந்துத்வம்' 'இந்துமதக் கலாச்சாரம்' 'அய்யாயிரம் வருட அதிர்வுகள்' என்றெல்லாம் சொல்லி பூரித்துக் கொள்ளலாம். ஆனால், அறிவுடைய எந்த மனிதனும் இதைச் சகித்துக் கொள்ளமாட்டான். எனவே, அரசு இது போன்ற அவலங்களைப் பகுத்தறிவின் பெயரால் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, குறைந்தபட்சம் சராசரி அறிவின் அடிப்படையிலாவது தடை செய்ய வேண்டும்.

– சியமளன்

## கிருமிக்கும் மானம் உண்டு...



அமெரிக்க எழுத்தாளர் மார்க் ட்லைன் ஒரு தடவை இந்தியாவுக்கு வந்திருந்தார். அப்போது அவர் கங்கை நதியைப் பார்க்க நேர்ந்தது. கங்கை நீரின் அசுத்தத்தைப் பார்த்து திடுக் கிட்ட அவர்,

'இதுவா புனித நதி. இத்தனை அசுத்த மாக இருக்கும் இது எப்படி புனித நீராகும்? என்று கேட்டார்.

அதற்கு அருகில் இருந்தவர், 'கங்கை நீரில் கிருமிகள் ஏதும் இல்லை என்று விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது தெரியுமா?' என்றார்.

அதற்கு மார்க் ட்லைன்,

உண்மைதான். மானமுள்ள எந்தக் கிருமியும் இந்த நதியின் நீரில் உயிர் வாழச் சம்மதிக்காது' என்றார்.





படிப்பகம்

www.padippakam.com



## எம்.ஜி.சுரேஷ்

பிரிட்டன் காலனியாதிக்கத்திலிருந்து அமெரிக்கா தன் சுதந்திரத்தை மீட்டெடுத்து விழாக் கொண்டாடிய போது, அதே அமெரிக்க மண்ணில் இன்னொரு இனம் தனது அடிமை விலங்குகளை ஒருதரம் உதறிப் பார்த்துக் கொண்டது.

உலகப்புகழ்பெற்ற ஹாலிவுட் நடிகரான மார்வன் பிராண்டோவுக்கு அவரது சிறந்த நடிப்புக்காக ஆஸ்கர் பரிசு வழங்கப்பட்ட போது அதைவாங்க மறுத்து நிராகரித்தார்.

'அமெரிக்காவில் ஓர் இனத்துக்கு அநீதி இழைக்கப்படுகிறது. இதை எதிர்த்து நான் ஆஸ்கர் பரிசை நிராகரிக்கிறேன்' என்று அறிவித்தார். அப்போதுதான் அந்த இனத்தைப் பற்றிய கவனம் உலகின் கண்களுக்குக் கொண்டுவரப்பட்டது.

அந்த இனம்தான் அமெரிக்க இந்திய மக்கள் இனம். கொலம்பஸால் இந்தியர்கள் என்று தவறுதலாக சரித்திரத்தில் அடையாளப் படுத்தப்பட்ட இந்த ஆதி அமெரிக்க இனத்தினர்; வெள்ளை இனத்தவர் அமெரிக்காவில் கால் பதித்த நாளிலிருந்தே சுதந்திரத்துக்குப் போராடி வருகின்றனர்.

மெக்ஸிகோவில் 'ஜபாடிஸ்டா தேசிய விடுதலை ராணுவம்' என்ற பெயரில் இந்த மக்கள் ஒன்று திரண்டு அமெரிக்க அரசுடன் யுத்தம் தொடுத்த போதுதான் அமெரிக்க அரசு விழித்துக் கொண்டது. அது நாள்வரை படிப்பறிவற்ற, பின்தங்கிய சுரண்டச் சுரண்ட சுளிக்காத முகம் கொண்ட இனமாக இருந்த இந்த மக்கள் போராளிகளாக மாறிய அதிசயத்தை உலகம் கண்டது. அமெரிக்காவின் பலபகுதிகளில் இந்த ஆதி அமெரிக்க மக்கள் வாழ்கின்ற போதிலும், மெக்ஸிகோவில் அதிலும் தென்மெக்ஸிகோ மாநிலமான 'சியாபாஸ்' என்னுமிடத்தில் தான் மிகுந்த வலிமையோடு இருக்கின்றனர். மற்ற

●●

படிப்பறிவற்ற, பின்தங்கிய சுரண்டச் சுரண்ட சுளிக்காத முகம் கொண்ட இனமாக இருந்த இந்த மக்கள் போராளிகளாக மாறிய அதிசயத்தை உலகம் கண்டது. அமெரிக்காவின் பலபகுதிகளில் இந்த ஆதி அமெரிக்க மக்கள் வாழ்கின்ற போதிலும், மெக்ஸிகோவில் அதிலும் தென்மெக்ஸிகோ மாநிலமான 'சியாபாஸ்' என்னுமிடத்தில் தான் மிகுந்த வலிமையோடு இருக்கின்றனர். மற்ற இடங்களில் இவர்களது எழுச்சிகளைச் சுலபமாக நசுக்கும் அமெரிக்க அரசு இந்த மாநிலத்தில் மட்டும் என்ன செய்வது என்று புரியாமல் விழிக்கிறது.






படிப்பகம்

www.padippakam.com

இடங்களில் இவர்களது எழுச்சிகளைச் சுலபமாக நசுக்கும் அமெரிக்க அரசு இந்த மாநிலத்தில் மட்டும் என்ன செய்வது என்று புரியாமல் விழிக்கிறது.

'ஜபாடிஸ்டா' இயக்கத்துக்கும் மற்ற போராளி இயக்கங்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால் இந்த இயக்கத்துக்குத் தலைவர் என்று யாரும் கிடையாது. ஈழ விடுதலை இயக்கத்துக்கு ஒரு பிரபாகரன் மாதிரியோ, குர்திஸ்தான் விடுதலை ராணுவத்துக்கு அப்துல்லா ஒசலான் மாதிரியோ இவர்களுக்கு ஒற்றைத் தலைவர் என்று யாருமில்லை. இவர்கள் குழுக்களாக செயல்படுகின்றனர். குழுக்கள் தங்களுக்குள் விவாதித்து செயல் திட்டங்களை வகுக்கிறது அதன்படி செயல்படுகிறது.

'முரட்டுத்தனமான' 'பண்பற்ற' 'புராதன போர்க்குணம் மிக்க' போராளிகள் என்று இவர்களைப் பற்றி வர்ணிக்கும் அமெரிக்க ஐரோப்பிய அரசுகள் தற்போது இந்த இயக்கத்தினர் நவநாகரிக யுகத்திற்கேற்ப ஒரு இணைய தளத்தையும் பெற்றிருப்பது கண்டு அதிர்ந்து போயிருக்கிறார்கள் 'சொற்போர்' என்ற பெயரில் அந்த இணையதளம் திறக்கப்பட்டு, அதில் 'ஜபாடிஸ்டு'களின் செய்தி அறிக்கைகள் உலகை வலம் வர ஆரம்பித்திருக்கின்றன. இதன் மூலம் சர்வதேசிய அளவில் பத்திரிகையாளர்கள், அரசியல் வாதிகள், பொதுநல நோக்கர்களின் ஆதரவையும், பரிவையும் இவர்கள் பெற ஆரம்பித்துள்ளனர்.

அமெரிக்க, தனது கொல்லைப் புறத்தில் தொழுவத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்த இந்த அநாமதேயங்கள் இப்படி அரசியல் ரீதியாகப் புகழ்பெற்று வருவது கண்டு அஞ்சுகிறது. அவ்வப்போது 'ஜபாடிஸ்டு'கள் ஆங்காங்கே கிளர்ச்சி நடத்துவதும் அதை அடக்க அமெரிக்காவின் ராணுவம் அங்கெல்லாம் லாரிகளில் போய் வருவதும் அன்றாட நிகழ்ச்சி நிரலாகிவருகிறது.

●●

**மண்ணின் மைந்தர்களின் விடுதலை உணர்வை அடக்க அமெரிக்க ராணுவம் ஏவிவிடப்படுகிறது.**

●●



'அமெரிக்க மண்ணில் வந்தேறிகளான வெள்ளை இனத்தவரும், அவர்களால் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட கறுப்பு இனத்தவரும் கூட இந்த நவீன யுகத்தில் செல்வாக்குடனும் வசதிகளுடனும் வாழ்வின் மதுரங்களைத் துய்த்து வரும் போது மண்ணின் மைந்தர்களான நாங்கள் மட்டும் வறுமையில் வாடுகிறோம். இதற்கு என்ன பாவம் செய்தோம்?' என்று குமுறுகிறார்கள் 'ஜபாடிஸ்டு'கள்.

'சியாபாஸ்' என்பது மெக்ஸிகோவின் வறுமையான பகுதி. ஏற்கெனவே அமெரிக்காவின் இதர பகுதிகளில் வறுமையிலும் புறக்கணிப்பிலும் வாடும் அமெரிக்க சுதேசிகள் இந்தப் பகுதியில் அதன் தீவிரத்தாக்குதலையும், உக்கிரத்தையும் அனுபவித்து வருகின்றனர். இதனால்தான் இந்த போராடும் இயக்கத்துக்குச் 'சியாபாஸ்' தலைமை நிலையமாக மாறிவிட்டது.

'எங்கள் உடனடி லட்சியம் வந்தேறிகளுக்குச் சமமான சமூக அந்தஸ்தும் சத்துணவும்' என்று அறிவிக்கும் இந்த மெக்ஸிகோக்காரர்களின் மக்கள் தொகையில் 67 விழுக்காட்டினர் ஊட்டச் சத்துக் குறைவான உணவையே உண்டு வருகிறார்கள் என்று அறிக்கைகள் கூறுகின்றன.

எகிப்து, மெசபடோமியா, சிந்து சமவெளி நாகரிகங்களுக்குச் சமமான மாயன்' நாகரிகம் எங்களுடையது. 500 வருடகால வெள்ளையர்களின் காலனியாதிக்கம் எங்களைக் கிரேக்க அடிமைகளைப் போல் ஒடுக்கி விட்டது. "முதல் உலக நாடுகள் என்று தங்களை அறிவித்துக் கொள்ளும் இவர்கள் தங்கள் பொருளாதாரத்தை 'முதல் உலகநாடுகளின் பொருளாதாரம்' என்று பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள். ஆனால் இதே முதல் உலகப் பொருளாதார நாட்டில் எங்கள் பொருளாதாரம் மட்டும் மூன்றாம் உலகப் பொருளாதாரத்தைவிட மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறதே. ஒரே மண்ணில் இப்படியொரு பொருளாதார ஏற்றத்தாழ்வா?' இதைத்தான் ஜெஃபர்ஸனும் வாஷிங்டனும் விரும்பினார்களா?' என்று குமுறுகிறார் 'அர் கில்லா' என்ற சுதேசி பத்திரிகையாளர்.

உலக சுதந்திரம், உலக சமாதானம் பற்றி கவலையுடன் பெருமூச்சு விடும் அமெரிக்க அரசு இந்த உள்ளூர் சுதந்திரம் பற்றிக் கவலைப்படாமல் இருப்பது ஒரு எதிர்மறை வேடிக்கை (IRONY) என்று தான் சொல்ல வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சின் அலைகள்

## தேவை கருவறையல்ல கழிப்பறை!

கேட்பதற்கு இடிமுழக்கமாக இருந்தாலும் சிந்திக்க முடிந்தால் தந்தை பெரியாரின் மணிமொழிகள் இனிய சங்கீதமாகிவிடும்.

கடவுளைக் கற்பித்தவன்
முட்டாள்
கடவுளைப் பரப்பியவன்
அயோக்கியன்
கடவுளை வணங்குகிறவன்
காட்டுமிராண்டி.

-என்கிற புகழ் பெற்ற வரிகள் இப்போது முன்னைவிட அதிகமான அர்த்த பாவங்களுடன் நெஞ்சில் கன்னல் பறக்கின்றன.

கும்பமேளா என்கிற பெயரில் பிணங்களும் புழுக்களும் மிதந்து செல்லும் சுகாதாரக் கேடான கங்கைக் கரையில் ஆடை முதல் அறிவு வரை அனைத்தையும் அவிழ்த்துப் போட்டுவிட்டுத் திரியும் ஒரு காட்டுமிராண்டிக் கூட்டம் சாதுக்கள் என்கிற பெயரில் ஜெய்ராம் என்கிற முழக்கங்களுடன் இந்தியாவின் 'தரம்' 'தகுதி' யை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

ஆடை, அணிவதே கடவுளுக்கு எதிரான கலகம். அதுதான் மனிதனின் முதல்பாவம். உலகம் பாவிகள் மயமாகிக் கொண்டிருக்கிறது. பாவிகளே எங்கள் பாதாரவிந்தங்களில் பணிவதைத் தவிர உங்களுக்கு விமோசனம் இல்லை என்கிற பாவனையில் இந்தக் காட்டுமிராண்டிகள் ஊர்வலம் செல்வதும், அதைப் பக்தி சிரத்தையுடன் பாரதப் பத்தினிகள் வழிபடுவதும் நாகரிக உலகில் அனுமதிக்க முடியாத குற்றங்கள்.

மத நம்பிக்கையில் அரசியல் நடத்தும் பாரதீய ஜனதா, இந்தக் காட்டுமிராண்டி விழாவில் உற்சாகம் அடைந்தால் புரிந்து கொள்ள முடிகிறது.

மத நம்பிக்கையற்றவர்கள் என்று கருதப்பட்ட மார்க்சியர்களும், 'கடவுள் எங்களுக்கு விரோதியல்ல' என்று அறிவித்து இந்தக் காட்டுமிராண்டித் தனத்துக்கு மௌன வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்கள்.



ஆனாரூனா



படிப்பகம்

www.padippakam.com



ராம ராஜ்யத்தின் சிற்பிகள்

மதவாத எதிர்ப்பின் மூலமாவது இழந்த பதவியையும் செல்வாக்கையும் மீட்டெடுக்க ஆவலாகி கொண்டலை யும் காங்கிரஸ் கட்சி, அத்வானி கும் பலை விட ஆர்வத்துடன் இந்தக் காட்டுமிராண்டிகளுடன் கலந்து கொண்டது.

ஆடை களைந்த சாதுக்களும் ஆடை அணிந்த பாவிகளும் மந்தைக் கூட்டம்போல் சங்கமத்தில் சங்கமிக் கும் இந்தக் காட்டுமிராண்டி விழா வில் இந்து மதத்துக்கே சம்பந்தமில் லாத இத்தாலி கிறிஸ்தவப் பெண் மணி சோனியாவுக்கும் பாவ விமோ சனம் பெறும் ஆசை வந்ததில் காங் கிரஸ் கட்சிக்குச் சாபவிமோசனம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சி.

இந்தக் காட்டுமிராண்டிவிழா அரச மரியாதைகளுடன் நடத்தப்படுகிறது. எல்லா அரசியல் கட்சிகளுமே 'நாங்கள் காட்டுமிராண்டிகளுக்கு எதிரிகள் அல்லர்' என்று காட்டுவதன் மூலம் 'இந்து' உணர்வை அறுவடை செய்யமுடியுமா என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றன.

கடவுள் நம்பிக்கை என்பது ஒரு தனிமனிதனின் சொந்த விவகாரமாக இருப்பதுகூட, மனிதநேய அடிப்படையில் அனுமதிக்க முடியாத தவறாகும்.

போதைப் பழக்கம் என்பது தனி மனித விருப்பம் தான். அது என் சுதந்திரம்-என்றுகூற போதை அடிமை வாதிடலாம். ஆனால் போதைக்கு அடிமை உங்கள் மகனாக இருந்தால்? உங்கள் மகளாக இருந்தால்? - அப்போதும் தனிமனித சுதந்திரத்தில் தலையிடக் கூடாது என்று விட்டொதுங்கி விடுவீர்களா?

••

ஆடை, அணிவதே
கடவுளுக்கு எதிரான கலகம்.
அதுதான் மனிதனின்
முதல்பாவம் என்கிற
பாவனையில் இந்தக்
காட்டுமிராண்டிகள்
ஊர்வலம் செல்வதும், அதைப்
பக்தி சிரத்தையுடன் பாரதப்
பத்தினிகள் வழிபடுவதும்
நாகரிக உலகில் அனுமதிக்க
முடியாத குற்றங்கள்.

••

கடவுள், மத நம்பிக்கைகளும் ஒரு வித போதைப் பழக்கந்தான். போதைப் பழக்கத்தில் இறந்தவர்கள் எண்ணிக் கையை விட கடவுள் நம்பிக்கையால் இறந்தவர்கள் எண்ணிக்கை அதிக மானது.

போதைப் பழக்கத்தால் மூண்ட கலகங்களைவிட மத நம்பிக்கைகளால் மூண்ட கலவரங்கள் ஏராளம்.

போதைக்கு அடிமையானவன் எந்த எல்லைக்கும் செல்வான். எந்தக் குற்றத்தையும் செய்வான்.

மத வெறியனும் அப்படித்தான். கஞ்சா அடிப்பான்; கத்தி பிடிப்பான்; தனது கடவுளையும் வெட்டிச் சாய்ப்பான்.

கடவுள் தனது கட்டுப்பாட்டுக்கு வந்துவிட்டபிறகு, தனக்கு விருப்பமான பெயரிலேயே 'அவன், அல்லது அது' மதவெறியனால் அனுமதிக்கப்படும்.

எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் கடவுள் ஒருவனே என்றா சொல்கிறீர்கள்? தவறு. அது கடவுள் நம்பிக்கை



படிப்பகம்

www.padippakam.com



இல்லாதவன் சொன்னது. ராமனே கடவுள் வேறு எந்தப் பெயரில் வந்தாலும் வெட்டுவோம் என்கிறான் ஒரு மதவெறியன்.

இதே தொனியில் மற்ற மத வெறியனும் உளறுகிறான்.

மதவெறியர்களின் மன எரிச்சலில் மண்ணை நனைப்பதோ மனித இரத்தம்.

தனிமனித சுதந்திரத்தின் பெயரால் இந்தக் கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியுமா?



புனிதம் பெற்ற புண்ணியவதி

போதைப் பழக்கத்திலிருந்தும், மத போதையிலிருந்தும் மனிதரை விடுவிப்பது தான் அறிவியல் அடிப்படையில் மனிதாபிமானமாகும்.

இங்கோ போதைப் பிரியர்களுடன் சேர்ந்து 'கூத்தடிப்பதிலேயே காரியவாதிகள்' எல்லாரும் கண்ணாயிருக்கிறார்கள்.

கடவுள் - மத நம்பிக்கையின் பெயரால் மனிதனின் கீழ்த்தரமான உணர்வுகள், ஆசைகளையெல்லாம் தீர்த்துக் கொள்ள முடிகிறது என்பதிலேதான் பக்தியின் ரகசியம் இருக்கிறது. அடக்கமுடியாத அடையமுடியாத காமவெறி மத நம்பிக்கையின் பெயரால் 'பவித்ரம்' பெற்று விடுகிறது. மத நம்பிக்கையின் பெயரால் பிற மதத்தானைக் கொல்வது புனிதப் போராகிறது.

மடையர்களின் புகலிடமான மதத்துக்குள் 'அயோக்கியர்களின் புகலிடம்' என்று வர்ணிக்கப்பட்ட அரசியலும் புகுந்து கொள்வது மனித குலத்துக்கே ஆபத்தானதாகும்.

கங்கைக் கரையில் மடையர்களும் அயோக்கியர்களும் ஒன்று கூடி 'இரத்தம் குடிக்க'த் தினவெடுத்துக் கத்தியிருக்கிறார்கள்.

"அடுத்த ஆண்டு மார்ச் 12க்குள் ராமர் கோயில் கட்டுவதற்குத் தடையாயுள்ள அனைத்து அம்சங்களும் அகற்றப்பட வேண்டும். அரசு அதைச் செய்யத் தவறினால் சாதுக்கள் அதைச் செய்து முடிப்பார்கள்." என்று கங்கைக் கரையில் கூடிய காட்டுமிராண்டிகள் அறைகூவல் விடுத்திருக்கிறார்கள்.

சட்டங்கள், தீர்ப்புகள் எல்லாம் எங்களுக்குச் சாதகமாக இருக்கவேண்டும். நேர்மை, நீதி, ஒரு பாற்கோடாமை என்று தயக்கம் காட்டினால், சட்டம், நீதிமன்றம், நாடாளுமன்றம் அனைத்தையும் தரைமட்டமாக்குவோம் என்று பகிரங்கமாக அறிவிக்கிறார்கள் காட்டுமிராண்டிகள்.

'சங்கப் பரிவாரங்கள்' மாத்திரமல்ல, சட்டத்தின் ஆட்சியே ஜனநாயகத்தின் புரட்சி' என்று தம்பட்டமடிக்கும் பிற கட்சிகளும் காட்டுமிராண்டிகளின் இந்த அச்சுறுத்தலைக் காதில் விழவில்லை என்பதுபோல் காட்டிக் கொள்கின்றன.

கடவுளின் பெயரால் வயிறு வளர்க்கும் ஒரு சோம



படிப்பகம்

www.padippakam.com

பேறிக் கூட்டம் மதத்தின் பெயரால் அரசை மிரட்டுகிறது.

இந்த ஆபாச, வன்முறைக் கூட்டத்தை ஒடுக்க வேண்டிய மத்திய, மாநில அரசுகள் மதசுதந்திரம் என்கிற பெயரில் அவர்களுக்குப் பாதுகாப்பளித்துப் பெருமைப்படுகின்றன.

ஏனென்றால் இந்தக் காட்டுமிராண்டிகளைக் கொண்டுதான் ராமராஜ்யம் - அதாவது ஆரிய சாம்ராஜ்யம் நிறுவவேண்டும்.

இஸ்லாமிய வழிபாட்டுத் தலத்தை இடித்துவிட்டு அந்த இடத்திலே ராமருக்குக் கோயில் கட்ட வேண்டும் என்று விரும்புவது இந்திய உணர்வின் வெளிப்பாடு என்று அறிவித்த பிரதமரிடமிருந்து ஜெய்ராம்' என்று முழக்கமிடும் நிர்வாண ரௌடிகளை அடக்கும் நேர்மை உணர்ச்சியை எதிர்பார்க்க முடியாதுதான்.

எதிர்க்கட்சிகள்?

மதவாதத்தை எதிர்த்து, இந்தியாவையே புனிதப்படுத்தி அலங்காரம் செய்யப்புறப்பட்டிருக்கும் அகில இந்தியக் கட்சிகளோ இனி ஒரு கோயில் இந்த நாட்டில் வேண்டாம். ஏற்கனவே இருக்கிற கோயில்களில் ஏற்கனவே இருக்கிற கடவுள்கள், கடவுள்களின் மனைவிகள், வைப்பாட்டிகளுக்குப் படையல் செய்தே பாழாய்ப் போன மக்களுக்கு மூத்திரம் பெய்ய ஒரு கழிவறை இல்லை. கோயில் கட்டுவதை விடக் 'கக்கூஸ்' கட்டுவதே அவசரத்தேவை என்று மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விவேகமான செயல்களில் ஈடுபடுவதில்லை. ஏனெனில் கடவுள், மத மூடநம்பிக்கைகளில் முங்கிக் குளிக்காத ஒரு கட்சி இங்கே இல்லை.

இந்துக்களின் வாக்குகளைப் பெறுவது எப்படி? இஸ்லாமியரின் வாக்குகளைப் பெறுவது எப்படி என்பதுதான் ஒவ்வொரு கட்சிக்குமுள்ள ஒரே பிரச்னை.

இன்று சங்கப் பரிவாரங்களை எதிர்த்து முழக்கமிடும் காங்கிரஸ்கட்சிதான் இந்த 'ராட்சச மிருகத்தை' வளர்த்து விட்டது.

இந்தியாவுக்குப் புதிய கொடி கிடைத்தவுடன் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் கம்யூனிஸ்ட்டுகளையும் பிறகு பெரியாரிஸ்டுகளையும் ஒடுக்குவதில்தான் ஆர்வமும் தீவிரமும் காட்டியது. இந்து மகாசபையின் அயோக்கியத் தனங்களைக் காண்பதையே தவிர்த்தது. அவர்களுக்குத் தெரியும். இந்து மகாசபை ஜனசங்கம் பாரதிய ஜனதா என்று எதிரணியில் நிற்கும் இயக்கமும் சரி, காங்கிரசும் சரி, இரண்டும் ஒரு தாய்மக்களே. பாரதிய ஜனதா தீவிரப் பார்ப்பன இயக்கம் என்றால் காங்கிரஸ் மிதவாதப் பார்ப்பன இயக்கம்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் ஆதாயம் பார்ப்பனர்களுக்கே!

பாரதிய ஜனதா, காங்கிரஸ் - இரு கட்சிகளும் அரசியல் அரங்கில் இருக்கும் வரை இந்தியாவில் மதக் கலவரங்கள் ஓயப் போவதில்லை.

இங்கே இந்துக்களைக் காக்க இயக்கங்கள் இருக்கின்றன. இஸ்லாமியரைக் காக்க இயக்கங்கள் இருக்கின்றன. கிறிஸ்தவர்களைக் காக்க இயக்கங்கள் இருக்கின்றன. மனிதரைக் காக்க யார் உண்டு?

கடவுளை மற; மனிதனை நினை என்கிறார் பெரியார்!

மதங்களை மாய்ப்போம்; மானுடம் காப்போம்! ●

## அங்கேயும் 'கோடீஸ்வரன்' நிகழ்ச்சி



*தமிழ்நாடு தேர்வாணையம் 17.12.2000இல் ஒருங்கிணைந்த சார் நிலைப் பணியாளருக்கான தேர்வை நடத்தி இருக்கிறது.*

*அதற்கென்ன என்கிறீர்களா? அதில் வில்லங்கம் முகம் காட்டிச் சிரிக்கிறது.*

*தனியார் தொலைக்காட்சிகள் தாம் பாமரத்தனமான கேள்விகளைக் கேட்டு அறிவு வளர்ச்சிக்கு அரிய(!)தொண்டாற்றி தமது வியாபாரத்தைப் பெருக்கி வருகின்றன. என்றால் அரசுத்துறையும் இந்த அநியாயத்தைச் செய்வதா?*

*தேர்வுத்தாளில்*

*160-வது கேள்வி சரியா? தவறா?*

*IV - "குச்சி குச்சி ராக்கம்மா*
*பொண்ணு வேணும்"*

*எனப்பாடியவர் டாக்டர் வானமாமலை*

*டாக்டர் வானமாமலை என்பவர் தமிழகம் அறிந்த 'ஆய்வுலக மேதை. அவரை மோசமான ஒரு திரைப்படப்பாட்டை எழுதியவராகக் கொச்சைப்படுத்த அரசுத் தேர்வாணையத்துக்கு எப்படி தைரியம் வந்தது என்று தெரியவில்லை.*

*எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தால் என்ன? நாங்கள் இப்படித்தான் செய்வோம் என்கிற போக்கு சரியல்ல தேர்வில் பங்கேற்ற பூண்டி ஆ.ஜீவா என்னும் உணர்வாளர் தமது கண்டனத்தைத் தெரிவிக்கிறார்.*



படிப்பகம்


www.padippakam.com

நவ. 1 - 15 '99

சமுதாய அரசியல் மாதமிருமுறை

விலை ரூ. 5

# நந்தன் வழி



# தூக்குத் தண்டனை தேவையற்றது

காலம் போற்றும்

படிப்பகம்

www.padippakam.com

## கொக்கோ கோலா பெப்சி கோலா

# குடித்தால் மரணமா?

**இ**ரண்டு மாதங்களுக்கு முன்னால் டெல்லி பல்கலைக் கழக மாணவரிடையே யார் அதிகக் கோக்கோ கோலா குடிப்பவர் என்று போட்டி நடந்தது. ஒரு மாணவன் 8 பாட்டில் கோக்கோ கோலோ குடித்து வென்றான். ஆனால் உடனே மயங்கி விழுந்தான். அவனுடைய ரத்தத்தில் அளவுக்கதிகமாக கார்பன் டை ஆக்ஸைடு சேர்ந்து விட்டது. தீவிர சிகிச்சைக்குப் பிறகே உயிர் பிழைத்தான். அந்த டெல்லி பல்கலைக் கழக முதல்வர் பல்கலைக்கழக வளாகத்திற்குள் எல்லாவித ரசாயனக் குளிர் பானங்களையும் தடை செய்து விட்டார்.

இன்று இந்திய மக்கள் குடித்துக் கொண்டாடும் சோமபானம் - சுராபானம் கொக்கோ கோலா! பெப்சி கோலா! சின்னத்திரைகளில் அகலக்கால் பரப்பி பேயாட்டமாடும் பெப்சி கோலாவையும், குரங்காட்டமாடும் கொக்கோ கோலாவையும் பற்றி சமூக அக்கறையுள்ள விஞ்ஞானிகள் ஆய்வுக்கூடங்களில் மேற்கொண்ட துல்லியமான ஆராய்ச்சியின் முடிவுகள் நம்மை அதிர வைக்கின்றன. இந்த முடிவுகள் இதயத்தை அல்ல நம் உயிரையே உறைய வைக்கின்றன!

மனித உடலில் எலும்புகளின் வளர்ச்சி 30 வயதோடு நின்று விடுகிறது. அதன் பிறகு எலும்புகள் கரையத் தொடங்குகின்றன. ஆம். நாம் உட்கொள்ளும் உணவுப் பொருட்களிலும், திரவங்களிலும் உள்ள அமிலங்கள் நமது எலும்புகளைக் கரைத்து விடும். இந்த அமிலத் தன்மையின் (Acidity) அளவைப் பொறுத்து ஆண்டுக்கு 8% முதல் 18% வரை நமது எலும்புத் திசுக்கள் (Bone Tissues) கரையத் தொடங்குகின்றன. கோகோ கோலாவில் உள்ள அமிலத் தன்மையின் அளவு pH 3.4! நமது எலும்புகளையும் பற்களையும் கொஞ்சம் கொஞ்சமாய்க் கரைப்பதற்கு இந்த அளவு போதுமானது!



யாராவது உடைந்த பல் ஒன்றை ஒரு பெப்சி கோலா பாட்டிலில் போட்டு விட்டு, பத்து நாட்கள் கழித்துப் பாருங்கள். அந்தப் பல் கரைந்து காணாமல் போயிருக்கும்!

எலும்பும் பல்லுந்தானே! போனால் போகட்டும்.. என்னால் பெப்சியையும் கோக்கையும் பிரிந்து இருக்க முடியாது என்பவர்களுக்கு இன்னொரு அதிர்ச்சிச் செய்தி! கரைந்த எலும்புகளில் இருந்தும் பற்களில் இருந்தும் வெளியேறும் கால்சியம், மக்னீசியம், பொட்டாசியம் போன்ற கனிமங்கள் முற்றுமாக சிறுநீர், வேர்வை மூலமாக வெளியேறினால் கவலையில்லை. ஆனால் பல சமயங்களில் ரத்த குழாய்களான தமனிகளிலும், சிரைகளிலும், தோலிலும், முக்கிய உடல் உறுப்புகளிலும் இந்தக் கனிமங்கள் உருண்டு திரண்டு கற்களாகத் தங்கி விடும். விளைவு? சிறுநீரகக் கோளாறு! இதைத்தான் Kidney Stones என்கிறார்கள். பெரிய பெரிய கோப்பைகளை வழங்கும் பெப்சியும் கோக்கும் மனிதர்களுக்குத் தருவது சின்னச் சின்ன கற்கள்! Kidney Stones!

கோக்கும் பெப்சியும் தன்னகத்தே விஷத் தன்மை கொண்டது மட்டுமல்லாமல் நாம் உண்ணும் உணவையும் விஷமாக்கி விடுகின்றன. எப்படி? நம் இளைஞர்களும் ஏன் பெரியவர்களும் கூட உண்ணும்போதே இடையிலும், உண்டு முடித்த பிறகும் பெப்சியையும் கோக்கையும் அருந்துவதை ஒரு நாகரிகச் செயலாகவே செய்து வருகிறார்கள்.

நாம் உண்ணும் உணவு செரிமானம் ஆக 37⁰ செல்சியர்ஸ் வெப்பம் தேவை. ஆனால் பெப்சியும் கோக்கும் குளிர் பானங்கள். பெரும்பாலும் 0⁰ செல்சியஸ் குளிர்ச்சியுடையவை. இவை உணவோடு வயிற்றுக்குள் சென்று, தேவையான அளவான 37⁰ செல்சியசை வெகுவாகக் குறைத்து விடுகின்றன. இதனால் நாம் உண்ட உணவு முழுதும் செரிக்காமல், மிகுதியானவை நுரைத்துப் பொங்கிப் புளித்துக் காடியாகி விடுகிறது. இதனால் உண்ட உணவு அழுகி,

(தொடர்ச்சி பின் உள் அட்டையில்)

படிப்பகம்

www.padippakam.com

(முன் உள் அட்டைத் தொடர்ச்சி)

நச்சுத்தன்மை கொண்ட வாயுக்கள் வெளியாகி, இவை யனைத்தும் சேர்ந்து நோய்க்கிருமிகளைப் பிறப்பிக்கும் Toxins என்ற கொடிய நஞ்சாக மாறிவிடுகிறது. இந்த நஞ்சு ரத்தத்தில் கலந்து உடலின் அனைத்துத் திசுக்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. எல்லாத் திசுக்களி லும் 'தன்மயமாக்கலுக்குப்' பதிலாக ''நோய் மயமாக்கலே'' நிகழ்கிறது.





மனதைத் திடப்படுத்திக் கொள் ளுங்கள். மாவீரன் நெப்போலி யனைக் கொன்ற விஷம் கோக்கோ கோலாவில் உள்ளது. எதிலின் கிளைக்கால் (Ethlylene Glycol) என்ற வேதிப்பொருள் சிறிய அளவில் 1 1/2 லிட்டர் கோக்கோ கோலா பாட்டிலில் உள்ளது. குளிர்பதனப் பெட்டியில் இருக்கும் கோக்கோ கோலோ பானம் $0^0$ சென்டிகிரேடில் உறைந்து போய்விடாமல் திரவ நிலையிலேயே வைத்திருக்க உதவும் வேதிப்பொருள்தான் இந்த எதிலீன் கிளைக்கால். இது ஒரு மெல்லக்கொல்லும் விஷம் (ஆங்கிலத்தில் Slow Poison) மாவீரன் நெப்போலியன் மரணத்தின் மர்மம் வெகுநாட்கள் விடுவிக்கப்படாமலேயே இருந்தது. அகிலத்தையே கிடுகிடுக்க வைத்த அந்த இணையில்லா வீரன் இறுதி நாட்களில் எலியையும் பூனையையும் கண்டால் கூட நடுநடுங்கிச் செத்தான். இறுதியில், அவன் தலை முடியைச் சோதித்த விஞ்ஞானிகள் அவன் 'ஆர்சனிக்' என்ற மெல்ல கொல்லும் விஷம் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கப்பட்டு சாகடிக்கப்பட்டான் என்ற உண்மையைக் கண்டறிந்து உலகுக்குச் சொன்னார்கள். அந்த 'ஆர்சனிக்' நஞ்சுக்கு இணையானது தான் கோகோ கோலாவில் உள்ள இந்த எதிலின் கிளைக்கால் என்ற Slow Poison. நீங்கள் ஒரு மணி நேரத்திற்குள்ளாக 4 லிட்டர் கோகோ கோலா பானத்தைக் குடித்து முடித்தால் மரணம் மகிழ்வோடு உங்களை அணைத்துக் கொள்ளும்!

*- சீதையின் மைந்தன்*

ஆதாரம் : ஆஸ்திரேலியாவின், மெல்போன் பல்கலைக்கழகப் பொறியியல் புலத்தைச் சார்ந்த, அனைத்துலகத் தொழில்நுட்ப மையத்தினர், உலக இணையத்தில் வெளியிட்டுள்ள கட்டுரை.

## தமிழ் என்றால் அவ்வளவு இளப்பமா?

இந்திய நிர்வாகப் பணிகளுக்கான (ஐ.ஏ.எஸ்) தேர்வாணையம் எழுத்துத் தேர்வுகளைத் தமிழிலும் எழுத அனுமதிக்கிறது. கேள்வித் தாள்களில் வினாக்கள் தமிழில் மட்டுமல்லாமல் அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பும் ஒவ்வொரு வினாவிலும் கொடுக்கப்பட்டுள்ளது. வினாத் தாள் முகப்பில் தரப்பட்டுள்ள முக்கிய அறிவுரைகளில் ஒன்று வினாக்களில் ஏதேனும் சந்தேகம் எழுமானால் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் தான் முடிவானதாகும் என உள்ளது. சிக்கல் இங்குதான் தொடங்குகிறது.


ABC 323 40

157. [illegible]

A) [illegible] B) [illegible]

C) [illegible] D) [illegible]

Which amendment of the constitution of India was the three categories of st[illegible] abolished

A) 6th B) 7th

C) 8th D) 9th

1999ம் ஆண்டு இந்திய நிர்வாகப் பணிகளுக்கான பொது நிர்வாகத் தேர்வுத் தாளில் (முதல் தாள்) கேள்வி எண் 157 தமிழில் இவ்வாறு உள்ளது.

157) படிநிலை முடிவுகள் கோட்பாட்டினை அளித்தவர்

(A) பர்னார்ட் (B) சைமன்

(C) வில்லியம் டில் (D) டுபின்

(இதன் ஆங்கில வடிவம்)

Which amendment of the constitution of India was the three categories of states abolished

(A) 6th (B) 7th

(C) 8th (D) 9th

மேற்படி 157வது கேள்வியின் தமிழ் வடிவுக்கும், ஆங்கில வடிவுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. ஆனால் தமிழை மட்டும் படித்துவிட்டு ஒருவர் விடையளிப்பாரேயானால், வினாத்தாளில் கண்ட நிபந்தனையின் படி அவருக்கு மதிப்பெண் கிடைக்காது. வினாத்தாள் அமைப்போருக்கு மிகக்குறைந்த பட்ச சிரத்தையேனும் இருந்திருந்தால் இவ்வளவு பெரிய தவறு நிகழ்ந்திருக்குமா? தமிழ் வினாத்தாள் தானே, தமிழில் விடையெழுதப் போகிறவன் நிச்சயம் தமிழன் தானே. எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்ற எகத்தாளப் போக்கு அல்லாமல் இதை வேறு என்னென்பது? இதைப் போலவே பொது அறிவுக்கான வினாத்தாளில் வினா எண் 25ல் Buffallo என்பது எருது என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது எருமை என மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். எருது வேறு எருமை வேறு. இப்படியெல்லாம் தமிழ் வினாத்தாள்களைக் கொஞ்சமும் அக்கறையில்லாமல் அமைப்பது, இந்திய நிர்வாகப் பணிக்குத் தமிழ்மேல் அக்கறை கொண்ட தமிழர்கள் யாரும் வந்து விடக் கூடாது என்ற உள்நோக்கத்திலா? தமிழக அரசும், தமிழ் வளர்ச்சித் துறையும் தக்க நடவடிக்கைகள் எடுத்து இது போன்ற தவறுகளை முளையிலேயே கிள்ளி யெறிவார்களா? 1999ம் ஆண்டு தேர்வு எழுதியோருக்கு இந்த வினாக்களுக்கு விடையளித்தோருக்கு முழுமதிப்பெண்கள் பெற ஏற்பாடு செய்வார்களா?

படிப்பகம்

www.padippakam.com

நந்தன் வழி - மாதமிருமுறை தநா/செ(ம) - 1563/99 • NANDAN VAZHI TAMIL FORTNIGHTLY REGD. NO. 1589/97 • TN/MS(C) - 1563/99 • WPP243 • REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER NO. 68724/98




படிப்பகம்

www.padippakam.com

## மார்ச் 28 - மாக்சிம் கார்க்கி பிறந்த நாள்

# இலக்கிய வானில் ஒரு புயற்பறவை

கார்க்கி என்கிற சொல், சமூக அவலங்களின் மீது 'கசப்புற்றவன்', கைத்துப் போனவன் என்று பொருள் கொண்டு நின்றது 1917 நவம்பர் வரையிலும். இன்றோ, கார்க்கி என்பது ஒரு சொல் அல்ல; தத்துவம். போர்க் குணம் மிகுந்த மனிதாபிமானம். ஒடுக்கப் பட்ட மக்களின் உரிமை கீதம், புதியதோர் உலகுக்கான இலட்சியப் பிரகடனம் என்று ஓ, அதுதான் எத்தனை அர்த்தங்கள் செறிந்த ஒரு மனோரஞ்சிதமாய்ப் பரிணமிக்கிறது!

கார்க்கி என்பது ரஷ்யச் சொல்லாயிருக்கலாம். ஆனால், அந்த ரஷ்ய மொழி பேசி எழுதியதால் மாக்சிம் கார்க்கி ஒரு ரஷ்யனல்ல. அவன் சரத் சந்திரருக்கு வங்காளி, காண்டேகருக்கு மராட்டியன், கேசவ தேவுக்கு மலையாளி, ஜீவாவுக்குத் தமிழன். ஒரு நிருதனுக்கு (நீக்ரோ) கார்க்கி நிருதன்; ஒரு சிவப்பிந்தியனுக்கு அவன் சிவப்பிந்தியன். சரியாகச் சொல்வதானால், அவன் ஒரு மனிதன். அவனது மொழி மனிதம்.

இத்தாலிக்கு அனுப்பப்பட்ட பர்மா நகரக் குழந்தைகளுக்காக, அமெரிக்காவிலே அவதியுறும் நிருதருக்காக ரஷ்யாவிலே பிறந்த மாக்சிம் கார்க்கி எதனால் மனம் வெதும்பினான். அதுதான் மனிதத்தனம். மனிதன் தன் மானிடத் தன்மையை இழப்பதுதான் மோசமானது; நாசகரமானது; அது கூடாது. மொழி என்பது காலத்துக்குக் காலம்; இடத்துக்கு இடம், இனத்துக்கு இனம், ஆளுக்கு ஆள் மாறும்; திரியும்; இது தவிர்க்க முடியாதது.

இலக்கியம் ஒரு மொழியில்தான் எழுதப்படுகிறது என்றாலும், அதன் சாரப் பொருள் மனிதமாயிருப்பதால், உன்னதமான இலக்கியம் எதுவும் ஒரே ஒரு மொழிக்குச் சொந்தமாகி நிற்பதில்லை. அந்தப் படைப்பும், அந்தப் படைப்பாளியும் உலகின் பொதுச் சொத்து, மனிதம் அதை வரித்துக் கொள்கிறது. கார்க்கி ஒரு மனிதன். அவன் எழுதினான்.

“மனிதனை விடச் சிறந்த இலக்கியம் எக்காலத்தும் எழுதப் பட்டதில்லை.

“மனிதன்தான் - மனிதன் மாத்திரம்தான் - சகல பொருட்களுக்கும் படைப்புத் தலைவன். அவனே மாயாஜாலன். அவனே இயற்கையின் சகல சக்திகளுக்கும் எஜமானன். நமது உலகில் உள்ள அழகிய பொருட்களெல்லாம் நமது உழைப்பின் படைப்பு. மனிதக் கரங்களின் அருங்கொடை.

“நான் மனிதனுக்குத் தலை வணங்குகிறேன். ஏனெனில் அவனுடைய அறிவுக்கும் கற்பனைகளுக்கும் எட்டாத எந்தப் பொருளையும் நான் காணவில்லை!”



கார்க்கியின் இந்த மனிதப் பெரு முழக்கம் அவருடைய மழலைப் பருவத்திலேயே ஓங்கி ஒலிக்கிறது. அவர் தமது வாழ்க்கைச் சரிதத்தை மூன்று பிரிவுகளாக எழுதியிருக்கிறார்.

★ எனது குழந்தைப் பருவம் ★ எனது பல்கலைக் கழகங்கள் ★ எனது அனுபவங்கள்

'நினைவு தெரிந்த நாள் முதலாய்' என்று சொல்கிறோமே அந்த நினைவு கூடும் நாட்களின் முதல் நினைவே கார்க்கியைத் தனித்து அடையாளம் காட்டுகிறது.

கைபிடித்துச் செல்லும் குழந்தைப் பருவத்திலேயே கார்க்கியின் தந்தை இறந்துவிடுகிறார். 'என்ன நடந்திருக்கிறது; இனி என்ன நடக்கும்' என்று எதுவும் அறிய முடியாத அந்தக் குழந்தையை உற்றாரும் ஊராரும் பரிவுடன் பார்த்து அனுதாபம் காட்டுகிறார்கள்.

தந்தையின் உடல் சவப் பெட்டியில் வைத்து அடக்கம் செய்வதற்காகத் தோண்டப்பட்ட குழிக்குள் இறக்கப்படுகிறது. இறந்து போன மனிதரின் 'கணக்கு வழக்குகளை'ப் பரமபிதாவிடம்



படிப்பகம்

www.padippakam.com

ஒப்படைத்து விட்டு, அவருடைய கருணை உள்ளத்தைப் பிரார்த்தனையால் உருக்கிக் கொண்டிருக்கிறார் பாதிரியார். மற்றவர்களும் கண்களை மூடிக்கொண்டு கடவுளைப் பிரார்த்தனைச் செய்கிறார்கள். குழந்தையோ தந்தையின் முகம் தெரியாத அந்த சவப்பெட்டியையே பார்த்துக் கொண்டிருக்கிறான். ஈரம் கசியும் அந்தக் குழிக்குள் எங்கிருந்தோ வந்த தவளை ஒன்று சவப்பெட்டியின் மீது அமர்ந்திருக்கிறது. பிரார்த்தனையை முடித்துக் கொண்ட பாதிரியார் கொஞ்சம் மண்ணை எடுத்துப் போடுகிறார். கல்லறைப் பணியாட்கள் மண்ணைத் தள்ளிக் குழியை மூடத் தயாராகிறார்கள். குழந்தை அலக்சி மாக்சிமோவிச் பெஸ்கோவ் (கார்க்கி) பதறுகிறான்; "பாருங்கள், அந்தத் தவளை... அது செத்துவிடப் போகிறது!"

இதுதான் மனிதம், இதுதான் புத்தனையும், வடலூர் வள்ளலையும் வழி நடத்தியது. ஆனால், புத்தனிடமிருந்தும், இராமலிங்க வள்ளலாரிடமிருந்தும் கார்க்கியின் மனிதம் வேறுபட்டு நிற்கிறது.

புத்தனும் வள்ளலாரும் வதைப்படும் மனிதர்களுக்காகக் கண்ணீர் விட்டுக் கசிந்துருகினார்கள். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினார்கள். பறந்து வரும் பூச்சிகள் அடிபடக் கூடாதே என்பதற்காகக் காற்றிலே கைவீசி நடக்கவும் அஞ்சினார்கள். உலகின் துன்ப துயரங்களையெல்லாம் தங்களின் சொந்தத் துயரங்களாகவே எண்ணிக் கலங்கினார்கள். தகிக்கும் வாழ்க்கையின் எரியும் பிரச்னைகளிலிருந்து தப்புவதற்கு ஒரே வழி, ஆசை அறுப்பதுதான் என்று போதனை செய்தார்கள். பொதுவில் மானுட விமோசனம் குறித்துப் பேசிய அனைவருமே, 'ஒதுங்கு, ஒடுங்கு' என்றே உபதேசித்தார்கள்.

கார்க்கி?

சவப்பெட்டியின் மீது அமர்ந்த தவளை செத்துவிடக் கூடாதே என்று பதறிய கார்க்கி தமது 'குழந்தைப் பருவ' நூலின் இறுதி வரிகளாக இவ்வாறு எழுதுகிறார்: "இந்த உலகத்துடன் கட்டிப் புரள்வதற்காகத் தன்னந்தனியாய்ப் புறப்பட்டான்!"

ஆம்; கொடுமை கண்டும் கோழைத்தனமாய் ஒதுங்கிச் செல்வதைக் கார்க்கி வெறுத்தார். கட்டிப் புரளு; முட்டிமோது; அடி; உடை; நிர்மாணி என்று புதுநெறி காட்டினார். மனிதனின் கால்களுக்கு விலங்காயுள்ள எதையும் அவர் முறிக்கத் துணிவு கொண்டார். விலங்கு எந்த வடிவில் வந்தாலும் அதனை வெட்டி விடுபட்டு முன்னேறு என்று தட்டி எழுப்பினார்.

புகழ்பெற்ற எழுத்தாளரும் சிந்தனையாளருமான லியோ டால்ஸ்டாயைக் கார்க்கி மிகவும் மதித்துப் போற்றினார். ரஷ்ய சமூக வாழ்க்கையில் புயல் வீசியடித்த பிரளய நாட்களில் டால்ஸ்டாயின் பேருள்ளம் புகலற்ற மனிதர்களின் திகிலற்ற வாழ்வுக்கு வழி தேடியே சுற்றிச் சுழன்றது. மனிதரின் பேராசைகளே அழுகையிலும் கண்ணீரிலும் அவர்களை அழுத்திக் கொல்கிறது. போர்களும், போரிலே வழிந்தோடும் இரத்த ஆறுகளும் மனிதரின் பேராசைகளால் விளைந்த அறுவடைகளே என்று எச்சரிக்கும் உணர்வுகளால் டால்ஸ்டாயின் இதயமே எரிந்தது.

அந்த வேதனையிலும் வெளிச்சத்திலும் அவர் வெளிப்படுத்தியக் கருத்துக்கள், ரஷ்யப் பாட்டாளி மக்களுக்கும், புரட்சிக்கும் எதிராக அமைந்தன. 'தனி நபர் ஒழுக்கமே விமோசனத்துக்கு வழி; மனிதனின் தார்மீக நிறைவே புத்துயிர்ப்பு' - என்னும் டால்ஸ்டாயின் கருத்துக்களும், அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு அவர் அளித்த பேட்டிகளும் கார்க்கியைத் திடுக்கிட வைத்தன. கொதித்துப் போன கார்க்கி டால்ஸ்டாய்க்கு எழுதினார்.

"கோமான் டால்ஸ்டாய் அவர்களே.

நமது நாட்டிலுள்ள சாதாரண உழைப்பாளி மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்ற விவரம் தங்களுக்குத் தெரியாது. அவர்களுடைய ஆசை என்ன? தேவை என்ன? உங்களுக்குத் தெரியாது. மக்களின் குரலுக்கு எப்போது செவி சாய்க்க



சூரியதீபனின்

## உருவகக் கதைகள்

## தேன்கரடி

ஒரு கரடி, ஒவ்வொரு நாளும் ஒரு தேன் கூட்டில் கை வைத்தது. தேனீக்கள் உழைத்துச் சேகரித்த தேனை எடுத்து உண்டு, புறங்கையையும் நக்கிச் சொட்டாங்கு போட்டது.

தேன் கரடி என்று தனக்குத் தானே ஒரு பெயரையும் சூடிக்கொண்டது.

தேன் சாப்பிட்டால் தனக்கு சங்கீதக் குரல் வருமென்றும், தான் ஒருநாள் இனிமையாய்க் குரல் எடுத்து கானமழை பொழியப் போவதாயும் சொன்னது. காட்டின் குடிகள் நம்பின. அவரவர்களுக்கு மருந்துக்குத் தேவைப்படும் ஒருசிரங்கைத்' தேனைக்கூட கரடிக்குத் தத்தம் செய்தன.

உழைக்கும் தேனீக்களின் கூடு அழிந்து கொண்டேயிருந்தது. ஒரு நாளும் பாட்டு வருவதாகக் காணோம்.

"என்றைக்கு இது பாடும்? என்றைக்கு நம்பாடு தீரும்?"

தேனீக்கள் முடிவெடுத்தன. அடுத்த முறை தேன் சாப்பிட கரடி வந்தபோது எரிதழல் போன்ற கொடுக்கை வைத்து வசமாக இறுக்கின.

காட்டுப் பிரதேசமே இரண்டாக விட்டுவிடும் போல் கரடி, கத்தியபடி ஓடியது.

சட்டமன்றத்திலிருந்து மக்களுக்குச்சங்கீதம் வராது என்பதை கற்றுக் கொள்வோம்.



படிப்பகம்

www.padippakam.com

மறுத்தீர்களோ அந்த நொடியிலேயே அவர்களைப் பற்றிப் பேசும் உரிமையை நீங்கள் இழந்து விட்டீர்கள்.

ஒரு காலத்திலே சுதந்திரமாக இருந்த உங்களது சிந்தனை உலகை, அடிமையாக்கி விட்ட உங்கள் கருத்துக்களுடன் மக்களின் கருத்துக்கள் இசைவாக இல்லை என்பதற்காக அவற்றை நிராகாரித்தீர்கள்.

தனி நபர் ஒழுக்கம் முழுநிறைவு பெறுவதன் மூலமே விமோசனம் வந்தெய்தும் என்கிற தங்களுடைய உச்சக் கருத்தை அடைந்ததோடு நீங்கள் அசையாது நின்று விட்டீர்கள். ஆனால், அவர்களோ மனித உரிமைகளைத் தெரிந்து கொள்ளும் பாதையில் வெகுதூரம் முன்னேறிப் போய் விட்டார்கள். எனவே, அவர்கள் உங்களுடைய கண்களுக்கு எட்டவில்லை. அவர்களை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால், அவர்களின் பிரதிநிதி யாரென்று கூறும் உரிமை உங்களுக்கு இல்லை. நிச்சயமாக நீங்கள் அவர்களின் பிரதிநிதி அல்ல.

மக்கள் பட்டினி கிடப்பதையும் உரிமைகள் ஏதுமில்லாமல் வாழ்வதையும், ஒடுக்கு முறையின் பளு தாங்கமுடியாமல் கூனிக் குறுகிக் கிடப்பதையும், அறியாமை - அச்சுறுத்தல் ஆகிய காரணங்களால் ஒரு கோப்பை மதுவிற்காக யாரைச் சுட்டிக் காட்டுகிறார்களோ - அவர்கள் குழந்தைகளாக இருந்தாலும், அடிப்பது, கொல்வது போன்ற கொடிய காரியங்களில் ஈடுபடுவதையும் கண்டு சகிக்க முடியாத மன வேதனைப்படுகிறவர்கள் செய்யும் வேலையைக் காலம் தவறியது, விவேகமற்றது என்று நீங்கள் பிரகடனம் செய்திருக்கிறீர்கள்.

உங்கள் நாட்டு மண்ணில் இரத்த ஆறு ஓடிக் கொண்டிருக்கும் பயங்கரமான காலகட்டத்தில், ஆடு மாடுகளைப் போல் அல்லாமல் மனிதர்களாக வாழவேண்டும் என்பதற்காக நேர்மையான - நாணயமான மக்கள் நூற்றுக்கணக்கில் செத்து மடிந்து கொண்டிருக்கும் தருணத்தில், 'தனி நபர்களின் தார்மீக நிறைகுடம்!' அதுவே அனைத்து மக்களின் வாழ்க்கை இலட்சியமும் பொருளும் இதுதான்' என்று கூறுகிறீர்கள்.

ஆனால், கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். ஆண்களும் பெண்களும் தெருக்களில் சுட்டு வீழ்த்தப் படும் பொழுது, காயம் பட்டவர்களை எடுக்க ஒருவரும் அனுமதிக்கப்படாமலிருக்கும் பொழுது, ஒருவன் தன்னுடைய ஒழுக்கத்தைத் தார்மீக அடிப்படையில் நிறைவு படுத்தும் பணியில் ஈடுபட முடியுமா? அவனிடம் அன்புமயமான உலகக் கண்ணோட்டத்தை ஒருவரால் போதிக்க முடியுமா?



> மக்கள் பட்டினி கிடப்பதையும் உரிமைகள் ஏதுமில்லாமல் வாழ்வதையும், ஒடுக்கு முறையின் பளு தாங்கமுடியாமல் கூனிக் குறுகிக் கிடப்பதையும், அறியாமை - அச்சுறுத்தல் ஆகிய காரணங்களால் ஒரு கோப்பை மதுவிற்காக யாரை யாரைச் சுட்டிக் காட்டுகிறார்களோ - அவர்கள் குழந்தைகளாக இருந்தாலும், அடிப்பது, கொல்வது போன்ற கொடிய காரியங்களில் ஈடுபடுவதையும் கண்டு சகிக்க முடியாத மனவேதனைப்படுகிறவர்கள் செய்யும் வேலையைக் காலம் தவறியது, விவேகமற்றது என்று நீங்கள் பிரகடனம் செய்திருக்கிறீர்கள்.

தேசம் கடுமையான சோதனைகளுக்கு இலக்காகியிருக்கும் தருணத்தில் ஒருவர் தனது ஒழுக்கம் சம்பந்தப்பட்ட குணத்தைப் பரிசுத்தப்படுத்தும் வேலையில் ஈடுபடுவாரேயானால், சத்தியம் - அழகு - சுதந்திரம் ஆகிய இலட்சியங்களை உயிருக்கு உயிராக நினைக்கும் மக்கள் மனத்தில் இத்தகைய நபர்களைப் பற்றி - இதயமற்ற கல்நெஞ்சன், போலி வைதீகன், வேடதாரி என்ற - வெறுக்கத்தக்க எண்ணம் தான் ஏற்படும்!"

கார்க்கியின் இந்தப் பதில், வர்க்கப் பகைமையின் இரத்தக் கறைகளால் விகாரமாகிப் போன இந்தப் பூமியில் கொலைக்காரர்களையும் கொல்லப்படுகிறவர்களையும் சமமாக நிறுத்தி "இரக்கம் காட்டுங்கள், பழிவாங்கும் பாதையிலிருந்து விலகி வாருங்கள்" என்று உபதேசிக்கும் யாருக்கும் சாட்டையடியாகவே இருக்கும்.

சூரிய மண்டலத்திலே சுழலும் கோள்களில் இதுவரையிலான ஆய்வுகளின்படி மனிதன் வாழ்வது பூமியில் மாத்திரம்தான்.

நாம் வாழ்கிற பூமி ஒன்றாக இருந்தாலும் நாம் வாழ்கிற வாழ்க்கை ஒரே மாதிரியாக இல்லை.

தனிச் சொத்துரிமையின் கூரிய நகங்கள் மனித இனத்தைக் கூறு கூறாகக் கிழித்துப் போட்டிருக்கின்றன.

சிரிப்பும் செழிப்பும் ஒரு புறம் அழுகையும் பற்கடிப்பும் மறுபுறம் சுதந்திர சொர்க்கம் ஒரு புறம் சிறைகளின் கொடூரம் மறுபுறம்.

மனித உழைப்பின் அருங்கொடைகள் யாவும் மனிதனுக்கே எதிரியாகிவிட்டன.

அடிமைகள் கட்டிய அரண்மனைகளில் அரசர்கள் குடியேறினார்கள்.

அழகிய ஆடைகளை உருவாக்கும் மனிதர்களுக்கு மானம் காக்கப் போதிய ஆடையில்லை.



படிப்பகம்

www.padippakam.com

வீடு கட்டுகிறவர்கள் வீதியிலே உறங்குகிறார்கள்.

இந்த நிலங்கள் இவனுக்குச் சொந்தம்.

அந்த ஆலைகள் அவனுக்குச் சொந்தம்.

அன்னை நிலத்தின் ஒவ்வோர் அங்குலத்தையும் கோடு கிழித்து, பட்டா செய்து கொண்ட பின், தேசம் தேசம், என்கிறார்களே எதை?

தேசம் சிலருக்கு விற்கப்பட்டது.

தேசபக்தி மாத்திரமே பலருக்குப் போதிக்கப்பட்டது.

தேசத்துக்கு ஆபத்து வரும் போது - அதாவது தனிச்சொத்துக்கு ஆபத்து வரும் போது - தேசம் இல்லாதவர்களுக்கு - அதாவது சொத்து சுகம் இல்லாதவர்களுக்கு - தேசபக்தியின் பெயரால் அழைப்பு விடப்பட்டது.


யாருடைய சொத்துக்களையோ பாதுகாப்பதற்காக சொத்தே இல்லாதவர்கள் யுத்தத்தில் இறங்கினார்கள்.

யாருடைய சுகத்துக்காகவோ தங்களுடைய உயிரை இழந்தார்கள்.

இறுதியில் எல்லாம் ஏமாற்றத்தில் முடிகின்றன.

சட்டம், தர்மம், தெய்வம், தேசியம் எல்லாம் சொத்துடையவர்களின் காவல் நாய்களாகவே இருக்கின்றன. இல்லாதவர்களை இந்த நாய்கள் ஓட ஓட விரட்டுகின்றன. தாவிப் பிடித்துக் கீறிக் கிழிக்கின்றன. மனித இரத்தம் எவ்வளவு மலிவாய்ப் போனது!

இந்தக் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுத்திருக்க வேண்டும் தார்மீக - ஒழுக்க உபதேசியார்கள். இவர்களோ, சிறுமைப் பட்டவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யத்தின் சிம்மாசனங்கள் அவர்களுக்காகவே அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன என்னும் பொன்மொழிகளால் ஒடுக்கப்பட்டோருக்குச் சமாதானம் கூறினார்கள். காயம் பட்டோருடன் சேர்ந்து இவர்களும் கதறினார்கள். கண்ணீர் விடுவோருடன் சேர்ந்து இவர்களும் ஒப்பாரி வைத்தார்கள். பணக்காரர்களின் 'மனசாட்சிக்கு' வேண்டுகோள் விடுவதற்கு மேலாக இவர்களால் வேறெதுவும் செய்ய முடியவில்லை.




கார்க்கி இந்த ஒப்பாரிப் பாடல்களால் எரிச்சலடைந்தார். துன்பப்படுவோருக்காக இரக்கம் கொண்ட பலர், கொடுமைகளுக்கு முன் அடங்கிப் போனார்கள். இது என்ன மனிதாபிமானம்? கார்க்கியின் மனிதாபிமானம் என்பது அழுவதல்ல. பேராடுவது! சிலுவை சுமப்பதல்ல; சரித்திரத்தை மாற்றுவது!

ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பில் களம் இறங்கிய போராளியாகவே கார்க்கியைக் கண்டார் லெனின். பள்ளிக் கூடத்திற்கே சென்றிராத ஓர் எளிய மனிதனுள் படைப்பாற்றலின் பேரலைகள் வான பரியந்தம் வீசியடிப்பதைக் கண்டு லெனின் அவரைப் பெரிதும் விரும்பினார். லெனினது தோழமை, கார்க்கியின் சிந்தனையையும் படைப்புக்களையும் மேலும் அழகுபடுத்தியது.

ஒரு சமயம் ரஷ்யாவின் துன்பத் துயரங்களுக்குக் காரணம் என்ன என்பது குறித்து எழுத்தாளர்களிடம் தீவிர விவாதம் நடந்தது. "நாம் கடவுளை மறந்து விட்டோம். அதனால் பழிவாங்கப்படுகிறோம்" என்றதொரு குரல். "கடவுளுக்கு நாம் என்னதான் செய்யவில்லை? ஏதாவது பாக்கி இருக்கிறதென்றால் அதை ஒழித்துக் கட்டுவதுதான்" என்று மற்றொரு குரல். கடைசியில் ஒரு புதிய கடவுளை உருவாக்க வேண்டும் என்று முடிவெடுத்தார்கள் இந்த எழுத்தாளர்கள். இவர்கள் மக்களின் போராட்டங்களிலிருந்து ஒதுங்கி நின்றவர்கள். ஒரு பார்வையாளன் என்பதற்கு மேலாக வரலாற்றில் எழுத்தாளனின் பங்கு எதுவும் இல்லை என்று கருதியவர்கள். பொதுவில் கலை, கலைக்காகவே, இலக்கியவாதியின் வேலை இலக்கியத்துக்கு உண்மையாய் இருந்தலே என்கிற கோட்பாட்டில் விழுந்தவர்கள். இவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். அதில் கார்க்கியின் பெயரையும் இணைத்துவிட்டார்கள். அதைப் பார்த்து லெனின் துடித்துப் போனார். கண்டிப்புடன் கார்க்கிக்கு எழுதினார். "அன்புள்ள கார்க்கி, அந்த அறிக்கையில் உங்கள் பெயரைப் பார்த்ததும் துடித்துப் போனேன். உங்களுக்குத் தெரியாது. கார்க்கி என்ற பெயர் தொழிலாளி வர்க்கத்தை எதுவும் செய்யும். அந்தப் பெயர் அவர்களை உருக்கும்; அவர்களை வார்க்கும். அவர்களைக் கிளர்ச்சியடையச் செய்யும்... அது அவர்களை ஒரு மந்திரம் போல் கட்டுப்படுத்தும்.

பாட்டாளி வர்க்கத்துக்கும் கார்க்கி என்னும் கலை - இலக்கியவாதிக்கும் உள்ள உறவு குறித்து லெனினது மதிப்பீடு உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல! கார்க்கியின் பெயர் உலகத் தொழிலாளி



படிப்பகம்

www.padippakam.com

வர்க்கத்தின் உயிர்த்துடிப்புடன் கலந்த ஒன்றாகி விட்டது.

ஜார் மன்னனின் வேட்டைக்குத் தப்பி, வெளிநாடுகளில் அலைந்து, புரட்சிக்கு ஆதரவு திரட்டிக் கொண்டு தாயகம் திரும்புகிறார் கார்க்கி. மாஸ்கோவுக்கு ரயிலில் வருகிறார் கார்க்கி என்கிற செய்தி நாடெங்கும் பரவி விடுகிறது. வழியெல்லாம் ரயில் நிறுத்தப்படுகிறது. மலர்களும் வாழ்த்தொலிகளும் எங்கும் பொழிகின்றன. தண்டவாளங்கள் மீதெல்லாம் மக்கள் வெள்ளம். தொடர்ந்து ரயில் முன்னேற முடியவில்லை.

மாஸ்கோ ரயில் நிலையத்துக்குச் செய்தி போகிறது. "தண்டவாளமே தெரியவில்லை. எங்கு பார்த்தாலும் தலைகள்... தலைகள் என்ன செய்வது?"

மாஸ்கோ நிலையத்திலிருந்து பதில் வருகிறது: "கார்க்கி ரயில்" இங்கே வரவில்லையென்றால் மாஸ்கோவின் ரயில் நிலையமே இருக்காது. மூன்று நாட்களாக மக்கள் இங்கே காத்துக் கிடக்கிறார்கள். எப்படியாவது ரயிலைக் கொண்டு வந்துவிடுங்கள்!"

கார்க்கியின் குரல் தொழிலாளி வர்க்கத்தை மாத்திரமல்ல. நேர்மைத் திறமுள்ள எவரையும் கட்டியிழுக்கும் ஆற்றல் மிகுந்தது. கட்டளையிடும் உரிமை கொண்டது.

உலகப் போரின் உறுமலில்-

பாசிசம் ஒரு தீப்புயலாய்த் திசையெங்கும் வீசியடித்த நாட்களில்-

"நாஜிகளின் காலடியில் மானுடம் இழிவும் இம்சையும் தாங்கிய அந்தக் கசப்பான நாட்களில்-

பரிசுத்த இதயத்தின் உயிர் மீட்சிக் குரலாகத் தூர தூர தேசங்களில் எதிரொலித்தது கார்க்கியின் கேள்வி:

"நீங்கள் எந்தப் பக்கத்தில்?"

உலக நாடுகளின் சுதந்திரத்தின் மீதும் மனித நாகரிகத்தின் உன்னதங்கள் மீதும் பீரங்கி வண்டிகளின் இரும்புச் சக்கரம் கடகடத் தோடிய போது-

மலர், இசை, புன்னகை, தாலாட்டு, புனிதம், பெருமிதம் எல்லாம் இறுதியின் விளிம்புக்கே விரட்டப்பட்டபோது - மனிதாபிமானத்தின் இடிமுழக்கத்தோடு கார்க்கி கேட்டார். "நீங்கள் எந்தப் பக்கத்தில்?"

அந்தக் குரல் எல்லா நாடுகளிலும் எதிரொலித்தது. இந்திய மொழிகளில் பல எழுத்தாளர்கள் கார்க்கியால் எழுச்சி பெற்றார்கள். இந்திய விடுதலைப் போருக்குக் கார்க்கியின் எழுத்துக்கள் - குறிப்பாக அவரது 'தாய்' என்னும் புதினம் - புதிய பரிமாணத்தைக் கொடுத்தது. அந்த நாட்களில் கார்க்கியின் நூல்களும், இதர மார்க்சிய நூல்களும் தடை செய்யப்பட்டிருந்தன. பல எழுத்தாளர்கள் இரகசியமாகவே கார்க்கியைப் படித்தார்கள்.




"கார்க்கியின் மனிதாபிமானம் என்பது அழுவதல்ல. பேராடுவது! சிலுவை சுமப்பதல்ல; சரித்திரத்தை மாற்றுவது!"

இலக்கியத்தில் இடம் பெறத் தகுதியற்றவர்கள் என்று 'மேன் மக்களால், இலக்கிய விதிகளால் வெறுத்து ஒதுக்கப்பட்ட மக்களின் அழகையும், மொழியையும், இதயத்தையும், வீரத்தையும் இலக்கியத்தில் இடம் பெறச் செய்த ஆதிமுதல் எழுத்தாளர் கார்க்கிதான்.

இலக்கியத்தில் எத்தனையோ 'இசங்கள்' வந்து போயிருக்கின்றன. இன்னும் புதிது புதிதாய் வந்து கொண்டிருக்கின்றன. இவை எல்லாமே இலக்கிய உத்திகளைப் பற்றியே பசப்புகின்றன. அதாவது இலக்கியத்தை மேலும் ஒரு கட்டத்துக்கு இந்த 'இசங்கள்' அழைத்துச் செல்கின்றனவாம். எந்த அளவுக்கு இந்த 'இச'கு பிசகுகள் புரியாமலும், எந்த அளவுக்குக் குறைவான வாசகர்களையும் கொண்டிருக்கின்றனவோ, அந்த அளவுக்கு இந்த இலக்கியங்கள் உன்னதம் பெறுகின்றனவாம்.

இந்த புலமைப் பகட்டர்களிடமிருந்து கார்க்கி வெகுதூரத்தில் நிற்கிறார். "இலக்கியத்துக்கு உண்மையாய் இருத்தல் என்பது வாழ்க்கைக்கு உண்மையாய் இருத்தல்" இதுதான் கார்க்கி!

"நான் ஒரு புதிய நாவலை எழுத விரும்பினால், மீண்டும் கார்க்கியின் மனிதத்துவத்திலிருந்தே தொடங்க நேரும். இது பழைய பாணியிலான மனிதத்துவம் அல்ல. கார்க்கியின் மனிதத்துவம் என்றும் பழைய பாணியாக முடியாது! மனிதனின் விழுமியங்களை நிறுவுவது பழைய பாணியல்ல!" என்றார் புகழ்பெற்ற இந்தி எழுத்தாளர் முல்க்ராஜ் ஆனந்த்.

கார்க்கியின் மனிதத்துவக் கோட்பாடு, வாழ்க்கையை அப்படியே படம் பிடிப்பதில்லை. "இது தான் வாழ்க்கை; இப்படித்தான் இருக்கிறது" என்று விளக்கம் தருவதல்ல. அது வாழ்க்கையை மாற்றிக் காட்ட விரும்புகிறது. இன்றிருப்பதைவிட மனிதனும் உலகமும் மேலும் அழகு பெற்றுத் திகழ வேண்டும் என்று பிரகடனம் செய்கிறது. அந்தப் புரட்சிக்கு அழைக்கிறது.

**'சோவியத் இலக்கியம் பற்றி ஜீவா' – என்னும் நூலின் அணிந்துரையிலிருந்து...**



படிப்பகம்

www.padippakam.com

## பெருமாள்சாமி

நகரத்தின் மையப் பகுதியில் உள்ள அந்தப் பெரிய கோயில் ஜீர்ணோத் தாரணத் திருப்பணி வேலைகள் ஒருவாறு நிறைவேறிவிட்டன. இனி, மகா சம்பு ரோட்சண விழாவை நடத்தி முடிக்க வேண்டிய வேலைகள்தாம் உள்ளன. விழாவுக்கு இன்னும் இரு தினங்களே இருந்தன. திருப்பணி வேலைகள் எல்லாம் முடிந்த நிலையில் திருச்சுற்று மதில் களுக்கு வெள்ளையடித்து காவிப்பட்டை பூசும் வேலைகளும் தொடங்கிவிட்டன.

காலைநேரம்; நீண்ட நெடிய மதில் களுக்குக் கட்டப் பட்டிருந்த சாரங்களின் மேல் தொழிலாளிகள் வெள்ளையடிப்புக் காக கையில் மட்டையுடன் ஏறிக் கொண் டிருந்தார்கள். கோபுர வாசலின் ஓரத்தில் கட்டப் பட்டிருந்த சாரத்தின் மேல் நின்று கொண்டிருந்த அம்மாசி, கீழே நின்றிருந்த காத்தானை நோக்கிக் குரல் கொடுத்தான். "அடே காத்த முத்து, சுண்ணாம்புத் தாழி யைத் தூக்கி மேலெ குடுறா".

"இதோ தர்றண்ணே" காத்த முத்து தூக்கிக் கொடுத்த தாழியை வாங்கிய அம்மாசி அதை சாரத்தின் மேல் வைக்கோல் பிரி மணையில் பாதுகாப்பாக வைத்து விட்டு நிமிர்ந்தான். அதற்குள் அம்மாசிக்கு வெற் றிலை மடக்கிக் குத்தவைத்த அம்மாசி தலைபாகையில் செருகி வைத்திருந்த வெற்றி லையையும் பாக்கையும் வெளியே எடுத்தான். பாக்கை ஊதி வாயில் போட் டுக் கொண்டு, வெற்றி லையை எடுத்துத் தொடையில் வைத்து இடதுகையால் நீவி காம்பைக் கிள்ளி எறிந்து விட்டு சுண்ணாம்பைத் தடவி மடித்து வாயில் போட்டுக் கொண்டான். வெற்றிலையை மென்று கொண்டே, "அடே காத்தா, அந்த தேங்கா மட்டையும் சுத்தாழைநார் முடியும் வேண்டாம். நேத்து நான் கொண்டுவந்த புரசு குச்சி மட்டையை எடுத்துக்குடு" என்றான்.

மடாக்களில் இருந்து சிரட்டையால் தண்ணீரை மொண்டு தாழியில் ஊற்றிக் கொண்டிருந்த காத்த முத்து அம்மாசி கேட்ட புரசுகுச்சி மட்டையைத் தேடிக் கொண்டிருந்தான்.

அப்போது ஏழெட்டுப் பெண்கள் மண்கலயங்களைச் சுமந்து கொண்டு கோபுரவாசல் வழியாகக் கோயிலுக்குள் போய்க் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண்கள் இவர்களைக் கடந்து போன போது புத்துருக்கு நெய்யின் வாசனை கப்பென்று முகத்தில் மோதி மூக்கைத் துளைத்தது.

"என்னண்ணே எடயவீட்டுப் பொண்ணுக கோயிலுக்கு நெய்யி கொண்டு போகுதுக. எதுக்கண்ணே நெய்யி?" காத்த முத்து அப்பாவித் தனமாகக் கேட்டான்.

"அடேய் ந்நாளண்ணக்கி கோயில்ல கும்பாயிசம் நடக்கப் போகு தில்லையா, அண்ணைக்கு நம்மளுக்கெல்லாம் சாப்பாடு போட்டு அன்னதானம் பண்ணுவாங்களாங்காட்டியும். எல்லாருக்கும் பந்தியிலெ சக்கரைப் பொங்கலும். வெம்பொங்கலும் போடுவாங் களாம். அதுக்குத்தான் நெய்யி குடங் குடமாப் போகுது! நெய்யி மட்டுமில்லெ, பொங்கல்'லெ போடுறதுக்கு ஏலங் கிராம்பும் முத்திரிப் பருப்பும் மூட்டை மூட்டையா மலையாளச் சீமையில இருந்து வந்து எறங்கியிருக்காம். மூக்காண்டி பாத்துட்டு வந்து சொன்னான்" மட்டையைச் சுவரில் தடவிக் கொண்டிருந்த அம்மாசி வாயில் இருந்த எச்சிலைப்புளிச் சென்று கீழே துப்பிய படியே சொன்னான்.

"அப்ப, கும்பாயிசத் தண்ணக்கி மணக்க மணக்க நெய்யோட சக்கரை பொங்கலை ஒருபிடி பிடிச்சிருவெ, இல்லையொண்ணே".

"ஏன்? நீ திங்க மாட்டியா?"



"எனக்குத்தான் இதெல்லாம் புடிக்காதே. என்ன தாஞ்சொல்லு, சுட்ட கருவாட்டுக்கும் மீன் குளம்புக்கும் இதெல்லாம் கிட்டெ வர முடியுமா? அந்த ருசியே தனி ருசிதான்".

"ஏண்டா, பொறுக்கி நாயி, இந்த வேனா வெயில்ல அரை வயிறும் கால்வயிறுமா உப்பில் லாத உண்டைக்கட்டிச் சோத்தைப் போட்டு, கூலி குடுக்காமெ சாட் டைப் பூசை கொடுத்து, இடுப்பொடிய வேலை வாங்குறான். அப்பவும் மப்பு போகலை பாரு உனக்கு. நாயி, எம்புட்டுத் தெனாவட்டு இருந்தா மீனும் கருவாடும் கேக்கும், உனக்கு".

"அடபோண்ணே, நீ ஒண்ணு, நேத்து நான் மீன் குளம்பு வச்சி சாப்புட்டனே".

"ஏண்டா, மீன் கொளம்பு வச்சியா, எப்பிடிறா?"

"நேத்து சாயங்காலம் குளிக்க வாய்க்காலுக்குப் போனப்ப பத்துப் பன்னண்டு வெறாக் கெண்டை கிடைச்சது. பிடிச்சாந்தேன். உண்டைக்கட்டி சோத்தோட கடிச்சிக் கிட மொளகா குடுப்பாம் பாரு, அதுல நாலஞ்சி மொளகா எடுத்தாந்தேன். அந்த மாமரத்து நெணல்ல மூணுகல்லு வச்சி அடுப்புக் கூட்டி மொளகாயும் உப்பும் போட்டு மீன் குளம் வச்சன் பாரு, என்ன ருசி, என்ன ருசிங்கிறே. ரெண்டு கட்டிச் சோறு சாப்புட்டுப் போட்டன். ஈராங்காயமும் எண்ணையும் இருந்து போட்டிருந்தா, குளம்பு ருசி இன்னும் கூடுதலா இருந்திருக்கும்."

"போடா நாக்குத் தடிச்ச பயலே" பூசுவதை நிறுத்தி விட்டு மட்டை யைச் சாரத்தின் மேல் வைத்த அம்மாசி காத்த முத்துவைக்கேலி செய்து கொண்டிருந்தான். அப்போது தொலைவில் சட்டையுடன் கங்காணி வருவதை சாரத்தில் இருந்து பார்த்து விட்டான். "அடே



படிப்பகம்

www.padippakam.com



# தத்துவம் பயில்வோம்

மார்க்சின் போதனை, நாகரிக உலகெங்கிலும் உள்ள (அதிகாரத் தரப்பினர், மிதவாதிகள் ஆகிய இரு வகையினரான) எல்லா பூர்ஷ்வா விஞ்ஞானிகளிடையிலும் அளவற்ற பகைமையையும் வெறுப்பையும் கிளப்பிவிடுகிறது. மார்க்சியம் ஒரு வகையான "நச்சுத்தன்மை கொண்ட குறுங்குழு வாதம்" ஆகுமென அவர்கள் கருதுகின்றனர்.

வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ள ஒரு சமுதாயத்தில் "பாரபட்ச மற்ற" சமுதாய விஞ்ஞானம் எதுவும் இருக்க முடியாது. அதிகாரத் தரப்பைச் சேர்ந்த எல்லா விஞ்ஞான்களும் எல்லா மிதவாத விஞ்ஞானிகளும் ஏதாவதொரு விதத்தில் கூலி அடிமை முறையை ஆதரிக்கிறார்கள். மார்க்சியமோ கூலி அடிமை முறையை ஈவிரக்கமின்றி எதிர்க்கும்படி போர்ப்பிரகடனம் செய்துள்ளது. முதலாளிகளின் லாபத்தைக் குறைப்பதின் மூலமாகத் தொழிலாளர்களின் கூலியை உயர்த்தலாமா என்ற பிரச்னையில் முதலாளிகளிடம் பாரபட்ச மற்ற தன்மையை எதிர்பார்ப்பது எப்படி அசட்டுத்தனமாகுமோ, ஏமாளித் தனமாகுமோ, அப்படித்தான் கூலி அடிமை முறைச் சமுதாயத்தில் விஞ்ஞானிகள் பாரபட்சமற்ற தன்மை காட்ட வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் அசட்டுத் தனமாகும், ஏமாளித்தனமாகும்.

இது மட்டுமல்ல. தத்துவஞானத்தின் வரலாறும் சரி, சமுதாய விஞ்ஞானத்தின் வரலாறும் சரி, மார்க்சியத்தில் "குறுங்குழுவாதம்" போன்றதெதுவும் கிடையாது என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன. அதாவது, அது ஒரு இறுகிப்போன வரட்டுத் தத்துவமல்ல; உலக நாகரிக வளர்ச்சியினது ராஜபாட்டையின் வழியே வராமல் அதனின்று விலகி வேறொரு வழியே முளைத்த போதனை அல்ல அது. மாறாக, மனிதகுலத்தின் முன்னணிச் சிந்தனையாளர்கள் ஏற்கனவே எழுப்பியிருந்த கேள்விகளுக்கு மார்க்சு விடைகள் தந்தார் என்பதில்தான் குறிப்பாக அவருடைய மேதாவிலாசம் அடங்கியுள்ளது. தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், சோஷலிஸம் ஆகியவற்றின் தலைசிறந்த பிரதிநிதிகளுடைய போதனைகளின் நேரடியான, உடனடியான தொடர்ச்சியாகத் தான் மார்க்சின் போதனை எழுந்தது.

மார்க்சின் போதனை மெய்யானது, பிழையற்றது; அதனால்தான் அது சர்வவல்லமை பெற்றிருக்கிறது. அது பரிபூர்ணமான, உள்ளிணக்கம் கொண்ட போதனை. ஒரு சர்வாங்கமான உலகப் பார்வையை அது மக்களுக்கு அளிக்கின்றது. எந்த வடிவத்திலும் அமைந்த மூடநம்பிக்கைகளோ, பிற்போக்கோ, பூர்ஷ்வா வர்க்க ஒடுக்கு முறைக்கு ஆதரவோ இந்த உலகப்பார்வையுடன் ஒத்துவர முடியாது. ஜெர்மானியத் தத்துவஞானம், ஆங்கிலேய அரசியல் பொருளாதாரம், பிரெஞ்சு சோஷலிஸம் என்ற வடிவத்தில் 19ஆம் நூற்றாண்டில் மனிதகுலம் படைத்தளித்தத் தலைசிறந்த படைப்புகளின் உரிமை பெற்ற வாரிசுதான் மார்க்சியம்.

## மார்க்சியத்தின் தோற்றுவாய்களும் உள்ளடக்கக் கூறுகளும்



இவை மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களாகும், மூன்று உள்ளடக்கக் கூறுகளாகும். இவற்றைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

பொருள் முதல்வாதம் தான் மார்க்சியத்தின் தத்துவ ஞானமாகும். பொருள்முதல்வாதம் ஒன்றுதான் முரணற்ற தத்துவஞானமாகும், இயற்கை விஞ்ஞானங்களுடைய எல்லாப் போதனைகளுக்கும் ஏற்புடையதாகும், மூடநம்பிக்கைகளுக்கும் பகட்டுக்கும் பசப்புக்கும் இன்னபிறவற்றுக்கும் தீராப் பகையாகும் என்பது ஐரோப்பாவின் நவீனகால வரலாறு பூராவிலும், இன்னும் முக்கியமாய் மத்தியக்காலக் குப்பைக்கூளங்களையும் நிறுவனங்களிலும் கருத்துக்களிலும் ஆட்சி புரிந்த பிரபுத்துவத்தையும் எதிர்த்து நடைபெற்ற முடிவான கடும் போரின் களனாயிருந்த பிரெஞ்சு நாட்டில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் தெளிவாக நிரூபணமாகியது. ஆகவே பொருள்முதல் வாதத்தை "மறுப்பதற்கும்", பலவீனப்படுத்துவதற்கும், பழிப்பதற்கும், ஜனநாயகத்தின் வைரிகள் முழுமூச்சாக முயன்று பார்த்தார்கள். தத்துவ ஞானக் கருத்துமுதல்வாதத்தின் (idealism) பல வகைப்பட்ட வடிவங்களை இவர்கள் ஆதரித்தனர். இவ்வகைப்பட்ட கருத்து முதல்வாதம் ஏதாவது ஒரு வழியில் எப்பொழுதும் மதத்தைப் பாதுகாக்கவோ ஆதரிக்கவோதான் செய்கிறது.

மார்க்சும் எங்கெல்சும் தத்துவஞானப் பொருள் முதல் வாதத்தை மிகுந்த மனத்திண்மையோடு ஆதரித்துப் பாதுகாத்தனர். இந்த அடிப்படையிலிருந்து விலகிச்செல்லும் ஒவ்வொரு திரிபும் மிகவும் தவறாயிருப்பதை அவர்கள் அடிக்கடி விளக்கி வந்தார்கள். எங்கெல்சு எழுதிய லுத்விக் பாயர்பாக், டூரிங்குக்கு மறுப்பு என்ற நூல்களில் அவர்



படிப்பகம்

www.padippakam.com


# வெளிநாட்டுத் தமிழர்களுக்கான ஏற்றுமதி நிறுவனம்

**THAVAH IMPEX PVT LTD**

(இலங்கையிலும் இந்தியாவிலும் பதிவு பெற்ற ஈழத்தமிழர் நிறுவனம்)

ஈழத்தமிழர்களுக்குத் தேவையான சகல பொருட்களையும் சென்னையிலிருந்து ஏற்றுமதி செய்கிறோம்.

TEL: 0091 - 44 - 4415796 FAX: 0091 - 44 - 4402405 E-mail: thavahimpex@yahoo.com


களுடைய கருத்துக்கள், மிகத் தெளிவாகவும் முழுமையாகவும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. கம்யூனிஸ்ட் அறிக்கை என்ற நூலைப் போலவே இவ்விரண்டு நூல்களும் வர்க்க உணர்வு பெற்ற ஒவ்வொரு தொழிலாளருக்கும் அவசியமான கைப்புத்தகங்களாகும்.

18ஆம் நூற்றாண்டின் பொருள் முதல்வாதத்துடன் மார்க்சு நின்று விடவில்லை. அவர் தத்துவ ஞானத்தை முன்னேறச் செய்தார். முதுபெரும் ஜெர்மன் தத்துவ ஞானம் திரட்டிய செல்வங்களைக் கொண்டு, குறிப்பாக ஹெகலின் தத்துவமுறை - இதிலிருந்தே பாயர்பாகின் பொருள்முதல்வாதம் தோன்றியது - திரட்டிய செல்வங்களைக் கொண்டு, அவர் பொருள் முதல் வாதத்தை வளப்படுத்தினார். இந்தச் செல்வங்களில் பிரதானமாக விளங்குவது இயக்கவியல்தான். இயக்கவியல் என்பது மிகமிக முழுமையான, ஆழமான, ஒருதலைப்பட்சமில்லாத வடிவத்தில் வளர்ச்சியைப் பற்றி விளக்கி விவரிக்கும் போதனையாகும்; நிரந்தரமாக வளர்ச்சியுற்ற வண்ணமுள்ள பருப்பொருளை நமக்குப் பிரதிபலித்து காட்டும் மனித அறிவின் சார்புநிலையை வலியுறுத்தும் போதனையாகும். ரேடியம், மின்னணுக்கள், தனிமங்களில் ஒன்று மற்றொன்றாக மாறுவது - இவை போன்ற இயற்கை விஞ்ஞானத்தின் மிக நவீன கண்டுபிடிப்புகளெல்லாம் மார்க்சின் இயக்கவியல் பொருள்முதல்வாதமே சரியானது என்பதை வியக்கத்தக்க முறையில் நிரூபணம் செய் துள்ளன. அழுகிப்போன பழைய கருத்துமுதல்வாதத்தைப் பற்றிய "புதிய" மறுவியாக்கியானங்களைக் கொண்டு பூர்ஷ்வா தத்துவஞானிகள் தந்த போதனைகளால் இதைத் தடுக்க முடியவில்லை.

தத்துவஞானப் பொருள்முதல் வாதத்தை மார்க்சு ஆழப்படுத்தி வளர்த்துப் முழுமைபடுத்தினார் இயற்கைப் பற்றிய அதன் ஞானத்தை மனித சமுதாயம் பற்றிய ஞானமாகவும் விரிவாக்கினார். மார்க்சின் வரலாற்றுத் துறை பொருள்முதல் வாதம் விஞ்ஞானச் சிந்தனைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக அமைந்தது. முன்பெல்லாம் வரலாற்றைப் பற்றிய கருத்துக்களிலும் அரசியலைப் பற்றிய கருத்துக்களிலும் குழப்பமும் தான்தோன்றித்தனமும் ஆதிக்கம் செலுத்தி வந்தன. இப்போது அவை போய் ஒருமித்த முழுமையும், உள்ளிணக்கமும் கொண்ட ஒரு விஞ்ஞானத் தத்துவம் வந்து விட்டது. வரலாற்றுத் துறை பொருள்முதல்வாதம் என்ற இந்தத் தத்துவம் காட்டுவதென்ன? உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக ஒரு சமுதாய அமைப்பு முறையிலிருந்து அதைவிட உயர்தரமான இன்னொரு சமுதாய அமைப்புமுறை எப்படி வளர்கிறது என்பதை - உதாரணமாக, நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு முறையிலிருந்து முதலாளித்துவ சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பதை - அது காட்டுகிறது.

இயற்கை என்பது - அதாவது வளர்ச்சி பெற்றுக்கொண்டேயிருக்கும் பருப்பொருள் - என்பது மனிதனுக்கு அப்பால் சுயமாக இருந்து வருகிறது. இந்த இயற்கையை மனித அறிவு பிரதிபலிக்கிறது. அதே போலத்தான் மனிதனின் சமுதாய அறிவு எனப்படுவதும் (அதாவது தத்துவஞானம், மதம், அரசியல் முதலானவை சம்பந்தமாக மனிதன் கொண்டிருக்கும் பல்வேறு கருத்துக்களும் போதனைகளும்) சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையைப் பிரதிபலிக்கிறது. அரசியல் ஏற்பாடுகள் என்பவையெல்லாம் பொருளாதார அடித்தளக் கட்டமைப்பின் மீது நிறுவப்பட்ட மேல்கட்டுமானமேயாகும். உதாரணமாக, நவீன ஐரோப்பிய அரசுகளின் பல்வேறு அரசியல் வடிவங்கள் எல்லாம் பாட்டாளி வர்க்கத்தின்மேல் பூர்ஷ்வா வர்க்கம் செலுத்தி வரும் ஆதிக்கத்தைப் பலப்படுத்தப் பயன்படுகின்றன என்பதை நாம் பார்க்கிறோம்.

மார்க்சின் தத்துவஞானம் பூர்ணத்துவம் பெற்ற தத்துவஞானப் பொருள்முதல்வாதமாகும். இந்தப் பொருள் முதல்வாதம் மனிதகுலத்திற்கு, குறிப்பாகத் தொழிலாளி வர்க்கத்துக்கு, மகத்தான அறிவுச் சாதனங்களை வழங்கியிருக்கின்றது. ●





- பசுவை விற்றாயிற்று
  சுரந்து கொண்டே இருக்கிறது
  கண்ணீர்!
- வெட்டும் கத்தி
  நுனியில் இனிக்கும்
  பிறந்த நாள் கேக்!
- எது அழகு...
  இலையா? பூவா?
  வேரில் ஏறிய நீர்!

அமுதபாரதியின் ஐக்கூ விதைகள்
'அமுதாலயம்', 3, சிவஞானம் சாலை, தியாகராயர் நகர், சென்னை – 17.
விலை ரூ.33




படிப்பகம்

www.padippakam.com

படங்கள்:
கே. கார்த்திகேயன்



"இதுவே அரட்டை அரங்கமா இருந்தா, தூள் கிளப்பியிருக்கலாம்... ம்..!"





கொங்கு கூட்டணி...



"நீங்களாச்சேன்னுதான் தலைவருக்கு போட்டிப் போடாம விட்டுட்டேன்..."

வெற்றி பெற்றதாக அறிவிப்பு வந்ததும் 'ராதாரவிக்கு ஜே' போட்டு சிலர் கோஷமிட ஆரம்பித்தனர். விஜயகாந்த் அணிக்குக் கிடைத்த வெற்றி என்று அதைப் பிரகடனப் படுத்துவதற்குப் பதிலாக, 'அண்ணன் ராதாரவி யாரை கைகாட்டறாரோ, அவங்கதான் இங்கே பதவிக்கு வரமுடியும். என்ன இருந்தாலும் ராதாரவி கிங்மேக்கர்தான்' என்றும் விஜயகாந்த் காதுபடவே காமெண்ட் அடித்தனர்.

இதைக் கண்டு பொறுக்க முடியாதவர்கள், "தலைவர் பதவியிலிருந்து விலகிவிட்டாலும், சங்கத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நினைக்கிறார் ராதாரவி. அதுக்கு நீங்க இடம் கொடுக்கக் கூடாது. இப்போதைக்கு செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராக ஜெயித்திருக்கிற ராதாரவி, துணைத் தலைவர் பதவியைக் கைப்பற்ற நினைக்கிறார். இந்தப் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்ற இருவரில் ஒருவரான தமிழ்ச்செல்வி, ராதாரவியின் விசுவாசி. அவரை ராஜினாமா செய்ய வைத்துவிட்டு, அந்த இடத்துக்குத் தான் வரப்போவதாக ராதாரவி இப்பவே சொல்ல ஆரம்பித்துவிட்டார். அதுக்கெல்லாம் நீங்க இடம் கொடுக்கக்கூடாது'' என்று விஜயகாந்த்தின் காதில் ஓத... அவர் முகம் இறுகியவராக அமைதி காத்தார்.

விஜயகாந்த்தின் தீவிர ஆதரவாளர்களில் சிலர் தமிழ்ச்செல்வியிடமே சென்று 'ராதாரவிக்காக நீங்க பதவியை ராஜினாமா செய்யக்கூடாது' என்று வற்புறுத்த... பதறிப் போன தமிழ்ச்செல்வி, 'அப்படியெல்லாம் நடக்காது. ராஜினாமா செய்வதற்கா இவ்வளவு கஷ்டப்பட்டுத் தேர்தலில் போட்டியிட்டேன்..? ஒருவேளை, விஜயகாந்த் கேட்டுக்கொண்டால் ராஜினாமா செய்வேன்' என்றார் அவசரமாக.

இதுபோதாதென்று, எதிரணியில் போட்டியிட்ட சிலர் தேர்தல் தினத்தன்று 'சினிமா நடிகர் – நாடக நடிகர்' என்ற பேதத்தைப் பெரிதுபடுத்தி வோட்டு வேட்டை ஆடியதும் விஜயகாந்த்தை ரொம்பவே அப்செட் ஆக்கியது. சங்கக் கட்டடத்தின் வாசலில் நின்றுகொண்டு, "சினிமாக்காரங்களை நம்பாதீங்க. நம்ம உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமானால், நாடக நடிகர்களையே தேர்ந்தெடுங்கள்'' என்ற ரீதியில் சிலர் பிரசாரம் செய்தது, உடனடியாக விஜயகாந்த் காதுக்கு வந்தது. அப்போதைக்குப் பல்லைக் கடித்துக்கொண்டு சும்மாயிருந்த அவர், தேர்தல் முடிவுகள் முழுக்க வெளியானதும் தன் கோபத்தைக் கட்டவிழ்த்து விட்டார்.

நாடக நடிகர்கள் சார்பில் எதிரணியில் துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டுத் தோற்ற ரங்கசாமி என்பவரை அழைத்தார். ''ஏண்ணே... காலையில என்னமோ 'சினிமாக்காரங்களை நம்பாதீங்க. நாடகக் காரங்களை அவங்க நட்டாத்துல விட்டுருவாங்க'னு பிரசாரம் பண்ணீங்களாமே... அப்பவே எனக்குக் கோபம் வந்தது. தேர்தல் நல்லபடியா நடந்து முடியட்டும்னு பொறுத்துக்கிட்டு இருந்தேன். இல்லாத பேதங்களையெல்லாம் ஏன் உண்டாக்கறீங்க?'' என்று சீறினார் விஜயகாந்த். அப்படியும் கோபம் அடங்காதவராக,

''எனக்கெல்லாம் இந்தப் பதவிக்கு வந்து என்ன ஆகவேண்டியிருக்கு..? லட்சம்லட்சமா சம்பளம் வாங்கிக்கிட்டு, என் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போக முடியாதா..? சங்கக் கடனை எப்படியாவது அடைக்கணும்னுதானே எல்லாரும் பாடுபடறோம்...'' என்று வியர்வை பொங்கக் கைகளை வீசி விஜயகாந்த் பேச, சுற்றி நின்ற ஒருவருமே மூச்சுக் காட்டவில்லை – ரங்கசாமி உட்பட.

தன் அணியிலும் சரி, எதிர்த் தரப்பிலும் சரி... எந்த நேரமும் குழப்பங்கள் உருவாக்கப்படலாம் என்று விஜயகாந்த் இப்போதே எச்சரிக்கையாகிவிட்டதாகத் தெரிகிறது.

இதற்கிடையே ரஜினிகாந்த், "இரண்டு 'ஸ்டார் நைட்' புரோக்ராம்களுக்கு ஏற்பாடு பண்ணுங்க. அதுக்கு என் ஆதரவு உண்டு. நல்ல மனசோட நாமெல்லாம் சேர்ந்து பாடுபட்டா, கடனை ஈஸியா அடைச்சுடலாம்'' என்று சொல்லிவிட்டுப் போனதில், ரொம்பவே உற்சாகமாகியிருக்கிறார், புதுத் தலைவர் விஜயகாந்த்!

**– எஸ்.பி. லட்சுமணன்**



படிப்பகம்

www.padippakam.com


# சுஜாதா

புதிய அறிவியல் தொடர்

முதல் உயிர் எப்படித் தோன்றியது என்று யோசிக்குமுன் ஒரு விஷயம்... நாம் எல்லோரும், அதாவது மனிதன், மிருகம், புல், பூண்டு எல்லாமே ஒரே தினத்தில் அத்தனை சிக்கல்களுடனும் படைக்கப்பட்டோம் என்கிற புராணங்களை நம்புவதை விட, இவை அத்தனையும் ஒரு சில எளிய தனிமங்களிலிருந்து ஆரம்பித்து; படிப்படியாக சிக்கல் பெற்று, உயிரமைப்புகளாயின என்பதை நம்புவது விஞ்ஞானிகளுக்கு எளிது.

இவை அத்தனையும் ஒரே நாளில் படைக்கப்பட்டன என நம்புபவர்கள் இந்த இடத்திலேயே கட்டுரைத் தொடரிலிருந்து விலகலாம். காரணம், நான் சொல்லப் போவது சில ஆழமான நம்பிக்கைகளின் அஸ்திவாரங்களைக் கலைத்து அதிர்ச்சி தரும்.

பிரபஞ்சத்தில் திடப் பொருள்கள், திரவங்கள், வாயுக்கள் எல்லாமே எளிய தனிமங்களால் அமைந்தவை. சூரியனையே ஆதாரமாகப் பார்த்தால், ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம்! தண்ணீர், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன், உயிரற்ற திடப்பொருள்கள் அனைத்துமே ஸ்திர நிலையில் உள்ள அணுக்களாலான கூட்டமைப்புகள் –



படிப்பகம்

www.padippakam.com

# ஜீனோம்!

மாலிக்யூல்கள். உதாரணமாக, உப்பு என்பது சோடியம், க்ளோரின் இரண்டு தனிமங்கள் சேர்ந்த கூட்டணு. நம் ரத்தத்தில் உள்ள ஹெமோக்ளோபின் 574 அமினோ அமிலங்களின் கூட்டமைப்பு.

உயிருள்ளவையிலும் உயிரற்றவையிலும் ஆதாரத் தனிமங்கள் ஒரு சிலவே. இந்தத் தனிமங்கள் ஒரு வகையாகக் கூட்டுச் சேர்ந்து, சட்டென்று மனிதன் உருவானான் என்பது சாத்தியமில்லை. காரணம், மனித உடலில் இருக்கும் அணுக்களின் எண்ணிக்கை பத்து லட்சம் கோடி கோடி கோடி.

இவை அனைத்தும் தற்செயலாக ஒன்றுசேர்ந்து - 'இதோ புருஷன்... அதோ புருஷி' என்று உருவானார்கள் என்பது விஞ்ஞானத்துக்கு ஏற்றதல்ல. ஆனால், தற்செயலாக ஒரே ஒரு எளிய கூட்டணு உண்டாயிற்று என்று சொன்னால் நம்பலாம். அப்படித்தான் நாம் வந்தோம்.

இயற்கையில் நாம் எல்லோரும் பிழைப்பு இயந்திரங்கள் (Survival Machines). நாம் என்றால் மனிதர்கள் மட்டும் இல்லை... மிருகங்கள், தாவரங்கள், பாக்டீரியா, வைரஸ் போன்ற நுண்கிருமிகள் எல்லாமே. பூமியில் மொத்தம் எத்தனை உயிரினங்கள் என்று கணக்கிடுவது கடினம். பூச்சி வகைகளே முப்பது லட்சம்! உலகத்தில் உள்ள மொத்த பூச்சிகளின் எண்ணிக்கை கோடி கோடி லட்சம். ஒரு ஆக்டபஸூம் எலியும் ஆலமரமும் தோற்றத்தில் வேறுபட்டவை. ஆனால், அவற்றின் உள்ளே இருக்கும் ஜீன்களை உற்றுப் பார்த்தால், எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான மாலிக்யூல்கள்.

2

பாக்டீரியாவிலிருந்து யானை வரை ஒரே கட்டமைப்பு. இதை நோக்கிய பின்தான் உயிர் எப்படி முதலில் பூமியில் தோன்றியது என்று சிந்திக்க ஆதாரங்கள் கிடைத்தன.

எப்படித் தோன்றியது..?

நான் சொல்லப்போவது ஒரு ஊகம்தான். ஏனெனில், முதல் உயிர் தோன்றியபோது நான் அங்கு இல்லை. இதுபற்றிய பல சித்தாந்தங்களில் நான் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்போவது பொதுவான, எளிமைப்படுத்தப்பட்ட, உண்மைக்கு மிக அருகில் இருக்கக்கூடிய விளக்கம்.

ஆரம்பக் காலத்தில் பூமியில் நீர், கார்பன்-டை-ஆக்ஸைடு, மீத்தேன், அமோனியா போன்ற எளிய பொருட்கள் தான் காலம் காலமாக இருந்தன. இவற்றை இன்றும் நம் சூரியக் குடும்பத்தின் சுக்கிரன் செவ்வாய் போன்ற மற்ற கிரகங்களில் பார்க்க முடிகிறது. (சமீபத்தில் செவ்வாயில் தண்ணீர் இருப்பதாக விஞ்ஞானிகள் சொல்ல... சென்னை குடிநீர் ஜோக்காளர்கள் நாற்பத்தெட்டு ஜோக்குகள் எழுதிவிட்டார்கள்).

இன்று நேற்று போல, அன்றும் மின்னல் அடித்துள்ளது. இளம் பூமியின் அன்றையச் சூழல்களை ஆராய்ச்சியாளர்கள் இன்றும் சோதனைச் சாலையில் உண்டுபண்ணிப் பார்த்திருக்கிறார்கள். மேற்சொன்ன எளிய

படிப்பகம்

www.padippakam.com

பொருள்களை ஒரு ஃப்ளாஸ்கில் போட்டுக் கலக்கி, அதன்மேல் ஒரு மின்வெட்டையோ அல்ட்ராவயலட் வெளிச்சத்தையோ அடிக்கடி செலுத்திப் பார்த்திருக்கிறார்கள். சில வாரங்களில் ஃப்ளாஸ்கில் சுவாரஸ்யமான ஒரு விஷயம் நிகழ்ந்தது. எளிய கார்பன், மீத்தேன் போன்ற பொருள்கள் இன்னும் கொஞ்சம் சிக்கலாகி, பழுப்பாகக் குழம்பு போல் ஆயின. அவற்றை அலசியதில், சில சமயம் அமினோ அமிலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த அமினோ அமிலங்கள்தான் புரோட்டீன் என்னும் பதார்த்தத்தின் ஆதாரச் செங்கற்கள்.

புரோட்டீன்தான் உயிரின் ஆதாரம்.




ஆனால், அமினோ அமிலங்கள் ஏற்பட்டதை மட்டும் வைத்து இப்படித்தான் உயிர்கள் உண்டாயின என்று சொல்வதற்கும் சாட்சியம் போதாது. அண்மைக் காலத்தில் இந்தப் பரிசோதனைகளில் பியுரின், பிரமிடைன் போன்ற கூட்டணுக்கள் உண்டாவதைக் கண்டுபிடித்தார்கள். இவை உத்தரவாதமாக டி.என்.ஏ-யின் கூறுகள். இதை பிரைமிவல் சூப் (Primeval Soup) – ஆதிநாள் குழம்பு என்கிறார்கள். முந்நூறு அல்லது நானூறு கோடி வருஷங்களுக்கு முன் இவ்வாறான சூப்தான் கடலில் இருந்திருக்க வேண்டும். அவை கரையோரத்தில் கட்டி தட்டிப் போயிருக்க வேண்டும். மேலும், அவற்றின்மேல் சூரிய வெளிச்சத்தில் அல்ட்ராவயலட் என்னும் புறஊதாக் கதிர்கள் படபட அளவில் பெரிய கூட்டணுக்களாயின. இவை உலகெங்கும் திரிந்தன.

இந்தக் கூட்டணுக்களில் ஒரு நாள் – ஒரு கணத்தில், ஒரு கூட்டணு மட்டும் தப்பிப் பிறந்தது. அதை ரெப்ளிகேட்டர் என்கிறார்கள். அது ஒன்றும் பெரிய மாலிக்யூல் இல்லை. ஆனால், அதற்கு ஒரு வியப்பூட்டும் குணம் இருந்தது. வேறு உதவிகள் இன்றித் தன்னைத்தானே பிரதியெடுத்துக்கொள்ள அதனால் முடிந்தது. இது ஒரு மிக மிகத் தற்செயலான நிகழ்ச்சி என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு மனிதனின் வாழ்நாளில்கூட இந்தத் தற்செயல் நிகழ்ச்சி சாத்தியம் இல்லைதான். லாட்டரியில் பத்து கோடி ரூபாய் ஒரு டிக்கெட்டில் விழும் சாத்தியக்கூறைவிட கம்மிதான். ஆனால், நீங்கள் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நூறு கோடி வருஷங்களுக்கு லாட்டரி டிக்கெட் வாங்கினால், உங்களுக்கு ஒரு நாள் விழுந்தே தீராதா..? அதுபோல்தான் இந்த முதல் முதல் ரெப்ளிகேட்டர் அரிதினும் அரிதினும் அரிதான உதயமாகப் பிறந்தது. இந்தக் கூற்றை ஒப்புக்கொண்டுவிட்டால், மற்றதெல்லாம் அதனதன் இடத்தில் விழுந்து, மனித உயிர் உருவானது வரை வந்துவிடலாம்.

பிரபஞ்சத்தில் ஆரம்பக் கணமான Big Bang போல உயிரின் 'பிக் பாங்' இது. பிரபஞ்சம் சூனியத்திலிருந்துதான் எல்லாம் உண்டாயிற்று என்று சொல்கிறார்கள். அதுபோல், கோடானுகோடி வருஷங்களுக்கு முன் தற்செயலாக ஒரே ஒரு முறை தன்னைத்தானே காப்பியடித்து உருவாக்கிக் கொள்ளும் தகுதிபெற்ற ஒரு கூட்டணுதான் நம் உலகின் உயிர்களுக்கெல்லாம் மெகா மகா கொள்ளுத் தாத்தா.

இது சாத்தியம்தான் என்று சொல்லுமளவுக்கு, பரிணாம வளர்ச்சிகள் படிப்படியாக உண்டாகப் போதிய சமயமிருந்திருக்கிறது. ஆக, நாம் எல்லோரும் சூரிய மின்வெட்டின் புத்திரர்கள். சூரியன், பிரபஞ்சத்தின் ஆரம்பக் கணத்தின் மகாமகா வெடியில் புறப்பட்ட சக்தியின் புத்திரன். எனவே, நாம் அனைவரும் பிரபஞ்சத்தின் குழந்தைகள். முதலாம் ரெப்ளிகேட்டர் வம்சம்.

**அந்த அற்பமான கூட்டணு எப்படி ஆறடி மனிதனாயிற்று என்கிற அதிசயம் அடுத்தது...**



படிப்பகம்

www.padippakam.com

# தமிழறிஞர்களுக்கு விருது

தமிழ்ச் சான்றோர் பேரவையின் ஆறாம் ஆண்டு தமிழகப் பெருவிழா இந்த ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற உள்ளது. ஆண்டுதோறும் நவம்பர் 1, மற்றும் 2-ஆம் நாள்களில் நடைபெறும் இவ்விழா, கடந்த ஆண்டு தஞ்சையிலும், அதற்கு முந்தைய ஆண்டுகளில் சென்னையிலும் மிகவும் எழுச்சியுடன் நடைபெற்றது.



நெல்லையில் நடைபெற இருக்கும் தமிழகப் பெருவிழாவில் பல்வேறு அரங்க நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும், பேரணியும் நடைபெற உள்ளன. தமிழகத்தின் பல்வேறு துறை அறிஞர்கள் நிகழ்வுகளில் பங்கேற்கிறார்கள்.

ஆண்டுதோறும் தமிழகப் பெருவிழாவில் தமிழ்ச் சான்றோர் பேரவை "சான்றோர் விருது" வழங்கி வருகிறது. இவ்வாண்டும் மூத்த தமிழ் எழுத்தாளர்கள் தொ.மு.சி.இரகுநாதன், வல்லிக்கண்ணன், தி.க.சிவசங்கரன் சி.சு.மணி, மணவை முஸ்தபா, கவிஞர் மீரா ஆகியோருக்குத் தலா (10,000) பத்தாயிரம் ரூபாய் பொற்கிழியுடன் கூடிய விருது வழங்கப்படவிருக்கிறது.

கில் வந்த முத்துவடுகநாதரும், வேலுநாச்சியாரும் மன்னரின் கூக்குரல் கேட்டு அதிர்ச்சி அடைந்தனர். தங்கள் பல்லக்கி லிருந்து இறங்கி, மன்னரின் பல்லக்கை நோக்கி ஓடி வந்தனர்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி...

நெஞ்சில் அம்புபட்டு மன்னர் துடித்துக் கொண்டிருந்தார்... அம்புபட்ட இடத்திலிருந்து இரத்தம் ஊற்று நீர்போல் பெருகியது.

தந்தையை தம்மடியில் படுக்க வைத்துக் கொண்ட முத்து வடுகநாதர், அம்பை எடுக்க முயன்றார். அந்த வேதனையிலும், அதை எடுக்க வேண்டாமென்று தம் சைகையால் மன்னர் வலியுறுத்தினர்.

அம்பு எய்தவன் யார்? எங்கிருந்து இந்த அம்பு ஏவப்பட்டது என்ற சிந்தனையில் இருந்த வேலு நாச்சியார் பார்வையில், அருகில் இருந்த புதரில் ஒரு அசைவு தெரிந்தது... அந்தப் புதரை நோக்கி வேலுநாச்சியார் பாய்ந்தார். புதரில் மறைந்திருந்த உருவம் ஒன்று தலைதெறிக்க ஓடியது... விரட்டிச் சென்று அந்த உருவத்தின் தலை முடியைப் பற்றி வேலு நாச்சியார் இழுத்தார். அந்த உருவம் மண்ணில் சரிந்தது. தாம் சிக்கிவிடுவோம் என்று அறிந்ததும் தம் கையிலிருந்த மற்றொரு அம்பைத் தம் வயிற்றில் பாய்ச்சி கொண்டான் அந்தக் கயவன். மண்ணில் கிடந்த அந்த மானிடப் பதரைத் தம் காலால் ஓங்கி ஒரு உதை கொடுத்துவிட்டு, மீண்டும் பல்லக்கை நோக்கி ஓடிவந்தார், வேலு நாச்சியார்.

முத்து வடுகநாதரின் மடியில் கிடந்த மன்னரின் நெஞ்சிலிருந்து இரத்தம் தொடர்ந்து வழிந்தோடியது. அந்த இரத்தத்தில் முத்து வடுகநாதரின் கண்ணீரும் கலந்தது. வேலு நாச்சியாரும் அழுகையை அடக்கிக் கொள்ள பெரும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார். மன்னரின் விழிகள் முத்து வடுகநாதரையும், வேலுநாச்சியாரையும் மாறிமாறிப் பார்த்தன. எதையோ சொல்ல மன்னர் விரும்புகிறார் என்பதைப் புரிந்து அவர்கள் செவி சாய்த்தனர்.

"பிறந்த எவரும் இறப்பது இயற்கை..." இதற்குப் பின் மன்னரின் மூச்சுத் திணறியது... சிறிது நேரம் அமைதி.

"நாம் பலநூறு பேர்களுக்கு நல்லவர்களாக இருந்தாலும், சில பத்துப் பேர்களுக்குத் தீயவர்களாகத்தான் தெரிவோம்... அனைவருக்கும் நல்லவர்களாக எவராலும் இருக்க இயலாது... அந்தச் சிலரில் ஒருவன்தான் என்மீது அம்பை எய்திருக்கிறான்..." என்று சொல்லி முடித்துவிட்டு கண்களை மூடிக் கொண்டார் மன்னர். முத்து வடுகநாதரும் வேலு நாச்சியாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மீண்டும் கண்விழித்த மன்னர், "அம்பிகையை நான் வணங்கிக் கொண்டிருந்தபோது எனது கண்களில் கண்ணீர் வடிந்த காரணத்தை இப்போது சொல்கிறேன்... உங்களுக்குத் திருமணம் ஆகி ஐந்தாண்டுகள் ஆகிவிட்டன... ஆனால், இதுவரை உங்களுக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை... இதைத்தான் அம்பிகையிடம் முறையிட்டுக் கொண்டிருந்தேன்... உங்கள் வாரிசைப் பார்க்காமலேயே என் விதி முடிந்துவிடுமோ என்று இப்போது அஞ்சுகிறேன்..." என்று சொல்வதற்குள் திணறினார் மன்னர் சசிவர்ணத் தேவர்.

"அப்பா! உங்களுக்கு ஒன்றும் ஆகாது!தைரியமாக இருங்கள்..." என்று முத்து வடுகநாதர் அழுது கொண்டே சொன்னார்.

அப்போது மன்னரின் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை தோன்றி மறைந்தது.

"ஆம்! மாமா! உங்களுக்கு ஒன்றும் ஆகாது!" என்று வேலு நாச்சியார் சொல்லி முடிப்பதற்குள், மன்னரின் தலை சாய்ந்தது!

'அப்பா!' என்ற முத்து வடுகநாதரின் குரல் அந்தக் காடு முழுவதும் எதிரொலித்தது.

(உலா தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# தத்துவம் பயில்வோம்

## இயற்கையா - ஆன்மாவா?

“என்ன அழகிய வீடு!” - ஒரு வீட்டைப் பார்த்ததும் அதை வடிவமைத்தவன் நமது நினைவுக்கு வருகிறான். அவனுடைய சிந்தனையின் உருவாக்கம்தான் இந்த வீடு எனும்போது மனிதனின் சிந்தனை ஆற்றல் நமக்கு வியப்பூட்டுகிறது. அப்படியானால், இந்தப் பூமியும் அதன்மீது இருக்கின்ற அனைத்தும் கூட சிந்தனையின் விளைவே என்று ஏன் கருதக் கூடாது?

ஒருவர் இவ்வாறு கருதலாம் என்பது உண்மையே. ஆனால், இது விஞ்ஞானம், அனுபவம் ஆகியவற்றின் சான்றுடன் ஒத்துப் போகுமா?


ஒளி, ஒரு வருடத்திற்கு ஒன்பது லட்சத்து நாற்பத்து நாலாயிரம் கோடி கிலோமீட்டர்கள் பயணம் செய்யவல்லது. இந்தத் தூரத்தை ஓர் ஒளி ஆண்டு (light-year) என்று சொல்லுவார்கள். சூரிய மண்டலம் ஒரு பகுதியாக உள்ள, நட்சத்திரங்களும் மற்ற விண்கோள்களும் சேர்ந்த பால்வழி மண்டலம் என்ற மாபெரும் நட்சத்திரக் கூட்டம், சுமார் ஒரு லட்சம் ஒளி ஆண்டுத் தூரக் குறுக்களவு கொண்டது ஆகும். இந்தப் பால் வழி மண்டலம், அதிலிருந்து நெடுந்தொலைவில் இருக்கும் நட்சத்திரக் கூட்டங்களுக்கு இடையே இயங்குகிறது. மிகவும் சக்தி வாய்ந்த தொலைநோக்கிக் கண்ணாடிகள், ரேடியோக் கருவிகள் ஆகியவற்றின் துணை கொண்டு இப்போது விஞ்ஞானிகளால் ஆய்வு செய்யக் கூடியதாக உள்ள பிரபஞ்சத்தின் பகுதி மட்டும் 2,600 கோடி. மிகப் பரந்த பரப்புங்கூட. மிக மிக நவீனமான கருவிகளின் துணை கொண்டும் நம்மால் எட்ட முடியாமல் இருக்கின்ற பிரபஞ்சத்தின் அனைத்து இதர பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அற்ப சொற்பமானதே ஆகும்.

••

பிரபஞ்சத்தின் இரகசியங்களை உட்புகுந்து அறியவும், இயற்கையின் பேராற்றல் வாய்ந்த சக்திகளைப் புரிந்து கொண்டு மக்களின் நன்மைக்காக அவற்றைப் பயன்படுத்தவும் மனிதனின் அறிவால் முடியுமா என்று தீர்மானிக்கவும் தத்துவம், அது தோன்றிய கணம் முதலே முயன்று வருகிறது. பல்வேறு சமூக வர்க்கங்கள், குழுக்களின் நலன்களைத் தத்துவம் வெளியிடுகிறது.

••

கண்டங்கள், கடல்கள், தாவரங்கள், பிராணிகள், மனிதர்கள் ஆகிய அனைத்துடனும் சேர்ந்த பூமியே இந்த விரிவான பிரபஞ்சத்தில் ஒரு நுண்ணிய தூசு ஆகும்.



இப்பூமி, வாழ்ந்துள்ள காலத்துடன் ஒப்பிடும் பொழுது, இங்கு உயிர்கள் தோன்றியது மிகமிக அண்மையில்தான் என்றும், பூமி என்று நாம் அழைக்கின்ற கிரகத்தில் வாழும் உயிர்கள் என்பவை வெகு குறைவான அளவிலேயே உள்ளன என்றும் நவீன விஞ்ஞானம் சான்று பகர்கிறது. மனித இனமோ இதனிலும் இளையது. மனித இனத்தின் வயது பத்து லட்சம் ஆண்டுகளுக்குச் சற்றே அதிகம். வானவெளிக் கப்பல்கள் மூலமும் இதர ஆய்வுகளின் மூலமும் பூமிக்கும் அதன் துணைக் கிரக



படிப்பகம்

www.padippakam.com

மான சந்திரனுக்கும் இடையில் எங்கும் எத்தகைய உயிர்களும் இல்லை என்றும், சிந்தனை ஆற்றல் உள்ள உயிர்கள் இருப்பது பற்றிய பேச்சே இல்லை என்றும் விஞ்ஞானிகள் உறுதியாக முடிவு செய்திருக்கிறார்கள்.

ஆகவே, எல்லையற்ற பிரபஞ்சத்தில் எண்ணற்ற வடிவங்களில் உயிரினங்கள் இருக்கக் கூடும் என்ற போதிலும், இந்த உயிரினங்களின் ஒரு சிறு பகுதிக்குத்தான் சிந்திக்கும் திறன் இருக்கிறது என்று தெரிகிறது. "... இந்த வட்டத்தில் உயிரும் சுய உணர்வும் செயல்படுகிற இடைவெளி (space) எப்படி குறுகலாக வரையறுக்கப்பட்டுள்ளதோ அதைப் போலவே... உயிர்ப்புள்ள ராசிகளுக்கான காலமும் குறுகலாக வரையறுக்கப்பட்டுள்ளது; இதை விட இயற்கையைப் பற்றியும் தங்களைப் பற்றியும் சுய உணர்வு உள்ள ஜீவிகளின் வாழ்வுக்கான காலமும் குறுகலாக வரையறுக்கப்பட்டுள்ளது" என்ற எங்கெல்சின் சொற்கள் மிகச் சரியானவையே என்று நவீன விஞ்ஞானம் உறுதி செய்கிறது.



நவீன விஞ்ஞான அறிவின் மூலம் பார்க்கையில், சிந்தனை என்பது பிரபஞ்சத்தின் பலப் பல படைப்புகளில் ஒன்றே என்று தோன்றுகிறது. காலம் (time) விசும்பு (space) ஆகியவற்றைப் பொறுத்த வரை எல்லையற்றதாய் இருக்கும் பிரபஞ்சம் சிந்தனையால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்ற கூற்றோ கொஞ்சம் கூட ஏற்றுக் கொள்ளத் தகாததாய்த் தோன்றுகிறது. இந்தக் கருத்தின் ஆதரவாளர்கள் நமது விஞ்ஞான அறிவு முழுமை அடையாத ஒன்று எனவும், எவ்வளவோ விஷயங்கள் நமக்கு இன்னும் தெரியாமல் இருக்கின்றன என்றும் வாதிக்கக் கூடும். இது உண்மைதான். ஆனால், அறியாமை என்பது ஒரு வாதமல்ல.

இவ்வாறாக, ஆழ்ந்து ஆராய்வு செய்ய வேண்டிய ஒரு பிரச்னைக்கு நாம் வந்து சேர்ந்திருக்கிறோம்.

எந்த ஒரு விஞ்ஞானத்தையும் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், முதற்கண் எத்தகைய

உடல் அழியும்
பொழுது புலன்
உணர்வுகளும்
சிந்தனையும் முற்றாக
மறைந்து
போகின்றன.

அடிப்படையான பிரச்னைகளை அந்த விஞ்ஞானம் ஆய்வு செய்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, இரசாயனத்தில் அணுக்கள் எவ்வாறு ஒன்று சேர்கின்றன, பிளவுபடுகின்றன என்றும், இதன் விளைவாகப் பொருள்கள் தமது இயைபில் எவ்வாறு மாற்றம் அடைகின்றன என்றும் தெரிந்து கொள்வது தான் இதர எல்லாப் பிரச்னைகளுக்கும் அடிப்படை. இதைத் தெரிந்து கொண்டால், இரசாயன விஞ்ஞானத்தைப் பற்றிய அடிப்படைக் கருத்தை நாம் உருவாக்கலாம். இவ்வாறுதான் விஞ்ஞானங்கள் அனைத்தைப் பற்றியும் நாம் அறிய முயல வேண்டும். ஒரு விஞ்ஞானத்தைப் பயிலத் தொடங்குகையில், அதன் அடிப்படைப் பிரச்னையைத் தெரிந்து கொண்டால், இன்னும் முழுமை அடையாத, ஆனால் சரியான ஆரம்ப அறிவை நாம் பெற்றவர்கள் ஆவோம்.

விஞ்ஞானத்தின் உள்ளடக்கத்தைப் பயிலும் போது, இந்த அறிவு மேன் மேலும் முழுமை அடைந்து ஆழமாகும். எனவே, தத்துவஞானம் என்ற விஞ்ஞானத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், இது ஆய்வு செய்கின்ற அடிப்படைப் பிரச்னை என்ன என்று முதலில் அறிந்து கொள்வது அவசியம்.

நம்மைச் சுற்றி உள்ள பொருள்கள், அனைத்தையும், இப்பொருள்களில் உண்டாகிற யாந்திரிக, பௌதிக, இரசாயன, உடலியல் வகைப்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்தையும் பொருள் வகைப் புலப்பாடுகள் (material phenomena) என்றும், அல்லது வெறுமே பருப்பொருள் (matter) என்றும் சொல்வது வழக்கம். நம்மில் ஐம்புலன்களால் வழங்கப் பெறும் பெருமை, வெட்கம், கோபம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளும், மூளையில் பொங்கி வழியும் சிந்தனைகளும், வழக்கமாக இலட்சிய, ஆன்மீகப் புலப்பாடுகள், அல்லது உணர்வுக்குரிய புலப்பாடுகள், அல்லது வெறுமே உணர்வு என்று வர்ணிக்கப்படுகின்றன.

வயது செல்லச் செல்ல, மனித



படிப்பகம்

www.padippakam.com

உடல் வளர்ச்சி அடைகின்ற விதத்திலும், பல்வேறு கருவிகளை உபயோகித்து, மற்ற மனிதர்களுடன் உறவு கொண்டு பழகி, வகை வகையான வேலைகளைச் செய்வதற்கான திறன் மனிதனுக்கு அதிகரிக்கின்ற நிலையிலும் வர்ணம், ஒளி, மணம் ஆகியவற்றை வேறுபடுத்தி அறிவதற்கான திறனும், மனிதப் புலன்களும் மூளையும் மேம்பாட்டை அடைகின்றன என்று வெகு காலத்துக்கு முன்பே அறியப்பட்டுள்ளது. மனித உடலில் தோன்றும் கடுமையான நோய்களால் அவன் உணர்வு பாதிக்கப் படுகிறது, அல்லது அவன் உணர்வு இழந்து விடலாம். உடல் அழியும் பொழுது புலன் உணர்வுகளும் சிந்தனையும் முற்றாக மறைந்து போகின்றன. இந்த உண்மைகள் ஆன்மீகப் புலப்பாடுகளுக்குப் பொருள்வகைப் புலப்பாடுகளே அடிப்படை என்று பறை சாற்றுகின்றன.


எனினும், மற்ற சில உண்மைகளும் கவனத்தைக் கவர்ந்துள்ளன. சிறுவன் ஒருவன் சன்னல் கண்ணாடியைத் தற்செயலாக உடைத்து விட்டான் என்று சொல்லும் பொழுது, கண்ணாடியை உடைப்பது அவனது நோக்கமாக இருக்கவில்லை என்று பொருள்படுகிறது. ஆனால், பையனுடைய கை, அவனது விருப்பமோ, முயற்சியோ இன்றி தானாகவே கல்லை எடுத்து வீசியதாக இதற்குப் பொருள் கொள்ள முடியாது. ஏதோ ஒரு உணர்ச்சி அல்லது சிந்தனைதான் அவனைக் கல்லெடுத்து வீசுமாறு செய்திருக்கிறது என்பது தெளிவு. அந்தக் கல் அவன் குறிவைத்த இலக்கைத் தவற விட்டு வேறு இடத்தில் தாக்கியிருக்கிறது.

மனிதன் வெறும் இயந்திரம் அல்ல, அவன் சிந்தனை செய்கிற, உணர்ச்சி அடைகிற ஓர் உயிர்ப் பிராணி. புத்திசாலித்தனமான அல்லது முட்டாள் தனமான செயல்கள் அனைத்தையும் தூண்டி விடுவது அவனது உணர்ச்சிகளோ, கருத்துக்களோதாம். கலப்பை ஒன்றைச் செய்வதற்கு முன்னால் நிலத்தில் உழுவதற்கோ, விதைப்பதற்கோ முன்னால், இவையாவும் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதை அவன் தீர ஆலோசிக்கிறான்.

●●

**கல்வி, கலை, விஞ்ஞானம் ஆகியவை சிறுபான்மையில் இருந்த ஆளும் வர்க்கங்களின் தனி உரிமையாகி விட்டன. இவர்களது விருப்பமே சட்டமாகி எல்லோர் நடத்தையையும் முறைப்படுத்தலாயிற்று.**

●●



வெகு காலத்துக்கு முன்பே, சமுதாயத்தில் நிலவி வந்த அநீதிகளால் ஆத்திரம் கொண்ட அடிமைகளை, ஒடுக்குவோருக்கு எதிராகக் கொதித்து எழுந்து போராடச் செய்தது அவர்களது சுதந்திரத் தாகம். தாய்நாட்டின் மீதும் தமது மக்களின் மீதும் கொண்ட பாசம், ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஜீவ மரணப் போராட்டம் நடத்துவதற்கும் மனிதர்களைத் தூண்டியது. இந்தச் செயல்களுக்கு நேரடியான காரணம், மனிதர்களது கருத்துக்களும் உணர்ச்சிகளுமே.

இந்த உண்மைகளைச் சிந்தித்துப் பார்க்கும் எவரும் ஆன்மீகப் புலப்பாடுகளே பொருள்வகைப் புலப்பாடுகளை உண்டாக்குகின்றன, அவை மனிதர்களின் செயல்பாடுகளுக்கு நிர்ணயகரமானவை என்னும் முடிவுக்கு இயல்பாகவே வர நேர்ந்தது.

இத்தகைய கருத்து, ஏழ்மையில் வாடுகின்ற உழைப்பாளி மக்களாகவும் உழைப்பாளி மக்கள் உற்பத்தி செய்யும் செல்வங்களை உழைக்காமல் இருந்தபடி கைப்பற்றிக் கொள்ளுகிற ஆதிக்கவாதிகளாகவும் சமுதாயம், பகைமை வர்க்கங்களாகப் பிளவுண்ட போது, குறிப்பாகப் பரவியது. கல்வி, கலை, விஞ்ஞானம் ஆகியவை சிறுபான்மையில் இருந்த ஆளும் வர்க்கங்களின் தனி உரிமையாகி விட்டன. இவர்களது விருப்பமே சட்டமாகி எல்லோர் நடத்தையையும் முறைப்படுத்தலாயிற்று. இத்தகைய ஒரு நிலைமை, சமுதாயத்தின் பொருள் வகை வாழ்வுடன் ஒப்பிடுகையில் உணர்வுதான் முதன்மையானது என்பது போன்ற ஒரு கருத்தைத் தோற்றுவித்தது. எனவே, சமுதாயத்திற்கு அப்பாலுங்கூட, உலக முழுவதிலும் ஆன்மீகப் புலப்பாடுகள் பொருள்வகைப் புலப்பாடுகள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன என்று முடிவு செய்யப்பட்டது.

எதிலிருந்து எது தோன்றியது? பொருள்வகைப் புலப்பாடுகளிலிருந்து ஆன்மீகப் புலப்பாடுகள் வந்தனவா? ஆன்மீகப் புலப்பாடுகளிலிருந்து பொருள்வகைப் புலப்பாடுகள் உண்டாயினவா? உணர்விலிருந்து பருப்பொருள் வந்ததா? பருப்பொருளிலிருந்து உணர்வு வந்ததா? முதலில் தோன்றியது எது; ஆன்மாவா? இயற்



படிப்பகம்

www.padippakam.com

கையா? இந்தக் கேள்வி மிகப் பழங்காலத்திலேயே தத்துவஞானிகளிடையே வாதத்தைக் கிளப்பி விட்டது. இந்தக் கேள்விக்குக் கிடைக்கின்ற தீர்வைப் பொறுத்துத் தான் மற்ற தத்துவஞானக் கேள்விகளுக்கான தீர்வு அமையும். தத்துவஞானிகள் இரண்டு முகாம்களாகப் பிரிந்தனர்: பொருள்வகை உலகையோ இயற்கையையோ சார்ந்திராமல் சுயேச்சையாக இருந்து வரும் உணர்வு அல்லது ஆன்மாதான் இயற்கையை, அதாவது பொருள்வகை உலகைத் தோற்றுவிக்கிறது என்று கூறுகிறவர்கள் கருத்து முதல்வாதிகள் முகாமைச் சேர்ந்தவர்கள், மாறாக, பொருள் வகை உலகு, அல்லது இயற்கை தான் உணர்வு, அதாவது ஆன்மாவைத் தோற்றுவிக்கிறது என்று கூறுகிறவர்கள் பொருள் முதல்வாதிகள் முகாமைச் சேர்ந்தவர்கள். பொருள் வகை உலகுடன் உணர்வு கொண்டுள்ள உறவு பற்றிய பிரச்னை தத்துவஞானம் முழுமைக்கும் மாபெரும் அடிப்படைப் பிரச்னை என்றும், உணர்வு பொருள்வகை உலகை உண்மையாகப் பிரதிபலிக்கும் ஆற்றல் உடையதா என்ற பிரச்னையும் அடங்கியுள்ளது என்றும் பிரெடெரிக் எங்கெல்ஸ் குறிப்பிட்டார். இந்தப் பிரச்னையைப் பற்றிய பல்வேறு தத்துவஞானிகளின் கருத்துக்களைப் பின்னர் பார்ப்போம். இப்போது, நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகத் தத்துவஞானிகளிடையே சச்சரவுக்குரியதாக இருந்த முக்கிய பிரச்னையைப் பார்ப்போமா? ●

# மானுடம் இங்கே மலிவாய்ப் போனது!

அளவுக்கதிகமாக அதிகாரமும் பணமும் குவியும்போது மனிதனுக்கு வக்கிரமான எண்ணங்கள் உதிக்கின்றன என்கிறார்கள் உளவியலாளர்கள். இதனால்தான், பண்டைய கிரேக்கத்தில் பிரபுக்கள் அடிமைகளை சிங்கத்துடன் மோதவிட்டு வேடிக்கை பார்த்தார்கள். சிங்கத்திடம் நார்நாராக மனிதன் கிழிபட்டு இறப்பதை ரசனையுடன் பார்த்து மகிழ்ந்தார்கள் இன்றும் கூட ஸ்பானியர்கள் 'மேடடார்' என்ற பெயரில் காளையுடன் மனிதனை மோதவிட்டு அவன் குடல் சரிந்து சாவதை அனுபவித்து ஆனந்திக்கிறார்கள்.

தொன்று தொட்டு வரும் இந்த வக்கிரத்தின் இன்னொரு வெளிப்பாடாக தற்போது ஐரோப்பிய கனவான்கள் குரங்குக் கறியைத் தின்று தீர்ப்பதில் போட்டி போட ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஏற்கெனவே, பலவிதமான மக்களையும், பண்பாடுகளையும், மொழிகளையும் கொண்ட ஆப்பிரிக்க கண்டம் ஐரோப்பிய முதலாளித்துவ சக்திகளால் விருப்பம் போலக் கூறு போடப்பட்டது. 1884ம் ஆண்டு பெர்லினில் பிரெஞ்சு, ஆங்கிலேய போர்த்துக்கீசிய நாடுகள் ஒன்று கூடி மாநாடு நடத்தி ஆப்பிரிக்காவின் தலைவிதியைத் தீர்மானித்தார்கள் இன்றளவும் அந்த அடிமைத் தளைகளிலிருந்து முற்றாக விடுபட இயலாமல் ஆப்பிரிக்கா தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த லட்சணத்தில் மனிதர்கள் கொல்லப்படுவது போக இப்போது வனவிலங்குகளுக்கும் ஆபத்து வந்திருக்கிறது.



ஆதிக்க மனோபாவம் கொண்ட ஐரோப்பிய நாடுகள் கிரேக்க பிரபுக்களைப் போல செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆப்பிரிக்க மக்கள் அடிமை வம்சம் போல் நசுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, கூட்டம் கூட்டமாகப் பலாத்காரமாகப் புலம் பெயர்க்கப்பட்ட இந்த அப்பாவி மனிதர்கள் தங்களது வேர்களை இழந்து, மொழி, தேசிய அடையாளங்களைத் தொலைத்துவிட்டு முகமற்றவர்களாக இருக்கிறார்கள். போர்னியோவின் சுல்தான்களைப் போல் கேளிக்கைகளும் ஓய்வும் ஐரோப்பிய கனவான்களுக்கு. முடிவற்ற உழைப்பு கறுப்பின ஆண்களுக்கு; பாலியல் பலாத்காரம் கறுப்பினப் பெண்களுக்கு; என்பதுதான் திருத்தப்படாத தீர்ப்பு.

உண்பது என்று வந்து விட்டால் விதவிதமாக உண்ண வேண்டுமல்லவா? அதனால்தான், ஆப்பிரிக்காவின் பொருளாதாரத்தையும், வளத்தையும், உழைப்பையும் தின்ற ஐரோப்பியர்கள் இப்போது அதெல்லாம் போதாமல் ஆப்பிரிக்கக் குரங்குகளையும் தின்ன ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஆப்பிரிக்க மண்ணில் மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அது பற்றிக் கவலைப்படாத ஐரோப்பியப் பிரபுக்களின் பீங்கான் தட்டுக்களில் குரங்குகளின் உறுப்புகள் பரிமாறப்படுகின்றன.

வல்லரசுகளிடமிருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயுதங்கள் ஆப்பிரிக்க மண்ணில் குவிகின்றன. வறட்சியாலும் யுத்தத்தாலும் எண்ணற்ற கறுப்பின மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி யாரும் குரல் எழுப்ப முன் வரவில்லை. ஆனால், உர்ராங் உடான், சிம்பன்ஸி போன்ற அரிய குரங்கினங்கள் அழிகின்றனவே என்று கூக்குரல் எழுப்புகிறார்கள். ஒரு வேளை, கறுப்பின மக்கள் அழிவதைவிட குரங்கினம் அழிவதுதான் கவலைக்குரிய செய்தி என்று நினைக்கிறார்களோ? ●



படிப்பகம்

www.padippakam.com

திரைப்படத் தொகுப்பாளர் **லெனின்**



# என்னைச் செதுக்கிய சிற்பிகள்

லெனின்

முகம் தெரியாத இந்தக் கலைஞரின் பெயர் திரையில் தெரிந்தாலே, ஆரவாரம் எழுகிறது.

தமிழ்த் திரைப்படத்தை உலகத் திரைப்படத்தின் தரத்துக்கு உயர்த்திய உன்னதக் கலைஞர்களில் ஒருவர் - எடிட்டர் லெனின்.

அவர் தன்னைச் செதுக்கிய சிற்பிகளை இங்கே விவரிக்கிறார்.

இவரது தந்தையோ பல வெள்ளிவிழாப் படங்களின் இயக்குநர். இவர் உதவியாளராகப் பணிபுரிந்ததோ மாபெரும் கலைஞர்களான ரிஷிகேஷ் முகர்ஜி, சாந்தாராம், சத்தியஜித்ரே, மிருணாள் சென், கிரீஷ் கர்னாட் போன்றவர்களுடன் தனித்துப் படங்களில் பணிபுரிந்து, 'படத் தொகுப்பாளர்', 'இயக்குநர்', 'குறும்பட இயக்குநர்' என்று புகழ்பெற்று மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் விருதுகள் பெற்றவர் லெனின். இவர், தன்னைப் பெரிதும் பாதித்த, செதுக்கிய மாமனிதராக ப.ஜீவானந்தம் அவர்களைக் குறிப்பிடுகிறார்...

☐

ஆரம்பத்தில் புரசைவாக்கத்தில் தான் நாங்கள் குடியிருந்தோம். அப்பா அப்போது உதவி இயக்குநராகப் படங்களில் பணிபுரிந்து கொண்டிருந்தார். புரசைவாக்கம் உள்ளிட்ட வடசென்னைப் பகுதி அப்போது பொருளாதாரத்திலும் அந்தஸ்திலும் பின்தங்கிய பகுதியாக இருந்தது. (இப்போது கூட நிலைமை பெரிதாக மாறிவிடவில்லை).

பொருளாதாரப் பற்றாக்குறை; தீராத பிரச்னைகள் என்று வாடிய இந்த மத்தியதரக் குடும்பங்கள் தங்களை மீட்க ஒரு அற்புதம் ஏதும் நிகழாதா என்ற ஏக்கத்துடன் பரிதவித்துக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்றுதான் எங்கள் குடும்பமும் - இப்படித்தான் என் பள்ளிப்பருவம் அந்த மக்களுடன் கழிந்தது. அந்த நாட்களில்... எதுவும் புரியாத வயது; எதையும் பின்பற்றத் துடிக்கும் இயல்பு; எல்லாவற்றையும் வியந்து பார்க்கும் மனது; இவற்றுடன் நான் என் வயதையொத்த நண்பர்களுடன் அந்தப் பகுதியில் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தேன்.

கோவில் கும்பாபிஷேகம் முதல் பகுத்தறிவுக் கூட்டம் வரை எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் அங்கே போய் நிற்பேன். எல்லாவற்றையும் கூர்ந்து கவனிப்பேன். இது சரி, இது தப்பு என்று எனக்குள் மதிப்பிடுவேன்.

அப்போதுதான் நான் அந்த மனிதரைப் பார்த்தேன். சாதாரண பருத்தி வேட்டி; சட்டை. காலில் செருப்பு கூடப் போடாமல் ஒரு கிராமத்து விவசாயியைப் போன்ற



படிப்பகம்

www.padippakam.com

வல் துறை ஊழியராகப் பணியாற்றிய ரோச்சஸ் மிஷ் என்ற ஜெர்மன்காரர் இவ்வாறு தனது ஜெமானரின் இறுதி நாளை நினைவு கூர்ந்தார். ஹிட்லர் தங்கியிருந்த நிலவறையின் தொலைப்பேசி இணைப்பாளராக (டெலிபோன் ஆபரேட்டராக) அந்த நேரத்தில் பணியில் இருந்தார் மிஷ். ஹிட்லரின் தொலைபேசி எண்: 120050.

'துப்பாக்கித் தோட்டா வெடித்த சத்தம் கேட்ட மறுவினாடியே யார் யாரோ கூட்டமாக இந்த நிலவறைக்கு வந்தார்கள். சிலர் ஹிட்லரின் சவத்தை அங்கிருந்த போர்வைகளில் சுற்றித்தூக்கிப் போனார்கள்.


இட்லரின் மண்டை ஓடு

# இட்லரின் இறுதி நாள்

'நான் கடைசித்தடவையாக அவனைப் பார்த்தபோது அவன் ஒரு சவத்தைப் போல வெளிறிப் போய் இருந்தான். உடைந்து போய், கூன் முதுகுடன் அவன் தள்ளாடித் தள்ளாடி நடந்தான். வெறுமையான பார்வையால் என்னை வெறித்தான். அப்போதிருந்த நிலைமையில் அந்த மனிதன் தற்கொலை செய்து கொண்டுவிடுவான் என்றே நான் யூகித்தேன். அத்தனை பேரும் அந்தத் தோட்டாவின் சத்தத்துக்காகக் காத்திருந்தோம். கடைசியில் அந்தச் சத்தம் கேட்டது. ஒற்றைத் தோட்டா வெடித்த சத்தம் அந்தப் பிராந்தியத்தின் மௌனத்தைக் கலைத்தது. உடனே பரபரப்புடன் ஓடினேன். அந்தச் சின்னஞ்சிறு நிலவறையில் அந்த மனிதன் தன் மேஜையின் மேல் குப்புறத் தலை கவிழ்ந்து கிடந்தான். பக்கத்து சோபாவில் அவனது காதலி கிடந்தாள். அந்த நொடியோடு ஒரு மாபெரும் துயரம் முற்றுப்பெற்றது'.

அந்த நபர்தான் உலகை நடுங்க வைத்த அடால்ஃப் ஹிட்லர். உடனிருந்த பெண்மணி அவனது காதலியான ஈவாப்ரான்.

ஹிட்லரின் அலுவலகத்தில் தக

••

இட்லரின் மண்டையோடு நாஜிகளின் வீழ்ச்சியை அறிவுறுத்தும் வரலாற்றுச் சின்னமாக இருக்கும் அதே நேரத்தில், புதிய நாஜிகள் என்ற அபாயத்தை அறிவிக்கும் அபாய அறிவிப்பாகவும் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

••

வெளியே ஒரு குண்டுவீச்சில் பள்ளமாகியிருந்த ஒரு இடத்தில் போட்டார்கள். அதன் மேல் பெட்ரோலை ஊற்றி எரித்தார்கள்.

சில வினாடிகளுக்குள் நடந்து முடிந்துவிட்ட இந்த நிகழ்ச்சியால் திகைத்துப் போய் நின்றிருந்தார் மிஷ்.

ஹிட்லர் தனது இறுதி நாட்களில் தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் மனம் உடைந்து கேட்டிருக்கிறான்:

'நான் தவறு செய்து விட்டேனா?'

'சே, சே அப்படியெல்லாம் இல்லை. நீங்கள் செய்தது எல்லாமே சரிதான்'.

'அப்படியானால் மக்கள் ஏன் என்னை விட்டு ஓடுகிறார்கள்? என் அருகில் ஏன் யாரும் வர மாட்டேன் என்கிறார்கள்?'

'யுத்தம் நடக்கிறதல்லவா? யுத்தக் களத்துக்குப் போகாமல் மக்கள் உங்களைச் சுற்றி எப்படி நின்று கொண்டிருக்க முடியும்?'

'அப்படியா சொல்கிறீர்கள்?' நம்ப முடியாமல் கேட்டான் ஹிட்



படிப்பகம்

www.padippakam.com

லர் அப்போது அவன் கண்களில் ஈரம்.

இட்லர் மற்றும் ஈவாபிரானின் உடல்கள் அகற்றப்பட்ட உடனேயே, இட்லரின் வலது கையும், பிரச்சார மந்திரியுமான கோயபல்ஸின் மனைவி தன் ஆறு குழந்தைகளுடன் ஓடிவந்தாள்.

'நானும் என் குழந்தைகளும் தற்கொலை செய்து கொள்ளப் போகிறோம்' என்று அறிவித்தாள்.

அவர்கள் தற்கொலை செய்து கொள்வதற்குத் தயார் நிலையில் வந்திருந்தார்கள்.

திருமதி கோயபல்ஸ், தன் குழந்தைகளைக் குளிப்பாட்டி, அழகாகத் தலைசீவி, துவைத்த வெள்ளை இரவு உடைகளை அணிவித்து அழைத்து வந்திருந்தாள்.

பணியாளர்கள் கோயபல்ஸின் மனைவி மாக்தாவின் காலில் விழுந்து கதறினார்கள். 'நீங்கள் இறந்து போனால் கூடப் பரவாயில்லை. இந்தக் குழந்தைகள் என்ன பாவம் செய்தன. அவர்களை விட்டு விடுங்கள்'.



இட்லரின் காதலி ஈவாபிரான்

ஆனால் அவள் கேட்கவில்லை. ஆறு குழந்தைகளையும் விஷம் கொடுத்துக் கொன்றாள். பின்பு மிஷ்ஷின் டேபிள் எதிரில் வந்து உட்கார்ந்தாள். இதயம் வெடிக்கக் கதறி அழுதாள்.

அப்போது மிஷ்ஷீக்குப் பயம் வந்தது. இங்கே இருக்கும் ஒவ்வொரு வினாடியும் தன் உயிருக்கு ஆபத்து என்று அவருக்குத் தோன்றியது. உடனே அந்த இடத்தை விட்டு நழுவ முயன்றார். அப்போது அங்கு வந்த கோயபல்ஸிடம்.

'ஐயா நான் போகலாமா?' என்று உத்தரவு கேட்டார்.

'ஏன்?'

'தோழர்களோடு சேர்ந்து கொண்டுபோரிடத் தான்.'

'ஆனால் இன்னும் சில தொலைப்பேசி செய்திகள் அனுப்ப வேண்டி இருக்கிறதே?' என்றான் கோயபல்ஸ்.

பின்பு விரக்தியுடன்.

'எப்படி வாழ வேண்டும் என்பதை அறிந்த மாதிரியே, எப்படிச் சாக வேண்டும் என்பதையும் நாங்கள் அறிவோம்' என்று சொல்லி விட்டு, கோயபல்ஸும் அவன் மனைவியும் தற்கொலை செய்து கொண்டனர்.



மிஷ் அந்த நிலவறையிலிருந்து தப்பி ஓடினார். ஆனால் வெளியே சுற்றி வளைத்திருந்த ரஷ்யப்படைகளிடம் சிக்கிக் கொண்டார். அவர்களிடம் நடந்ததைக் கூறியபோது அவர்கள் நம்பவில்லை. 'இட்லராவது தற்கொலை செய்து கொள்வதாவது?' என்று சந்தேகித்தனர். 'நீ பொய் சொல்கிறாய்' என்று சொல்லி மிஷ்ஷைக் கடிந்து கொண்டனர்.

பின்னர் இது உறுதி செய்யப்பட்டது.

கிழக்கு ஜெர்மானிய அரசு புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக ஒரு இடத்தைத் தோண்டினார்கள். அப்போது பூமிக்கடியில் ஒரு நிலவறை இருப்பதைக் கண்டார்கள். அதுதான் இட்லரின் 1945ஆம் ஆண்டின் கடைசிக் கால இருப்பிடம் என்பதைக் கண்டறிந்தார்கள். இதை அழித்துவிடலாமா அல்லது புதுப்பித்து ஒரு கண்காட்சியாக வைக்கலாமா என்று விவாதித்தார்கள்.

என்னதான் அயோக்கியனாக இருந்தாலும், மனிதகுல விரோதியாக இருந்த போதிலும் இட்லரும் ஒரு மோசமான முன்னுதாரணம் என்ற முறையில் நினைவு கூரப்பட வேண்டியவன்தானே! எப்படி ஒருவன் இருக்கக் கூடாது என்பதற்காகவாவது அவனை நாம் நினைவு கூர வேண்டும். எனவே, அவன் தொடர்பாகக் கிடைத்திருக்கும் பொருட்களை வைத்து ஒரு கண்காட்சி நடத்துவது சரியானதே என்று முடிவு செய்தார்கள்.

அதன் விளைவாக மாஸ்கோவில் ஹிட்லர் இறந்த ஐம்பத்தைந்தாவது ஆண்டில் ஒரு கண்



படிப்பகம்

www.padippakam.com

காட்சி நடத்தப்பட்டது. அப்போது முதன்முறையாக இட்லரின் குண்டு துளைக்கப்பட்ட மண்டையோடு காட்சிக்கு வைக்கப்பட்டது.

இட்லரின் மண்டையோட்டை காட்சிக்கு வைத்ததினாலேயே நாஜிஸம் அழிந்து போய்விட்டது என்று அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாது.

ஜெர்மனியில் ராக்கன்ஹாஸன் மற்றும் டைல்கிர்ஷன் ஊர்களிலிருந்த இரண்டு யூதக் கல்லறைகள் தோண்டப்பட்டு அதிலிருந்த சவப்பெட்டிகள் எடுக்கப்பட்டு வெளியே போடப்பட்டன. இதைச் செய்தவர்கள் தங்கள் முத்திரையாக நாஜி அடையாளமான ஸ்வஸ்திக் சின்னத்தை விட்டுச் சென்றிருந்தார்கள்.

பாம்பர்க்கில் ஒரு யூதக் குடும்பத்துக்குச் சொந்தமான வீட்டில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்ததைப் போலீசார் குண்டு வெடிக்கும் முன்பே கண்டு பிடித்து அகற்றினார்கள்.

டஸல்டார்ஃப் ரயில்வே நிலையத்தில் ஒரு குண்டு வீசப்பட்டு ஏழு யூதர்கள் பலியானார்கள்.

'நியோ - நாஜிஸம் என்ற பெயரில் புதிய நாஜிகள் உருவாகி வருவதை இது காட்டுகிறது. சிறுபான்மையினரான யூதர்கள் மேல் சமீபகாலங்களில் வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. இது வருந்தத்தக்கது' என்கிறார் ஜெர்மானிய யூதர் அமைப்பின் தலைவரான பால் ஸ்பீகல்.

மொட்டையடித்துக் கொண்டு ஏராளமான ஜெர்மன் இளைஞர்கள் தேசிய ஜனநாயகக் கட்சியில் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள் புதிய நாஜிகள்.

டஸல்டார்பில் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட யூதர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் போன அப்பாவி மக்களை இந்த நாஜிக் குண்டர்கள் தாக்கியிருக்கிறார்கள்.

ஜெர்மனியின் பதினாறு மாநில கவர்னர்களையும், சமீபத்தில் கூட்டி, இந்த நாஜிக் கட்சிக்குத் தடை விதிப்பது பற்றி அவசரக் கூட்டம் போட்டு ஆலோசனை நடத்தியிருக்கிறார் ஜெர்மனியின் ஜனாதிபதி. இதிலிருந்தே இந்தப் புதிய நாஜிகளின் வளர்ச்சியின் தீவிரம் புரியும்.

எனவே, இட்லரின் மண்டையோடு நாஜிகளின் வீழ்ச்சியை அறிவுறுத்தும் வரலாற்றுச் சின்னமாக இருக்கும் அதே நேரத்தில், புதிய நாஜிகள் என்ற அபாயத்தை அறிவிக்கும் அபாய அறிவிப்பாகவும் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

எம்.ஜி.எஸ்.



'நந்தன்' பகுத்தறிவு மலரைப் படித்தோரெல்லாம் பாராட்டினார்கள்.

அந்தப் பாராட்டுதலின் ஊக்கத்தில் பொங்கல் நாளில் புரட்சிமலர் வருகிறது.

தமிழ் நாட்டின் ஏடுகள் எல்லாமே தீபாவளி மலர் வெளியிடுவதில் ஆர்வம் காட்டுகின்றன. தமிழர்களின் தேசியவிழாவான பொங்கலுக்கு மலர் வெளியிடுவதை மறந்தே போய்விட்டன. மறுபடியும் ஓர் தேசிய எழுச்சி ஏற்படுத்த நந்தன் கொண்டுள்ள பேரார்வம் இது.

இந்த 'புரட்சிமலர்', -பெண் விடுதலை முதல் சோஷலிசப் புரட்சி வரை உலகெங்கும் நடந்த புரட்சிகளின் படப்பிடிப்பு. விலங்கை முறித்தவர்களின் அடிச்சுவட்டில் புதிய உலகுக்கான அணிவகுப்பு.

இதுஒரு -கருத்துப் பெட்டகம்
.கலைக் களஞ்சியம்

தமிழில் இப்படி ஓர் ஏடு இல்லை என்று சொல்லும் விதத்தில் தன்னை உயர்த்திக் கொள்ள விரும்பும் நந்தன் வணிகநோக்கில் நடத்தப்படும் பத்திரிகை அல்ல என்பதை வாசகர்கள் அறிவார்கள்.

காகித விலையும் பதிப்புச் செலவும் இழுத்துப் பிடிக்கமுடியாத வேகத்தில் ஏறிக் கொண்டே போவதால், நந்தன் வாசகர்களிடமே பரிகாரம் கேட்டோம்.

நந்தனுக்காக என்ன விலையும் தருவோம்; தயங்க வேண்டாம்; என்றீர்கள்.

உங்கள் மீதுள்ள நம்பிக்கை காரணமாய், பொங்கல் மலரிலிருந்து நந்தன் விலை பத்து ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

சரிதானே?

# நந்தன் புரட்சி மலர்

நா. அருணாசலம்
*ஆசிரியர், உரிமையாளர்*



படிப்பகம்

www.padippakam.com



## பாவலர் பல்லவன்

அது மலைசார்ந்த நிலப்பகுதி குறிஞ்சி மலர்கள் குறுநகை புரியும் குன்றுகள் நிறைந்த பூமி. அங்கே, குயில் கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த மயிலாடிக் குதூகலிக்கும். கொஞ்சும் கிளிகள் தமிழ் பேசிச் சிறகடிக்கும் நிலத்தில் பதித்த நிலைக்கண்ணாடிபோல் நீர்நிலைகள். அதில் நீர் அருந்தும் சாக்கில் தமது நிகரிலா அழகைப் பார்த்துக் கொள்ளும் புள்ளி மான்கள். பூக்களை முத்தமிட்டுப், புதுத்தேனைப் பருகிவிட்டு, ஈக்கள் இசைபாடும் எழிலார்ந்த சோலை அது. கொடியிடையைத் தழுவிக் கொள்ளை இன்பம் காணும் குளிர்தென்றல் விளையாடும் அம்மலர்ச் சோலையில், குயில் நுழைய முடியும், கதிரவனின் வெயில் நுழைய முடியாது. அந்த மரகதச் சோலைக்கு, தலைவி தோழியுடன் வந்தாள் இருவரும் ஒரு மரநிழலில் அமர்ந்தனர். தோழியிடம் தனது இதயத்தைத் திறந்து காட்டும் இனிய இடமாக அந்தப் பழமுதிர்ச் சோலையைத் தலைவி தெரிவு செய்து வைத்திருந்தாள்.



தேர்போல் நின்றிருக்கும் அப்பூமரத்தின் கிளைகளின் மீது, அணில் இணைகள் காதல் விளையாட்டில் ஈடுபட்டன. மலர் குலுங்கும் மரக்கிளைகள், அணில்களின் ஆட்டத்தால் பூக்களை மடியமர்ந்த மங்கையர் மீது தூவி மகிழ்ந்தன.

கொட்டிய கோட்டுப் பூக்கள், கோதையர்க்குக் குதூகலமூட்டின.

நேற்று நடந்த நிகழ்ச்சியை நெஞ்சம் நிறைய சுமந்து வந்த தலைவி, தோழியிடம் நேர் முக வண்ணனைபோல் சொல்லத் தொடங்கினாள்:



உச்சிப் பொழுது; கொளுத்தும் கோடை. ஊரில் மக்கள் நடமாட்டமே இல்லை. எங்கள் வீட்டுத் தெருவாசலில் ஓர் ஆண்மகன் ஒதுங்கிக் குரலெடுத்து,

"தாகமாக இருக்கிறது; தண்ணீர் கொடுங்கள்" என்கிறான்.

அடுக்களைவரை அந்தக் குரல் எதிரொலித்தது.

அம்மா என்னிடம்,

"தெருவாசலில் யாரோ தண்ணீர் கேட்கிறார்கள்."

"சுடரிழாய்! பொற்கலத்தில் நீர் எடுத்துப் போய்க் கொடுத்துவா." என்றாள்.

உண்ணும் நீர் எடுத்து வந்த எனக்கோ ஒரே வியப்பு!

மின்னும் வளையணிந்த என் தோழியே! மேலும் கேளடி.

நாம் சிறுமியராக இருந்தபோது மணல்வீடு கட்டி விளையாடினோம் அல்லவா? அம்மணல் வீட்டைத் தனது காலால் எற்றி உதைத்துச் சிதைத்து ஓடினானே ஒருவன்,

# நடந்தது நாடகம்



படிப்பகம்

நமது நள்ளிருங் கூந்தலில் சூடி இருந்த பூச்சரங்களைத் தட்டிப் பறித்துப் பிய்த்து எறிந்து நம்மைத் தவித்து அழவைத்துப் போனானே ஒருவன்,

நாம் பந்தாடி மகிழ்ந்த போது வந்தோடி அப்பந்தினை எடுத்தோடி நமக்கு எரிச்சல் ஊட்டிச் சென்றானே ஒருவன்,



அவன்தான்! அவனேதான்! நேற்று எங்கள் தெரு வாசலில் வந்து நின்றிருந்தான். நீர் வேட்கை என்று அதிரக் குரல் கொடுத்தவனும் அவனேதான்.

நான் வாயிலை அடைந்ததும், அந்தக் கள்வன் என்ன செய்தான் தெரியுமா?

என் வளைக்கை ப்பற்றி வம்பு செய்யத் தொடங்கினான்.

நெருப்பினைத் தொட்டற்போல் நெஞ்சம் நடுங்கினேன்.

உடனே, என்ன செய்வது என்பதை அறியாமல், நான்

"அன்னாய்! இவன் செய்யும் அடாத செயலை வந்து பாரம்மா!"

என்று பதறிக் கதறினேன்.

அலறி அடித்துக் கொண்டு அன்னையும் ஓடோடி வந்தாள்.

அவனோ, அஞ்சி நடுங்கிடக் கண்டேன். எனக்கோ, அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

"என்னடி பெண்ணே! இப்படியா என்னைக் காட்டிக் கொடுப்பது?

என்பது போல், பாவப் பட்டவனைப் போல என்னை ஏறிட்டுப் பார்த்தான்.

அன்னையும் அருகே வந்து விட்டாள்.

நடந்ததை மறைத்து, இவனை எப்படியும் காப்பாற்றியே தீர்வது என்று மின்னல் வேகத்தில் நான் முடிவெடுத்தேன்.

"அம்மா! நீர் பருகும்போது இவனுக்குப் புரை ஏறிவிட்டது; மூச்சுத் திணறினான்; எனக்குப் பயமாகி விட்டது. அதனால்தான் கத்தி விட்டேன். என்றேன் நான்.

உண்மை தெரியாத அன்னையோ, அவனது முதுகிலும் தலையிலும் நீவி, அன்புமிகத் தடவிக் கொடுத்தபடி இருந்தாள்.

என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை; சிரிக்காமல் இருக்கவும் முடியவில்லை.

அந்தக் குறும்புக்காரனின் நாடகத்தை விரும்பிப் பார்த்தபடியே நின்றிருந்தேன்.

அந்தக் கள்வன் மகன், ஒன்றுமே நடக்காததுபோல் நன்றாகவே நடித்துக் கொண்டிருந்தான்.

தனது கள்ளப் பார்வையால் என்னிடம் ஏராளமாகப் பேசி முடித்தான்.

என்னைக் கொல்வது போல் கண்காட்டி, கை காட்டி ஒரு குறுநகை சிந்தி அன்னையிடம் விடை பெற்றானடி. அந்த ஓரங்க நாடகத்தை உள்வாங்கிய தோழி, குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள். அவர்கள் குந்தியிருந்த குடைமரமும் பூச்சிரிப்பைச் சிந்தியது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, ஒரு சிறு கதை போக்கில் வடிவமைத்து, 'குறிஞ்சிக் கலி'யில் கபிலர் பெருமான் பாடியிருக்கிறார். இதோ இக் கலித்தொகைக் காட்சியைக் கவிதையில் காணுங்கள்.

சுடர்த்தொடீஇ! கேளாய், தெருவில் நாம் ஆடும்
மணல் சிற்றில் காலில் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி நோதக்கச்
செய்யும் சிறுபட்டி, மேலோர் நாள்
அன்னையும் யானும் இருந்தோமா, இல்லீரே! உண்ணும்
நீர் வேட்டேன் என.வந்தாற்கு, அன்னை அடர்பொன்
சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்!
உண்ணு நீர் ஊட்டிவா! என்றாள், என யானும்
தன்னை அறியாது சென்றேன், மற்றென்னை
வளைமுன்கை பற்றி நலிய தெருமந்திட்டு,
அன்னாய்! இவனொருவன் செய்ததுகாண் என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னை யான் உண்ணுநீர்
விக்கினான் என்றேனா, அன்னையும் தன்னைப் புறம்
பழித்து நீவ, மற்றென்னைக் கடைக்கணால் கொல்வான்
போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தான், அக்கள்வன் மகன்.

கலித்தொகை – 51

www.padippakam.com



எம்.ஜி. சுரேஷ்



••

மாட்டை -
குதிரையாக்கி,
நாட்டைத் தமதாக்க
ஆரியர் செய்யும்
அறிவியல்
அயோக்கியத்தனத்தை
அம்பலப்படுத்தும்
கட்டுரை...

••



# ஒரு நாகரிகமும் இரண்டு அநாகரிகங்களும்

ராஜாராம் என்பவரும், நட்வர் ஜா என்பவரும் தனித்தனியே யோசித்தார்கள். பின்பு சேர்ந்து யோசித்தார்கள். ஒரு நாகரிகத்தைப் பற்றி இந்த இரண்டு அநாகரிகங்களும் சேர்ந்து யோசித்ததன் விளைவாக ஒரு விபரீதமான 'கண்டுபிடிப்பு' வெளிச்சத்துக்கு வந்தது.

சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என்றுதான் காலங்காலமாக அறியப்பட்டு வந்திருக்கிறது. நிறுவப்பட்டும் வந்திருக்கிறது. அதை நிராகரித்துவிட்டு அது ஆரியர் நாகரிகம் என்று நிறுவ வேண்டும். சிந்து சமவெளி மனிதர்களான மொஹஞ்சதாரோ, ஹரப்பா குடிமக்கள் தேசிய மொழி சமஸ்கிருதம் தான் என்று நிறுவ வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

அது எப்படி சாத்தியம்?

சாத்தியம்தான்.

இரண்டு பயங்கர மூளைகள் சேர்ந்து ஒரு கிரிமினல் திட்டத்தைத் தயாரித்தால் எதுதான் சாத்தியம் இல்லை?

சிந்து சமவெளி நாகரிகத்தை திராவிடர் நாகரிகம் என்று நிறுவுவதில் பெரும் பங்கு வகிப்பவை மொஹஞ்சதாரோ - ஹரப்பா பகுதிகளில் அகழ்ந்து எடுக்கப்பட்ட முத்திரைகள். நூற்றுக்கணக்கான இந்த முத்திரைகளில் எருதுகள், மனிதர்கள், சித்திர எழுத்துக்கள் போன்றவை பொறிக்கப்பட்டுள்ளன.



இந்த இரண்டு நபர்களும் முதலில் அந்த முத்திரைகளில் உள்ள எருதின் மேல் கைவைத்தார்கள்.

'சில முத்திரைகளில் குதிரைகளும் பொறிக்கப்பட்டிருந்தன...' என்பது அவர்கள் முன் வைக்கும் வாதம்.

அதாவது சிந்து சமவெளிகளில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் - சிலவற்றில் குதிரைகளின் படமும் பொறிக்கப்பட்டுள்ளதாம். இதனால் நிறுவப்படும் உண்மை என்னவென்றால், 'சிந்து சமவெளி மனிதர்கள் குதிரையைப் பார்த்திருக்கிறார்கள்; பயன்படுத்தி இருக்கிறார்கள்; குதிரை ஆரியர்களால் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட மிருகம். எனவே சிந்து சமவெளி நாகரிகம் ஆரிய நாகரிகம்' என்பது இவர்கள் வாதம்.

இதிலிருக்கும் பெரிய முரண்பாடு என்னவென்றால், குதிரை 2000 வருடங்களுக்கு முன்புதான் இந்தியாவுக்கு வந்தது. குதிரை என்பது ஸ்தெப்பி புல்வெளி மிருகம். மத்தியக் கிழக்காசியாவிலிருந்து ஆரியர்கள் கைபர் போலன் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தபோது வந்த மிருகம். ஆனால் சிந்து சமவெளி நாகரிகம். 4000 வருடங்களுக்கும் முற்பட்டது. அப்படி இருக்கும் போது 2000 வருடத்திற்கு முன்பு அறியப்பட்ட ஒரு மிருகம் 4000 வருடங்களுக்கு முற்பட்ட பதிவாக இருப்பது எப்படி சாத்தியம்? இது ஒரு சரித்திரப் புரட்டல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்?

உண்மையில் நடந்தது என்னவென்றால் நூற்றுக்கணக்கான எருது முத்திரைகளில், உடைந்து போன ஒன்றிரண்டு முத்திரைகளை சேகரித்து ஒட்டவைத்து, அவற்றை கணினி வரைவுகளின் மூலம் (Computer Graphics) குதிரையாக மாற்றி, அச்சாக்கம் (Printout) செய்திருக்கிறார்கள்.



அடுத்த இலக்கு, முத்திரைகளில் காணப்படும் வரிவடிங்கள் சமஸ்கிருதமே என்ற குண்டைத் தூக்கிப் போட்டார்கள்.

●●

குதிரை என்பது ஸ்தெப்பி புல்வெளி மிருகம். மத்தியக் கிழக்காசியாவிலிருந்து ஆரியர்கள் கைபர் போலன் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தபோது வந்த மிருகம். ஆனால் சிந்து சமவெளி நாகரிகம். 4000 வருடங்களுக்கும் முற்பட்டது. அப்படி இருக்கும் போது 2000 வருடத்திற்கு முன்பு அறியப்பட்ட ஒரு மிருகம் 4000 வருடங்களுக்கு முற்பட்ட பதிவாக இருப்பது எப்படி சாத்தியம்? இது ஒரு சரித்திரப் புரட்டல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்?

●●

உண்மையில் சிந்து சமவெளி நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் சித்திர எழுத்துக்கள் ஆகும். தொன்மையான காலங்களில் - அது இந்தியாவாக இருந்தாலும் சரி, சீனாவாக இருந்தாலும் சரி, எகிப்தாக இருந்தாலும் சரி - சரித்திரகாலத்துக்கு முற்பட்ட மனிதர்கள் சித்திர எழுத்துக்களில்தான் எழுதி வந்தனர்.

அப்போதெல்லாம் உயிர் எழுத்து, மெய் எழுத்து, இலக்கணம் போன்ற வரையறைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. 'சமஸ்கிருதம்' என்றாலே 'ஆக்கப் பட்ட மொழி' என்று பொருள். அதன் வயது 2000 வருடங்கள்தான். 2000 வருடங்களாக மட்டுமே இருக்கும் ஒரு மொழி அதிலும் முன்பிருந்த ஜெர்மானிய, கிரேக்க, ஈரானிய, முண்டா



படிப்பகம்

மொழிகளால் உருவாக்கப் பட்ட ஒரு மொழி எப்படி 4000 வருஷங்களுக்கு முன்பிருந்த மக்களால் பயன்படுத்தப்பட்டிருக்கும்?

சரி, சிந்து சமவெளி முத்திரைகளில் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களை 'சமஸ்கிருத எழுத்துக்கள்' என்று எப்படிச் சொல்கிறார்களாம்?

அந்த முத்திரைகளில் இருப்பவை எல்லாம் மெய்யெழுத்துக்கள் (Consonants) மட்டுமாம். உயிர் எழுத்துக்கள் (Vowels) அப்போது கண்டு பிடிக்கப்படவில்லையாம். இருந்தாலும் இல்லாத உயிர் எழுத்துக்களை (Vowels) நாம் மானசீகமாகக் கற்பனை செய்து கொண்டு படிக்க வேண்டுமாம்.

உதாரணமாக; ம், ன் என்று இரண்டு மெய்யெழுத்துக்கள் ஒரு முத்திரையில் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவற்றை ம்+அ=ம, ன்+அ = ன அதாவது 'மன' என்று படிக்க வேண்டும். 'மன' என்றால் 'மனம்' என்று பொருள் கொள்ள வேண்டும் என்கிறார்கள்.


அதன்படி குதிரையாக மாறிய எருதின் மேலே எழுதப்பட்ட சித்திர எழுத்தை 'அஸ்வ' என்று படிக்கலாமாம். அஸ்வம் என்றால் சமஸ்கிருதத்தில் குதிரை.

நல்லது.

அதே சமயம் இந்த ம், ன் என்ற எழுத்துக்களை வைத்து 'மனம்' என்று தான் வார்த்தையை உருவாக்க வேண்டும் என்பதற்கு சட்டம் எதுவும் வகுக்கப் படவில்லை. இந்த இரண்டு எழுத்துக்களை வைத்து மேலும் மேலும் மனம், மானம், மனு, மீன், முனி, மௌனம் என்று நம் விருப்பப்படி வார்த்தைகளை உருவாக்கிக் கொண்டே போகலாம். அப்படி உருவாக்கிக் கொண்டே போகும் பட்சத்தில் ஒன்றுக்கொன்று முரண் பாடான சம்பந்தமில்லாத வார்த்தைகள் தான் கிடைக்கும். மனுவுக்கும் மீனுக்கும் என்ன சம்பந்தம். மீனாவும் முனியும் ஒன்றா? என்பது போன்ற கேள்விகள் எழுகின்றன.



– அரப்பா




விபரீத நூல்

எனவே அந்த எழுத்துக்கள் சமஸ்கிருதம் என்று வைக்கும் வாதம் அடிபட்டுப் போகிறது. சித்திர எழுத்துக்கள்தான் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

ஹார்வர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சரித்திரப் பேராசிரியரான மைக்கேல் விட்ஸ், ஐரோப்பிய சரித்திர ஆய்வாளரான ஸ்டீவ் ஃபார்மர் ஆகிய இரட்டையர் சேர்ந்து ராஜாராம் - ஜா இரட்டையரின் இந்தச் சரித்திரப் புரட்டை உரிய நேரத்தில் கண்டு பிடித்து அடித்து நொறுக்கினார்கள்.

●●

அந்த எழுத்துக்கள் சமஸ்கிருதம் என்று வைக்கும் வாதம் அடிபட்டுப் போகிறது. சித்திர எழுத்துக்கள்தான் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

●●

மீண்டும் ஒருமுறை எழுப்பப்பட்ட சரித்திரப் புரட்டு மீண்டும் ஒரு முறை நசுக்கப்பட்டது. இல்லாவிட்டால் கோயபல்ஸ் சொன்ன மாதிரி 'ஒரு பொய் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டால் உண்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு' விடுமே?

அப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால்?

'ஆரியர்கள் வந்தேறிகள் அல்ல. அவர்களை விட நாகரிகத்தில் உன்னதமான நிலையில் இருந்த திராவிடர்களைச் சூழ்ச்சியாலும், நய வஞ்சகத்தாலும் ஓரங்கட்டிய வர்கள் அல்ல; என்று புதிய வரலாறு எழுதலாம். திராவிடர்கள் தான் காட்டு மிராண்டிகள். ஆரியர் நாகரிகத்தின் உச்சாணிக்கொம்பில் ஊஞ்சலாடியவர்கள். என்று உண்மைகளைத் துப்புரவாகத் துடைத்துவிடலாம். இந்தியா ஒரு இந்துத்வ நாடு' சிந்து சமவெளி நாகரிகம் இந்துத்வ நாகரிகம் என்று பிரகடனப் படுத்தலாம். அதன் மூலம் இந்தியாவில் இருக்கும் முஸ்லீம்களையும், கிறிஸ்தவர்களையும் இந்தியர் அல்லாதவர் என்று ஒதுக்கித் தள்ளலாம். இந்துத்வாவை எதிர்க்கும் யாரையும் தீயிட்டுக் கொளுத்தலாம்.

நல்லவேளையாக இந்த அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டு விட்டன. இந்தியத் துணைக்கண்டம் மீண்டும் ஒருமுறை காப்பாற்றப்பட்டு விட்டது.

– எம்.ஜி.சுரேஷ்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

பலவற்றை அண்ணன் செல்லமுத்து ஏ.பி. கோமளா அவர்களுடன் இணைந்தும், தனித்தும் எச்.எம்.வி-கிராமபோன் இசைத்தட்டுகளில் பாடியுள்ளார். அவற்றை பாது காத்து வைக்க முடியாமல் போய் விட்டது.

ராசய்யா கடையில் இருந்து கொண்டு, கவிராயர் சென்னைக்கு வந்து பரிமளா பிக்சர்சில் தங்கி இருக்கும் போதெல்லாம் நான் அவரைக் காணச் செல்வேன். அந்தக் கால கட்டத்திலேதான் வரலாற்றுச் சிறப்புமிக்க திரைப்படத்தில் ஒரு சிறிய வேடத்தில் நடிப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

திராவிடர் கழகத்தைச் சேர்ந்த மானமிகு பாவலர் - பாலசுந்தரம் அவர்கள் தேவி நாடக சபாவிற்காக எழுதப்பட்ட நாடகம் திரைப்படமாக எடுக்க முனைந்த போது அதில் நடிப்பிசைப் புலவர் தான் கதா நாயகனாக நடிக்க இருந்தார். பல காரணங்களால் அம் முயற்சி கை விடப்பட்டது.

அவருக்குப் பதிலாக அறிஞர் அண்ணா வேறொரு இளம்புது நடிகரைப் பரிந்துரை செய்தார். அவரும் பல சோதனைகளைக் கடந்து அந்தப் படத்தின் கதாநாயகனாக நடித்து புகழ் உச்சியில் நின்று விட்டார்.

திரைப்பட உலகிலே பல திருப்பு முனைகளுக்குக் காரணமாயிருந்து, நடிப்புலகிலே ஒரு நடிகர் திலகத்தையும் தந்த அந்த நாடகமும் திரைப்படமும் எது என்கிறீர்களா?

அதுதான் பராசக்தி நாடகம். அந்த நாடகக் கதைக்குத் தான் கலைஞர் கருத்தாழம் மிக்க தமிழ் வசனம் எழுதத் திரைப்படமாக வெளிவந்தது.

கலைஞர் இன்று முதலமைச்சர் ஆனதற்கு எத்தனையோ காரணங்கள் இருந்தாலும், முழு முதற்காரணமாக இருந்தது அவர் கற்றறிந்த தமிழும், திரைப்படங்களுக்கு எழுதியுள்ள உரையாடல்களும் தான்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பராசக்தி திரைப்படத்தில் அகதிகள் முகாமிற்கு வந்து சேரும் அகதிகள் கூட்டத்தில் நானும் ஒரு அகதியாக நடித்திருப்பேன். சிறிய வேடந்தான் என்றாலும் அது எனக்குப் பெருமையாக இருந்தது.

அந்தக் காலக் கட்டத்தில் கலைஞர் கதை வசனம் எழுதிய அம்மையப்பன் திரைப்படத்திற்கு ஒரு பாட்டு எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

இது போன்ற வாய்ப்புகளெல்லாம் தட்டாமல் திறக்கப்பட்ட கதவுபோலவும், கேட்காமல் கிடைத்த கொடை போலவும் அய்யா-நா. அருணாசலம் அவர்கள் எனக்குக் கிடைத்ததுபோல் கிடைத்த வாய்ப்புகளாகும்.



கலைஞர் கதை வசனம் எழுதிய அம்மையப்பன் திரைப்படத்திற்கு ஒரு பாட்டு எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

அம்மையப்பன் திரைப்படக் கதை ஒரு ஆங்கிலக் கதையைத் தழுவி எழுதியதாகும். அதே கதையை சேலம் மார்டன் தியேட்டர்சாரும் 'சுகம் எங்கே?' என்ற தலைப்பில் படமாக எடுத்தார்கள். அம்மையப்பனில் எஸ்.எஸ்.ஆர் கதாநாயகன். சுகம் எங்கேயில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர் கதாநாயகன் திரு. ஏ.கே.வேலன் சுகம் எங்கேயின் கதை வசன கர்த்தா.

இரண்டு படங்களுமே பெரும் தோல்வியைத் தழுவின.

டி.ஆர். பாப்பா அவர்களின் இசையமைப்பில் நகைச் சுவையும் நையாண்டியும் கலந்து ஒரு பாட்டு எழுதியிருந்தேன்...

அதுதான் இது.

விருத்தம்

உருக்குலையா மங்கை எந்தன்
ஒளி குறையாக் கழுத்தினிலே
மருக்கொழுந்து மாலை போட
மாப்பிள்ளையா வந்தவரே.

பாட்டு

பிள்ளையாரே துள்ளி வந்து
உக்காருங்க- புதுப்
பெண்ணுக்கிட்டே கள்ளத்தனம்
கூடாதுங்க.
மாப்பிள்ளையாரே
துள்ளிவந்து உக்காருங்க

இப்படி ஒரு பாடலை அம்மையப்பன் திரைப்படத்திற்காக முதன் முதலில் எழுதியதின் மூலம், நாடக நடிகர்களாக இருந்து, மாபெரும் பாடலாசிரியர்களானப் பெருமைக் குரிய முன்னோடிகளின் பட்டியலில் நானும் ஒருவனானேன்.

திருவாளர்கள் ஆசான் உடுமலை நாராயணக் கவிராயர், லட்சுமண வாத்தியார், சுந்தர வாத்தியார், மாரியப்ப சுவாமிகள், கே.பி.காமாட்சி சுந்தரன் (பராசக்தி திரைப்படத்தில் பூசாரியாக நடித்துள்ள குணச்சித்திர நடிகர்) கே.டி. சந்தானம், கு.சா.கிருஷ்ணமூர்த்தி, அப்பா - பி.எஸ்.வெங்கடாசலம், எம்.கே. ஆத்மநாதன் இன்னும் இவர்களைப் போன்ற பலர் நாடக நடிகராக இருந்து பாடலாசிரியர் ஆனவர்கள்.

என் நினைவிற்கு எட்டிய வரையுள்ள பட்டியல் இவை. இவர்கள் அனைவரும் காலத்தை வென்று நிற்கக் கூடிய பல பாடல்கள் எழுதியுள்ளார்கள்.

அந்த மேதைகளின் அறிவாற்றலுக்கும், திறமைக்கும் நான் ஒவ்வேனோ, ஒப்பேனோ எனக்குத் தெரியாது. ஆனால் நாடக நடிகன் பாடல் ஆசிரியன் ஆனான் என்னும் பட்டியலில் எனக்கும் ஓர் இடம் உண்டு.

(பயணம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

## புதிய நாஜிகள்

# ஓட ஓடத் துரத்துகிறார்கள்



அவர்கள் இருவருக்கும் தூக்கம் பிடிக்கவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள்.

அவன் கண்கள் கலங்கி இருந்தன. அவள் கண்களும்தான். கண்ணீர்த்திரை ஒருவரை ஒருவர் பார்க்க முடியாதபடி மங்கலாக்கிக் காட்டியது. அவள் துக்கத்தை உதட்டைக் கடித்து விழுங்க முயற்சித்தாள்.

பக்கத்தில் கட்டிலில் ஆறுவயது சிறுவன் நோவா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அருகில் ஒரு வயதுக் குழந்தை இலியாஸ். அது ஒரு மோசமான இரவு என்பதை அந்தக் குழந்தைகள் எப்படி அறிவார்கள்?

ஏழு வருடகாலத்தில் இவர்கள் இதுவரை ஒருநாள் கூடப் பிரிந்ததே இல்லை. அதனாலேயோ என்னமோ இனி இவர்கள் என்றென்றைக்குமாகப் பிரியப் போகிறார்கள்.

என்ன ஆயிற்று இவர்களுக்கு?

அவளுக்குத் தாளமுடியவில்லை. இதயம் உடைந்து விம்முகிறாள். அவன் அவள் தோள் மீது கைவைத்து ஆறுதலாகப் புன்னகைக்க முயற்சி செய்து தோற்றுப் போகிறான்.

இது கடைசித் தொடுகை. இது கடைசி இரவு. நாளை முதல் இவன் யாரோ அவள் யாரோ.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு...

வாழ்க்கை உன்னதமாக இருந்தது. டென்னிஸ் மைதானத்தில் பந்தைத் துரத்துவது போக, பாடல்களை ரசித்துக் கேட்பதும் இவன் பழக்கம். அப்படித்தான் அவளது குரல் இவனுக்கு அறிமுகம்.

ஒரு சாயங்கால மழையின் முணுமுணுப்பில் ஒரு விருந்தின் போது குரலுக்குரியவளை அவன் சந்தித்தான். எத்தனை அற்புதமான நாள் அது தெரியுமா? என்று பிறிதோர் நாள் அவளிடம் சொன்னான். உங்களுக்கு மட்டுமல்ல; எனக்கும் கூட அது அற்புதமான நாள்தான் என்றாள் அவள். அதைத் தொடர்ந்து வந்த தினங்களில் இவன் அவள் வசமானான். அவளும் இவன் வசமானாள்.

இவனோ ஒரு டென்னிஸ் நட்சத்திரம். அவளோ ஒரு பிரபல பாடகி. இவர்கள் இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டபோது உலகம் வியந்தது. ஏனெனில், இவன் வெள்ளை இனத்தவன். அவளோ ஒரு கறுப்பினப் பெண். இனவெறிக்குச் சாவுமணி அடிக்கப்பட்டு விட்டதாக பத்திரிகைகள் எழுதின.

ஏழு வருடங்கள் அற்புதமாகக் கழிந்தன. இவர்கள் இருவரும் உலகின் கண்முன் உதாரணத் தம்பதிகளாக அடையாளப் படுத்தப்பட்டார்கள்.

ஒரு இனிமையான நேரத்தில் அந்தத் தொலைப் பேசிச் செய்தி வந்தது.

'நான் இட்லரின் வாரிசு பேசுகிறேன். நீ இட்லரைப் பற்றியும் அவரது தலைமையில் இயங்கிய நாஜிப்படைகள் பற்றியும் கேள்விப் பட்டிருப்பாயே. நாங்கள் முடிவு எடுத்துவிட்டால் முடிக்காமல் விடமாட்டோம்'.

'சரி, என்னிடம் ஏன் இதையெல்லாம் சொல்கிறீர்கள்?'

'உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது? நீ ஆரியன். உன் உடம்பில் ஓடுவது ஆரியரத்தம்.



படிப்பகம்

நீ ஆங்கிலேயனைப் போன்ற தாழ்ந்த பிறவியோ அல்லது அமெரிக்கனைப் போன்ற அனாசாரப் பிறவியோ அல்ல. நீ எப்போது அந்தக் கறுப்பியை மணந்து கொண்டாயோ அப்போதே ஆரியப் புனிதம் கெட்டுப் போய் விட்டது. நீ உயிர் வாழும் தகுதியை இழந்து விட்டாய். உயிர் பிழைக்க வேண்டுமானால் ஜெர்மனியை விட்டே ஓடு'.



ஜெர்மானியப் பார்ப்பனர்கள்

முதலில் இதை இவன் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து தொந்தரவுகள் வந்தன. நியோ நாஜிகள் பலரைக் கொல்வது இவன் கவனத்துக்கு வந்தது. இவன் ஆடிப் போனான்.

அதன் பிறகு இவனுக்கும் நாள் குறிக்கப் பட்டது. வேறுவழியில்லாமல் அவனும் அவளும் அமெரிக்காவுக்குப் போனார்கள். இந்தக் குரல் அவர்களை விடவில்லை. பிரான்சுக்குப் போனார்கள். அங்கும் துரத்தியது. உலக அகதிகளின் கடைசிப் புகலிடமான லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கும் அவர்கள் அச்சுறுத்தப் பட்டார்கள். அவர்கள் உலகின் எந்த மூலைக்குப் போனாலும், அங்கெல்லாம் நாஜிகளின் துப்பாக்கி முனை அவர்களைக் குறிபார்த்தது.

உடலாலும் உள்ளத்தாலும் களைத்துப் போன அவன் யோசித்துப் பார்த்தான்.

தன் உயிர் போனால் கூடப் பரவாயில்லை. தனது பிரியத்துக்குரிய காதலியின் உயிருக்கு எந்த ஆபத்தும் வந்து விடக்கூடாதே என்று பதறினான். தன் மனைவி மற்றும் குழந்தைகளின் உயிருக்குப் பாதுகாப்பு வேண்டுமென்றால் அவர்களை விட்டுப் பிரிவதுதான் ஒரே வழி என்று முடிவு செய்தான்.




இந்தக் காதல் தம்பதியினரை முதலில் ஜெர்மனியை விட்டுத்தான் வெளியேறும்படி அவர்கள் சொன்னார்கள். பின்புதான் அவர்களுக்கு ஒரு விஷயம் புரிந்தது. பிரபலமான தம்பதிகளான இவர்களைப் பின்பற்றி இன்னும் பல 'ஆரிய இளைஞர்கள்' இது மாதிரி 'இழிவான பிரஜை' களை மணந்து கொண்டால் என்ன செய்வது? இவர்களைத் தண்டித்தால்தான் மற்றவர்களுக்கும் பாடம் புகட்டிய மாதிரி இருக்கும். அதனால் தான் இவர்களைப் பாடாய்ப்படுத்தினார்கள்.

இரவு மோசமாகக் கழிந்தது விடியல் சோகமாக

●●

*"பார்ப்பனர்களை அனுமதிக்காதே" நாகரிக மக்கள் போர்க்கொடி*

●●


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

விடிந்தது.

ஜெர்மனியிலிருந்து, லண்டனுக்குப் போய்த் தஞ்சம் புகுந்தும் நிம்மதியில்லாமல், சதா துப்பாக்கி தாங்கிய காவலர்கள் பத்துப் பேருடன் ஒவ்வொரு நொடியும் பயந்து பயந்து வாழ்ந்தது போதும் என்று முடிவெடுத்த அந்தப் புகழ்பெற்ற தம்பதியினரான போரிஸ் பெக்கரும், பார்பராவும் டெய்லி டெலிகிராப் பத்திரிகையாளர்களை அழைத்து தங்களின் அறிக்கையை வாசித்தார்கள்.

'இனம், மதம், நிறம் போன்ற பேதங்களைக் கடந்து மனிதன் மனிதனாக வாழும் இடம்தான் சொர்க்கம். அந்தச் சொர்க்கம் இந்தப் பூமியில் இல்லை. நியோ நாஜிகளால் எங்கள் வாழ்க்கை நாசமாகிவிட்டது; இதனால் நாங்கள் பிரிகிறோம்.

அறிக்கையைப் படித்து முடித்த பெக்கர் கண்களில் ஈரம். பார்பராவோ கதறியே விட்டாள்.

1945லேயே இட்லர் இறந்துவிட்டானே. அப்படியானால் இவர்கள் யார்?

# பொட்டு வைத்தவளை விடாதே!

ஜெர்மனியில் இப்போது நியோ நாஜிகள் என்ற பெயரில் இளைஞர்கள் அணிவகுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்களது அசுர வளர்ச்சியைக் கண்டு ஜெர்மன் அரசே ஆடிப் போயிருக்கிறது. இவர்களை எப்படிக் கட்டுப் படுத்துவது என்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறது.

ஜெர்மானியர் அல்லாத மற்ற எந்த இனத்தவரையும் இவர்கள் எதிரிகளாகத்தான் பார்க்கிறார்கள். இவர்களது முதல் குறி: யூதர்கள் அடுத்தகுறி; தமிழர்கள். பொட்டு வைத்திருப்பதால் தமிழர்களை இவர்கள் 'டாட்' (Dots) என்று அழைக்கிறார்கள். Dot என்பதற்கு பொட்டு என்று மாத்திரம் பொருள் கொள்ளக்கூடாது. அதற்கு களங்கம், கறை, அசுத்தம் என்றெல்லாம் அவர்கள் பொருள் கொள்கிறார்கள். யூதர்களையும் தமிழர்களையும் கொல்வதன் மூலம் தங்கள் இலட்சிய ஈடேறுதலை இவர்கள் அடைகிறார்களாம்.

இறந்து போனது இட்லர் மட்டும் தானே. அவனது கருத்தியல் இன்னமும் சாகாமல் பேயாய் உலவிக் கொண்டிருக்கிறது. இட்லர் காலத்து நாஜிகளில் தப்பித்தவர்கள் தங்கள் விதைகளை விதைத்து விட்டல்லவா மண்டையைப் போட்டார்கள். அது இப்போது நியோ நாஜிசம் என்ற பெயரில் ஜெர்மனியில் அலைந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் அதன் பெயர். 'இந்துத்வா'.

– சுரேந்திரன்




கேரளாவில் மம்முட்டி, மோகன்லால் போன்றவர்கள் நம் கமல், ரஜினி போல 'சூப்பர் ஸ்டார்'கள். இவர்கள் நம் ஊர் நாயகர்களைப் போல் ஒரு படத்துக்கு இத்தனை கோடி எண்ணி வைத்தால்தான் 'கால்ஷீட்' கொடுப்பேன் என்று அடம் பிடிப்பதில்லை. படத்துக்கு இவ்வளவு சம்பளம் என்று இல்லை; படத்தின் தயாரிப்புச் செலவுக் கேற்பதான் சம்பளம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். உதாரணமாக, ஐம்பது லட்சரூபாயில் ஒரு படம் எடுக்கப் போகிறோம் என்றால் அதற்குக் கதாநாயகன் தன் சம்பளமாக இரண்டு மூன்று லட்சம் கொடுத்தால் வாங்கிக் கொள்வார். அதே போல் ஒரு கோடி ஒன்றரைக் கோடி செலவில் தயாரிக்கப்படும் படம் என்றால் அதற்கேற்ப ஐந்து அல்லது ஆறு லட்சம் என்று வாங்கிக கொள்ளுவார். இதனால் அவர்களால் பெரிய பட்ஜெட் படத்திலும் நடிக்க முடிகிறது. சின்ன பட்ஜெட் படத்திலும் நடிக்க முடிகிறது. வித்தியாசமான கலைப்படங்களில் நடித்து ஜனாதிபதி பரிசும், சர்வதேச அரங்கில் அமெரிக்க ஐரோப்பிய நடிகர்களுக்குச் சமமான புகழையும் பெற முடிகிறது. கேரள சினிமாவும் ஆரோக்கியமாக இருக்கிறது.



படிப்பகம்

## வெண்மணி தியாகிகள் நினைவாக




வரலாற்றின் விபரீதம்

# ஜார் மன்னனுக்கு லெனின் வேடம்

நிலப்பிரபுத்துவத்தின் கோட்டையான தஞ்சைமாவட்டத்தின் நிலங்கள் மட்டுமல்ல; நிலங்களில் வேலை செய்யும் விவசாயக் கூலிகளின் உயிர், உடைமை, மானம் எல்லாமே நிலப்பிரபுக்களின் வசம் தான் இருந்தன. விவசாயக் கூலிகளின் ஒரு சிறு முணுமுணுப்பு கூட பிரபுவின் காதுகளில் இடியோசையாக விழும். முணுமுணுத்தவரின் வாழ்க்கை மிதிக்கப்படும். மண்ணோடு மண்ணாக நசுக்கப் படும்.

அப்படித்தான் அன்றொருநாள் அது நடந்தது.

விவசாயக் கூலிகள் முணுமுணுக்க ஆரம்பித்தனர். பிரபுவின் மேலான காதுகளை முணுமுணுப்பு எட்டிவிட்டது. நமது உடைமை நமக்கு எதிராக முணுமுணுப்பதா? பிரபுவால் தாங்கிக் கொள்ள முடியாமல் போகிறது.

அந்த விவசாயக் கூலிகள் மீதான தண்டனை வழக்கம்போல் கட்டவிழ்த்து விடப்படுகிறது.

●●

நிர்வாணப்படுத்தப்பட்ட அவளை, அவளின் கணவனே சவுக்கால் அடிக்க வேண்டும். இதுபட்டப் பகலில் பலர் முன்னிலையில் நிகழ்த்தப் படவேண்டும்.

●●

விவசாயியின் மனைவியை நிர்வாணப் படுத்துகிறார் பிரபு. நிர்வாணப்படுத்தப்பட்ட அவளை, அவளின் கணவனே சவுக்கால் அடிக்க வேண்டும். இதுபட்டப் பகலில் பலர் முன்னிலையில் நிகழ்த்தப் படவேண்டும். இதுதான் தண்டனை. இதனாலும் பண்ணையாரின் ஆத்திரம் தீரவில்லை. அந்தப் பெண் பண்ணையாரின் வீட்டில் நிர்வாணமாக அடைக்கப்படுகிறாள்.

பிரபு வெளியே போயிருந்த சமயம் பார்த்து விவசாயக் கூலிகள் ஒன்று சேர்ந்து அந்த இளம் பெண்ணைப் பிரபுவின் சிறையிலிருந்து விடுதலை செய்து கொண்டு வருகிறார்கள்.

1968 டிசம்பர் 25. மாலை நேரம்.

"நம்ம டீக்கடை முத்துசாமியைப் பண்ணையார் ஆளுங்க கடத்திகிட்டுப் போயிட்டாங்களாம்..."

வெண்மணி கிராமத்தில் இந்தச் செய்தி காட்டுத் தீ போல எங்கும் பரவியது. கூலி விவசாயிகள் கூடினர்; கொதித்தனர்.

"முத்துசாமியை எங்கே வச்சிருக்காங்க?..."

நாலா பக்கமும் ஆட்கள் தேடி ஓடினர். இனி என்ன நடக்கப் போகி

www.padippakam.com



## உதயை மு.வீரையன்

றதோ என்று எல்லோர் முகத்திலும் கேள்விக்குறி. எங்கும் பரபரப்பு! பதற்றம்!

கடத்திச் செல்லப்பட்ட முத்துசாமி, மிராசுதார் இராமானுசம் வீட்டில் ஓர் இருட்டறையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பது தெரிந்தது. மக்கள் திரண்டனர். பூட்டியிருந்த வீட்டின் கதவு உடைக்கப்பட்டது. முத்துசாமி விடுதலை செய்யப்பட்டார்.

செய்தியறிந்த மிராசுதார்கள் சினம் கொண்டனர். ஆண்டாண்டு காலமாக அடங்கிக் கிடந்த 'பள்ளு பறை' களுக்கு இந்தத் துணிச்சல் எங்கிருந்து 'வந்தது? சாணிப் பாலுக்கும், சவுக்கடிக்கும் பயந்து நடுங்கிக் கிடந்தவர்கள் இப்போது கொடியைத் தூக்கிக் கொண்டு, கோஷம் போட்டுக்கொண்டு ஊர் வலம் போவதா?

இதற்கொரு முடிவு கட்ட வேண்டும். மிராசுதார்கள் கூடினர். இரிஞ்சியூர் கோபாலகிருஷ்ண நாயுடு தலைமை. சுற்றிலும் அடியாட்கள்! பாதுகாப்புக்குப் போலீசார்! அப்போதே திட்டம் ஒன்று தீட்டப்பட்டது.

கீழத் தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நாகை வட்டங்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களே கூலி விவசாயிகளாக இருந்தனர். தீண்டாமையும், சாதிவெறியும் தலைவிரித்தாடிய அக்காலத்தில் அவர்கள் ஒவ்வொரு நாளும் செத்துச் செத்துப் பிழைத்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சி அவர்களுக்காக 'விவசாய சங்கம்' அமைத்தது. அவர்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தது. இயக்கத்தின் நிர்ப்பந்தம் காரணமாக முத்தரப்பு மாநாடு கூடி அறுவடைக் கூலியும், உழுவடைக் கூலியும் நிர்ணயிக்கப்பட்டது. இதனால் அரசும், மிராசுதார்களும் ஆத்திரம் கொண்டனர்.

செங்கொடி இயக்கத்திற்குப் போட்டியாக 'நெல் உற்பத்தியாளர் சங்கம்' அமைக்கப்பட்டது. 'இளைஞர் படை' என்ற பெயரில் குண்டர்கள் திரட்டப்பட்டனர். சாதி, மதம், கட்சிகளை மறந்து நிலப் பிரபுக்கள் ஒரே அணியில் நின்றனர். மாங்குடி கிருஷ்ணமூர்த்தி அய்யரும், கூத்தாநல்லூர் முகமது இஸ்மாயிலும், இரிஞ்சியூர் கோபாலகிருஷ்ண நாயுடுவும் ஒன்றுபட்டனர்.





படிப்பகம்

www.padippakam.com

மாவட்டம் முழுவதும் மிராசுதார்களின் பயிர்களுக்குப் பாதுகாப்பு என்ற பெயரால் ஆயுதம் தாங்கிய போலீஸ் படை குவிக்கப்பட்டது. அவர்கள் ஆதரவோடு நிலச் சுவான்தார்களின் கொலை வெறிப் படை அடுத்தடுத்து மூன்று கொலைகளைச் செய்தது. சிக்கல் இளைஞர் பக்கிரிசாமி, கேக்கரை இராமச்சந்திரன், இரிஞ்சியூர் சின்னப்பிள்ளை களப்பலியானார்கள்.

ஆதமங்கலம் கிராமத்தில் போலீசார் சேரிக்குள் புகுந்து நான்கு தாழ்த்தப்பட்ட பெண்களைப் பாலியல் வன்முறை செய்தனர். ஆவராணி கிராமத்தில் விவசாயப் பெண்களுக்கும், போலீசுக்கும் மோதலே நடந்தது.

“செங்கொடியை இறக்கு. உற்பத்தியாளர் கொடியை ஏற்று. இல்லாவிட்டால் வேலையும் இல்லை. உயிரும் இல்லை...”

மக்கள் மிரட்டப்பட்டார்கள். கிராமங்கள் பயத்தால் நடுங்கின. நெல் உற்பத்தியாளர் சங்கத்தில் சேர மறுத்தவர்களுக்குக் கட்டாயமாக அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகை கட்ட மறுத்ததால் தான் வெண்மணியில் தேநீர்க்கடை நடத்தி வந்த முத்துசாமி கடத்தப்பட்டார்.

அவனையும் விடுதலை செய்து விட்டார்களே! நிலப்பரப்புக்களுக்குக் கோபம் வராதா? அதனால்தான் அவர்கள் இறுதி முடிவு எடுத்தனர்.

இரவு நேரம்: 9 மணியிருக்கலாம். எங்கும் இருள். வெண்மணி கிராமத்தை நோக்கி விரைந்து வந்தது போலீஸ் வண்டி. போலீசார் கைது செய்ய வருகிறார்கள் என்று எண்ணிய விவசாய சங்கத்தினரும், கூலித் தொழிலாளர்களும் இருளில் மறைந்தனர். வயல் வெளியில் ஓடி ஒளிந்து கொண்டனர்.

வண்டியிலிருந்து இறங்கிய கலகக் கும்பல், துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே சேரிக்குள் நுழைந்தது. ஆண்கள் எல்லாம் தப்பி விட்டார்கள் என்பதை அறிந்ததும் ஆத்திரம் கொண்டது. தீவட்டி ஏந்திய அடியாட்கள் அரிவாள், ஈட்டி, கோடரி, குண்டாந்தடி, நாட்டுத் துப்பாக்கிகளைக் கொண்டு வெறித் தனமாகத் தாக்கினர்.

சேரியில் எஞ்சியிருந்த விவசாயிகள் எதிர்த்துப் போராடினர். உயிருக்குப் போராடிய அவர்களில் 13பேர் காயமுற்று விழுந்தனர். குண்டர்களில் பக்கிரியின் தலை

விடுதலையாகி வெளியே வந்த கோபாலகிருஷ்ண நாயுடுவுக்குப் பிற பண்ணையார்கள் சிறப்பாக வரவேற்பு கொடுத்து மகிழ்ந்தனர். அப்படி வரவேற்றவர்களில் முக்கியமானவர்தான் இன்று தாழ்த்தப்பட்ட மக்களின் காவல் தெய்வமாகச் சித்திரிக்கப்படும் கருப்பையா மூப்பனார்! வரலாறு பல விபரீத திருப்பங்களைக் கொண்டதுதான்.

சாய்ந்தது. சேரி போர்க்களமானது. இரத்தத்தால் குளித்தது.

குண்டர்கள் கையோடு கொண்டு வந்திருந்த பெட்ரோலை ஊற்றிக் குடிசைகளைக் கொளுத்தினர். தோழர் இராமையாவின் குடிசை ஒரு ஓரமாக இருந்தது. உயிருக்குப் பாதுகாப்பு தேடி அந்தக் குடிசைக்குள் ஓடி ஒளிந்தனர். இரத்தப் பசி எடுத்த குடிகாரக் குண்டர்கள் அந்தக் குடிசையின் கதவை வெளியே மூடித் தாளிட்டுவிட்டு எண்ணெய் ஊற்றி எரியூட்டினர்.

“திறந்து விடு! எங்களைக் கொல்லாதே!...”

தப்ப முயன்ற பெண்களையும், குழந்தைகளையும் அடித்துக் குடிசை நெருப்பில் தூக்கிப் போட்டனர். கொழுந்து விட்டெரிந்த நெருப்புக்குள் அந்த அப்பாவிகளின் பரிதாபமான கூக்குரல்கள் அடங்கிப் போயின.

மறுநாள் சோகத்தைச் சுமந்து கொண்டு பொழுதும் விடிந்தது. வயல்காட்டில் ஒளிந்து கிடந்தவர்கள் ஓடி வந்தனர். குடிசைக்குள் 44 உடல்கள் கருகிக் கிடந்தன. இவர்களில் 20 பேர் பெண்கள், 19 பேர் சிறுவர்கள், 5 பேர் மட்டுமே ஆண்கள்!

இது தொடர்பாக இரண்டு வழக்குகள்: மிராசுதார்களின் அடியாள் இறந்ததற்காக தோழர் கோபால் உள்பட 22 விவசாயத் தொழிலாளர்கள் மேல் ஒரு வழக்கு. இதில் கோபாலுக்கு ஆயுள் தண்டனை. இன்னொருவருக்கு 5 ஆண்டுகள் சிறை. மற்றும் 6 பேருக்கு 2 ஆண்டுகள் சிறை.

இரண்டாவது வழக்கில் கோபால கிருஷ்ண நாயுடுவுக்கும், அவரைச் சேர்ந்த 7 பேருக்கும் 10 ஆண்டுகள் சிறை. ஆனால், இந்த வழக்கு உயர்நீதிமன்றம் சென்ற போது...

'கோபாலகிருஷ்ண நாயுடுவும், அவருடன் இருந்தவர்களும் மிராசுதார்கள். கோடீசுவரர்கள். உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். செல்வச் சீமான்களான இவர்கள் இப்படிப்பட்ட இழிவான செயல்களை ஒரு போதும் செய்திருக்க வாய்ப்பே இல்லை. எனவே, இவர்களை விடுதலை செய்கிறேன்' என்று தீர்ப்பு எழுதியது உயர்நீதிமன்ற நீதிபதியின் பேனா.

விடுதலையாகி வெளியே வந்த கோபாலகிருஷ்ண நாயுடுவுக்குப் பிற பண்ணையார்கள் சிறப்பாக வரவேற்பு கொடுத்து மகிழ்ந்தனர். அப்படி வரவேற்றவர்களில் முக்கிய மானவர்தான் இன்று தாழ்த்தப்பட்ட மக்களின் காவல் தெய்வமாகச் சித்திரிக்கப்படும் கருப்பையா மூப்பனார்! வரலாறு பல விபரீத திருப்பங்களைக் கொண்டதுதான்.



படிப்பகம்

எந்தப் பத்திரிகையைக் கையிலெடுத்தாலும் இதைப்பற்றிய விளம்பரம் கண் சிமிட்டுகிறது.

'சிறிது சிரிப்போமா? உடனே பேசுங்களேன்'

'தமிழ், தெலுங்கு, மலையாளம் எந்த மொழியில் வேண்டுமானாலும் பேசுவதற்கு நாங்கள் கம்பெனி கொடுப்போம். டயலைச் சுழற்றுங்கள்.'

'அந்தரங்கமாய்ப் பேசலாம். எங்களைக் கூப்பிடுங்கள்.'

சபலசித்தர்கள் மனத்தில் லேசான குறு குறுப்பு. பேசித் தான் பார்ப் போமே. உடனே திருட்டுத் தனமாக இதில் உள்ள நம்பர்களில் ஒன்றைச் சுழற்றுகிறார்கள். அதைத் தொடர்ந்து தலை சுழன்று போகிற மாதிரி மயக்கும் மொழியில் ஒரு இளம் பெண் கிளுகிளுப்பூட்டிப் பேசுகிறாள். இவர்கள் எதிர் முனையில் பேசும் பெண்ணைப் பற்றிய கனவுகளிலும், கற்பனைகளிலும் மிதந்து கொண்டே நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டே போகிறார்கள்.

'உங்க பேரு?'

'ராஜா'

'உங்களுக்குக் கல்யாணம் ஆயிடுச்சா?'

'ஓ!'

'அப்ப உங்க முதலிரவு பத்திச் சொல்லுங்களேன்'

"........"

"பேரு ராஜான்னு சொல்றீங்க. ராஜா மாதிரி பேசுங்க. ஏன் வெக்கப்படறீங்க. முதலிரவில என்னென்ன செஞ்சீங்க. சொல்லுங்க. கம்பங்காட்டுல பாய்ஞ்ச மாதிரி பாய்ஞ்சீங்களா, இல்லே, நிறுத்தி... நிதானமா...'

இந்த ரீதியில் போகும் பேச்சைச் சபல சித்தர்களால் எப்படித் துண்டிக்க முடியும்? பேசிக்கொண்டே போகிறார்கள். ஒருநாள், மறுநாள்... அப்புறம் ஒவ்வொரு நாளும். தொலைபேசிக் கட்டணப் பட்டியல் இவர்கள் கதவைத் தட்டும் போது இந்த உலகமே சுழல்கிறது இவர்களுக்கு. சர்வ சாதாரணமாக ஐம்பதாயிரம், எழுபதாயிரம் என்று பட்டியல் அறிவிக்கிறது. அப்போதுதான் இந்த மனிதர்கள் அதிர்ச்சியடைகின்றனர். தாங்கள் சரியாக ஏமாற்றப்பட்டதை உணர்ந்து மனமுடைந்து போகின்றனர்.

மன உளைச்சலும் அவமானமும் பிடுங்கித்தின்ன அடுத்தது என்ன செய்வது என்று தெரியாமல் - ஊமையன் கனவு கண்டது போல் - வெளியேயும் சொல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

தற்போது இப்படிப்பட்ட தொலைபேசிக் கலாசாரம் ஒன்று தமிழ்நாட்டை ஆக்டோபஸ் போலக் கவ்விக் கொண்டிருக்கிறது.









## சிரித்துச் சிரித்து என்னைச் சிறையிலிட்டாய்...

பெரியவர்கள் ஏமாறுவது போக, கல்லூரி மாணவர்களும் இந்த வலைப் பின்னலில் சிக்கிக் கொள்கிறார்கள். தொலைபேசியில் பேசும் பெண்ணின் குரலே இத்தனை இனிமை என்றால் பேசுகிற பெண் நேரில் எப்படி இருப்பாள்? சிம்ரன், ரம்பா, ஜோதிகா போன்ற கனவுப் படிமங்களால் மனம் பரவசமடைந்து மணிக்கணக்கில் குலாவுகிறார்கள். இது தெரியாத பெற்றோர் தங்களுக்குத் திடீரென்று வரும் 20,000/-, 30,000/- பில்களால் ஆடிப்போய், தொலைபேசித் துறைக்குப் போய்ச் சண்டை போடுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com





# பண்டையக் கிரேக்கர்களின் எளிய பொருள்முதல்வாதமும் இயக்கவியல்வாதமும் - 2



அணுக்களின் இயக்கத்தின் போது அவை தமக்குள் ஒன்றிணைந்து நெருப்பு, நீர், காற்று, மண் ஆகிய எல்லாக் கலப்புக்களையும் உண்டாக்குகின்றன. டெமாக்ரிட்டஸின் கருத்துப்படி அணுக்கள் - இருத்தல், வெற்று வெளியோ - சூனியம்.

மேற்கூறியவற்றால் தெரிவது போல, சடப் பொருள் நிலவும் பொது வடிவங்களான இயக்கம், இடைவெளி, நேரம் போன்றவற்றை வேறு படுத்திக் காண டெமாக்ரிட்டஸ் முயன்றார். இவ்வாறு செய்கையில் அவர் அணுக்கள் இல்லாமல், அதாவது எவ்வகைச் சடப் பொருளும் இல்லாமல் இடைவெளி நிலவ முடியும் என்ற தவறான கருத்துக்கு இடம் கொடுத்துவிட்டார். எனினும், இதுவும் வேறு அனேகத் தவறான அனுமானங்களும் கொண்டது ஆயினும், டெமாக்ரிட்டஸின் அணுக் கொள்கை விஞ்ஞானத்தின் வழிகாட்டும் வடமீனாகப் பல நூற்றாண்டுகளாகத் தொண்டாற்றியது. அணுக்கள் பற்றிய தற்காலப் போதனை டெமாக்ரிட்டஸின் கருத்திலிருந்து சாராம்சத்தில் வேறானது என்பது கூறாமலே விளங்கும். ஆனாலும் பொருளியல் அணுக்கள் புறநிலையாக நிலவுவது பற்றிய அவரது பொதுத் தத்துவ முடிவு விஞ்ஞானம், தத்துவம் இவற்றின் வரலாற்றில் மிகப் பெரிய பங்கு ஆற்றியது.

அறிதல் பற்றிய பொருள்முதல்வாதச் சித்தாந்தத்தை டெமாக்ரிட்டஸ் விரிவுபடுத்தினார். புறநிலையாக நிலவும் அணுக்கள் உணர் உறுப்புக்கள் மீது செயல்படுவதன் விளைவே மனிதனது உணர்வு ஆகும் என அவர் கருதினார். ஆனால் இந்தச் செயல்பாட்டை அவர் எளிமைப்படுத்திப் புரிந்துகொண்டார். அவரது எண்ணப்படி ஒவ்வொரு பொருளிலிருந்தும் அணுக்களின் பிரவாகங்கள் எல்லாத் திசைகளிலும் பெருகுகின்றன. இந்த அணுக்கள் உணர் உறுப்புக்களின் ஊடாக உட்புகுந்து புலனுணர்ச்சிகளை ஏற்படுத்துகின்றன. பண்படாத நிலையிலுள்ள இந்த எண்ணத்தில் ஓர் ஆழ்ந்த கருத்தும் அடங்கியிருக்கிறது. பொருளியலான இயற்கை புறநிலையாக நிலவுகிறது. நமது சிந்தனைகள் புறநிலைப் பிரபஞ்சத்தையே பிரதிபலிக்கின்றன என்பது அந்தக் கருத்து.

நமது பார்வை, கேள்வி, முகர்வு, சுவை, தொடுதல் ஆகிய உணர்வுகளுக்கு உரிய உறுப்புக்கள் சில பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் மட்டுமே புரிந்துகொள்ள வல்லவை, எல்லாவற்றையும் அல்ல என்ற அறிவை டெமாக்ரிட்டஸ் அணுகினார். மனிதனால் காணவோ, தொட்டுணரவோ, சுவையால் அறியவோ முடியாத பொருள் பிரபஞ்சத்தில் உள்ளது, அது மிக மிகச் சொற்பமானது என்று அவர் சொன்னார். இம்மாதிரி விஷயங்களை மனிதன் அறிந்துகொள்வது எவ்வாறு? இந்தக் கேள்விக்கு விடையளிக்கையில் டெமாக்ரிட்டஸ் பகுத்தறிவின் திறனை மேற்கோள் காட்டினார். புலன்களின் அறிவுக்கு அகப்படாமல் நழுவிச் செல்பவை யாவும் பகுத்தறிவால் வெளிப்படுத்தப்படக் கூடும், வெளிப்படுத்தப்படவேண்டும். உதாரணமாக அணுக்கள் பற்றிய அறிவு பெறுவது சிந்தனைத் திறனின் உதவியாலேயே, அறிவுக்கண்களாலேயே சாத்தியம் ஆகும். டெமாக்ரிட்டஸின் கருத்திற்கிணங்க, இயற்கையின் மர்மங்களைச் சிந்தனைத் திறன் கொண்டே அறியமுடியும். பகுத்தறிவு என்பது அறிதலுக்கான மிகச் செவ்விய கருவி, மிக நுண்ணிய அறிதல் உறுப்பு ஆகும்.

சிறிது காலத்துக்கு முன்புதான் உதித்திருந்த பொருள் முதல்வாத, இயக்க இயல்வாதப் பிரபஞ்ச அறிவு, விஞ்ஞானம், நடைமுறை இவற்றின் விவரங்களை ஆதாரமாகக் கொண்டு பிரபஞ்சத்தின் அந்தரங்க மர்மங்களுக்குள் இவ்வாறு படிப்படியாக மேலும் ஆழ்ந்து புகுந்து மக்களுக்கு மெய் ஞானம் புகட்டியது.

கருத்துமுதல்வாதப் பிரபஞ்சக் கண்ணோட்டத்தின் ஆதரவாளர்கள் பொருள்முதல்வாதத்தின் வளர்ச்சியை மிகத் தீவிரமாக எதிர்த்தார்கள். கி.மு.5-4ம் நூற்றாண்டுகளில் வர்க்க முரண்பாடுகள் தொன்மைச் சமூகத்தில் மிகக் கடுமையாக வெளிப்பட்டன. அடிமைச் சொந்தக்கார ஜனநாயகத்துக்கும் அடிமைச் சொந்தக்கார உயர்குடிமக்களாட்சிக்கும் இடையே அரசியல் அதிகாரத்திற்கான போராட்டம் கூர்மையாயிற்று. கருத்துமுதல் வாதத்துக்கும் பொருள்முதல் வாதத்துக்கும் இடையே போராட்டம் அந்த நூற்றாண்டுகளில் சிறப்பாகக் கொடிய உக்கிரத்துடன் நடந்தது.

தொன்மைக் கிரீஸில் கருத்துமுதல்வாதத் தத்துவத்துக்கு மிகப் பெரும்



படிப்பகம்

www.padippakam.com

பிரதிநிதியாகத் திகழ்ந்தவர் பிளேட்டோ (Plato) (கி.மு.427-347). இவர் அடிமைச் சொந்தக்கார உயர் குடியில் பிறந்தவர். அடிமைச் சொந்தக்கார அரசின் பிற்போக்கு ஆட்சி முறைக்குச் சித்தாந்த ஆதாரத்தை இவர் கருத்துமுதல்வாதத்தில் தேடினார். பொருள்முதல்வாதத்துக்கு எதிரான போருக்கு இவர் பகிரங்கமாகத் தலைமை தாங்கினார். பொருள்முதல் வாதத் தத்துவத்தின் பாதிப்பினால் இளைஞர்கள் நாஸ்திகர்கள் ஆகிவிடுவதாக முறையிட்டார்.

பிளேட்டோ புறநிலைக் கருத்துமுதல்வாத முறையை வகுத்தார். புலனுணர்வுக்கு உட்படும் பொருள்கள் கொண்ட பிரபஞ்சமும் கருத்துக்களின் பிரபஞ்சமும் அதாவது பொருள்களின் பருமையற்ற நுண் வடிவங்கள் கொண்ட பிரபஞ்சமும் எதிர் எதிராக நிலவுவதாக அவர் கருதினார். கருத்துக்கள் புறநிலையாக, இயற்கைமீதும் பொருள்கள் மீதும் சார்பு இன்றி நிலவுகின்றன என அவர் வலிந்துரைத்தார். எதார்த்தப் பொருள்கள் கொண்ட பிரபஞ்சத்தை நிழல்கள் கொண்ட பிரபஞ்சம் எனப் பிளேட்டோ அழைத்தார். பொருள்கள் கருத்துக்களின் மங்கிய பிரதிகளே, நிழல்களே என அவர் கூறினார். பிளேட்டோவின் கொள்கைப் படி, மனிதனால், புரிந்து கொள்ளப்படும் இயற்கை எந்த அளவுக்குக் கருத்துப் பிரபஞ்சத்தின் உறுப்பு அம்சமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு மட்டுமே உண்மையானது. கருத்துக்கள் பொருள்களின் நித்தியமான முன் மாதிரிகள். அவை சிந்திக்க மட்டுமே படுகின்றன, காணப்பட முடியாது. அவற்றின் நிழல்கள் - புலப்படும் பொருள்கள். காணப்படுகின்றன, ஆனால் உண்மையான இருத்தல் அவற்றுக்குக் கிடையாது.

மனித உள்ளம் அல்லது ஆன்மா உடலின் சார்பு இன்றியே, புலனறிவுக்கு அப்பாற்பட்ட கருத்து பிரபஞ்சத்தில் நிலவுகிறது. அது பொருளியலற்று, நித்தியமானது-இவ்வாறு போதித்தார் பிளேட்டோ. ஆன்மாவின் அமரத்தன்மை பற்றிய கற்பனை இவ்விதமாகப் பிரமாணப் படுத்தப்பட்டது. ஆன்மா தற்காலிகமாக மட்டுமே மனிதனில் குடிபுகுவதாகவும் பிறகு அனந்தம் என்னும் அகாதத்துக்குத் திரும்பிவிடுவதாகவும் கூறப்பட்டது.



தத்துவம் என்பது அறிவு ஜீவிகளின் அலமாரிகளுக்கல்ல; வாழ்க்கையை மேலும் அழகுபடுத்த...

பிளேட்டோவின் தத்துவம் ஒருங்கிசைந்த கருத்துமுதல் வாதம் ஆகும். கருத்தியலானதைப் பொருளியலானதிலிருந்தும், எண்ணத்தைச் சடப்பொருளிலிருந்தும், பொதுக் கருதுகோள்களை (தானேயான "பழம்" தானேயான "வீடு") எதார்த்தப் பொருள்களிலிருந்தும் அது துணித்துவிடுகிறது. பிரபஞ்சம் நிலவுகிறது, அதன்மீது சார்பு இன்றியே பிரபஞ்சம் பற்றிய கருத்தும் கடவுளும் நிலவுகின்றன என்றும், மனிதன் நிலவுகிறான், அவன்மீது சார்பு இல்லாமலே ஆன்மா நிலவுகிறது என்றும் அது முடிவுக்கு வருகிறது. கருத்துமுதல்வாதம் மதத்துடன் எவ்வாறு சேர்ந்துகொள்கிறது என்பது இந்த உதாரணத்தில் துலக்கமாகப் புலப்படுகிறது. பிளேட்டோவும் அவருடைய சீடர்களும் கடவுளை "டெமியுர்க்" அதாவது படைப்பு முதல்வன், பிரபஞ்சத்தை, இயற்கையைச் சிருஷ்டித்தவன் எனக் கருதினார்கள்.

● ●

புலன்கள் எதார்த்தத்தைப் பற்றிய தகவல்களை மனிதனுக்குத் தருவதில்லை எனப் பிளேட்டோ எண்ணினார். அவருடைய அபிப்பிராயப்படி நித்தியமான கருத்துக்களின், புலன்களுக்கு அப்பாற்பட்ட சாம்ராஜ்யம் பற்றிய ஞானமே மெய்ஞ்ஞானம்.

● ●

சுற்றியுள்ள பிரபஞ்சத்தை மக்கள் எதார்த்தமானது எனக் கருதிவிடலாகாது என்றும், பொருளியல் பிரபஞ்சத்தின் வஸ்துக்களில் தன்மையை அவர்கள் தேடக்கூடாது என்றும் உண்மையான, கருத்தியல் இருத்தல் எனப்படுவதை அறிய அவர்கள் முயல வேண்டும் என்றும் அதன் பொருட்டு "தெய்வீக ஒழுங்கை" அவர்கள் தியானிக்க வேண்டும் என்றும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதே பிளேட்டோவின் கருத்துமுதல்வாதத் தத்துவத்தின் நோக்கம். புலன்கள் எதார்த்தத்தைப் பற்றிய தகவல்களை மனிதனுக்குத் தருவதில்லை எனப் பிளேட்டோ எண்ணினார். அவருடைய அபிப்பிராயப்படி நித்தியமான கருத்துக்களின் புலன்களுக்கு அப்பாற்பட்ட சாம்ராஜ்யம் பற்றிய ஞானமே மெய்ஞ்ஞானம். புலன்களின் அறிவு ஆற்றும் பங்கை, கோட்பாடு, அனுபவம் ஆகியவற்றின் பங்கை இழிவுபடுத்த அவர் முயன்றார். நமக்கு உண்மையைக் காட்ட அவற்றால் இயலாது என்றும் ஆன்மா ஒன்றுதான் புலன்களுக்கு அப்பாற்பட்ட பிரபஞ்சத்தை உட்புகுந்து அறிய வல்லது என்றும் அவர் கூறினார். எதார்த்தமான அறிதல் செயல்முறை பிளேட்டோவின் கற்பனையில் இவ்வாறு திரிபான வடிவம் பெற்றது.

பிளேட்டோவின் பிற்போக்குக் கருத்துக்கள் கருத்துமுதல் வாதத் தத்துவ அறிஞர்களால் சென்ற காலத்தில் விரிவாகப் பயன்படுத்தப்பட்டன. இம்மாதிரிக் கருத்துக்களின் பல்வகை வேறுபாடுகள் தற்காலப் பூர்ஷ்வாத் தத்துவத்திலும் மிக அடிக்கடி எதிர்ப்படுகின்றன.

பிளேட்டோவினது புறநிலைக் கருத்துமுதல்வாதத்தின் பற்பல அடிப்படைக் கருத்துக்களின் ஆதாரமற்ற தன்மையைச் சுட்டிக் காட்டினார் மாபெரும் தொன்மைக் கிரேக்கச் சிந்தனையாளர் அரிஸ்டாட்டில் (Aristotle) (கி.மு.384-322). ●



படிப்பகம்